

# சிறந்த எதிர்காலத்திற்கான திட்டமிடல்

ஆண்டறிக்கை 2014

குருணாகல் ப்ளான்டேஷன் லிமிற்றற்,
பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சு



# சிறந்த எதிர்காலத்திற்கான திட்டமிடல்

எதிர்கால சந்ததியினரின் வாழ்வில் முதலீடு செய்யும் சமூக பொறுப்புணர்வு மிக்க நிறுவனம் என்ற நெகிழ்திறன் நற்பெயரை கொண்டுள்ள குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் எப்பொழுதும் தாம் வழங்கும் உற்பத்திகளின் வழங்கலில் புதுமைகளை புகுத்தி வருகின்றது. புதுமைபுகுத்தில் அனுகூலங்களை பெற்று நிறுவனத்தில் வரலாற்றிலேயே நாம் மிகச்சிறந்த ஆண்டினை பூர்த்தி செய்துள்ளோம். தொழிற்துறையில் இலாபமீட்டும் எமது அர்ப்பணிப்பு தொடரும் அதேவேளை எதிர்கால சந்ததியினருக்கும் பயனளிக்கும் நடத்தையிலும் ஈடுபடுகின்றோம். மரக்கன்றுகளை நட்டுவரும் வரும் எதிர்கால சந்ததிக்காக சிறந்த எதிர்காலம் காத்திருக்கின்றது என்ற நம்பிக்கையை கொண்டுள்ளோம்.

# பொருளடக்கம்

எம்மைப் பற்றி 2

எமது நோக்கு, செயற்பணி மற்றும் முக்கிய விழுமியங்கள் 3

நிதிசார் முக்கிய குறிப்புகள் 4

மைல்கற்கள் 6

சாதனைகள் 8

தலைவரின் மீளாய்வு 12

பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு 16

பணிப்பாளர் சபை 20

சிரேஷ்ட முகாமைத்துவம் 24

பிராந்திய அத்தியட்சகர்கள் 25

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் ஆய்வு 30

ஸ்தீரதன்மை பற்றி ஆய்வு 36

இடர் முகாமைத்துவம் 41

கூட்டுறவு மேலாண்மை 43

# நிதி அறிக்கைகள்

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 46

பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றி கூற்று 49

சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை 50

கூட்டிணைக்கப்பட்ட வருமானக்கூற்று 51

நிதியியல் நிலமைக் கூற்று 52

பங்குமூலதன மாற்றங்களின் கூற்று 53

காசுப்பாய்ச்சல் கூற்று 54

கணக்கீட்டுக் கொள்கைகள் 56

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 68

பத்தாண்டுகால சாராம்சம் 88

வருடாந்தப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் 90

பதிலி நியமன படிவம் 91

# எம்மைப் பற்றி

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் (KPL) வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள நிறுவனமானது 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முழுமையான அரச உடமைக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவுசெய்யப்பட்டது. மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபையினால் நிருவகிக்கப்பட்டு வந்த சில தோட்டங்கள் அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் 1987 இன் 23 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அரச உரித்துடைய நிறுவனமாக மாற்றப்பட்டது. இலங்கை அரசாங்க திறைசேரியின் செயலாளரின் தனிபங்குடைமை நிறுவனமாக செயற்படும் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் அதன் தங்க பங்குதாரர் ஆகும். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 80, தம்புள்ளை வீதி, குருணாகலையில் அமைந்துள்ளது.

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஏறக்குறைய 13 வருடகாலமாக தனியார்துறையினால் உரியமுறையில் நிருவகிக்கப்படவில்லை. இதனால் பொருளாதாரரீதியில் பயனற்று வீழ்ச்சியடைந்த காரணத்தினால் அரசாங்கம் இந்தக் கம்பனியின் முகாமைத்துவத்தினை 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் செயல் நோக்கின் கீழ் பொறுப்பேற்பதற்கு தீர்மானித்தது. அதன் பின்னர் இது பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் கீழ் இயங்கியதுடன், புதிய அரசாங்கத்தின் கீழ் பல புதிய சீராக்கல் மாற்றங்களுடன் நாம் 2015 ஜனவரி 18 தொடக்கம் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் மீள் இயங்க ஆரம்பித்துள்ளது.

நிறுவனமானது தெங்கு, இறப்பர் மற்றும் துணை பயிர்களின் பயிர்செய்கை, உற்பத்தி, சுத்திகரிப்பு பல்வேறு விவசாய உற்பத்திகள் மற்றும் விற்பனை மூலமான நிர்வாகத்தினை கொண்டுள்ளது.

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் 5,244.58 ஹெக்டயர் பரப்புடைய பல்வேறு விவசாய காலநிலைகளை கொண்ட 08 பிராந்திய பெருந்தோட்டங்களை குருணாகல், கம்பஹா மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் கொண்டுள்ளது. ஒவ்வொரு வெருந்தோட்டம் சிறு பிரிவுகளாக 02 தொடக்கம் 03 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியவையாக உள்ளன.

# தூர நோக்கு

தென் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் முன்மாதிரியான பெருந்தோட்ட விவசாய வர்த்தக முகாமைத்துவக் கம்பனியாகத் திகழ்தல்

# செயற்பணி

சகல அக்கறையுடைய தரப்புகளினதும் மற்றும் பாரியளவில் நட்டினதும் நன்மை கருதி சுற்றாடல் நேய, சமூகரீதியில் பொறுப்புக் கூறக்கூடியவொரு விதத்தில் இயற்கை வளங்களையும், பௌதீக வளங்களையும் மற்றும் மானிட வளங்களையும் மிகப் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதினூடாக பெருந்தோட்ட விடயங்களையும் ஏனைய விவசாய வர்த்தக விடயங்களையும் நிருவகித்தல்

# இணைப் பெறுமதிகள்

**சிறந்த தொழில் தருநர்:** தரம், உற்பத்தித்திறன், தொழில் முயற்சியாண்மை, பெறுமான உருவாக்கம், இலாபத்தன்மை, சுற்றாடல்நேயம் மற்றும் கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு என்பவற்றில் ஒருமுகப்படுதல்.

**தரமான வழங்குநர்:** நாம் மேற்கொள்ளும் சகல விடயங்களிலும் மிக உன்னத வாடிக்கையாளர் திருப்தியையும் தொடர்ச்சியான மேம்பாட்டையும் பேணுதல்,

**உற்பத்தி திறன்:** உள்ளீட்டு வள அலகு ஒன்றுக்கான அனுகூல உற்பத்தி திறன், ஹெக்டெயர் ஒன்றுக்கான ஆகக்கூடிய அறுவடை, நிலை பெறுதகு அடிப்படையிலான அனுகூல நிலப்பாவனை என்பவற்றை அடைதலும் வீணாதலைக்குறைத்தலும்.

**தொழில் முயற்சியாண்மை:** சகல நேரங்களிலும் புதிய அணுகு முறைகளை துல்லியமாக புத்துயிர்ப்பித்தல்

**பெறுமான உருவாக்கம்:** வர்த்தகச் சூழல்சார் தேவைகளின் மாற்றத்திற்கு தொடர்ச்சியாகப் பதிலீடு செய்தல்,

**இலாபமுயற்சியாண்மை:** உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்ந்த உற்பத்திகள் என்பவற்றுக்கான அனுகூலத் தேறிய சராசரி ஆகக் குறைந்த சாத்தியமான உற்பத்தி ஆகு செலவை அடைதல்.

**சுற்றாடல் நேயம்:** சுற்றாடலுக்கு தீங்கின்றி அல்லது குறைந்த பாதிப்புடன் சுற்றாடலுக்கு இசைவடைந்து வளங்களைப் பயன்படுத்துதல்

**சமூகப் பொறுப்பு:** மக்களையும், சுற்றாடலையும் பாதுகாத்தலும் நல்லாட்சியை மதித்தலும்.

# நிதிசார் முக்கிய குறிப்புகள்

| | | 2014 | 2013 | மாறுபாடு % |
|---|---|---|---|---|
| **முக்கிய செயற்பாட்டு குறிப்புகள்** | | | | |
| **தேங்காய்** | | | | |
| உற்பத்தி | மடங்குகளின் எண் | **16,701,797** | 13,000,150 | 28.47 |
| தேங்காய்களின் விற்பனை | மடங்குகளின் எண் | **16,777,304** | 13,010,454 | 28.95 |
| NSA (தலா 1000 த்திற்கு) | ரூ. | **30,647.16** | 30,926 | (0.90) |
| COP (தலா 1000 த்திற்கு) | ரூ. | **15,984** | 16,386 | (2.45) |
| **இறப்பர்** | | | | |
| உற்பத்தி | கி.கி. | **157,474** | 188,934 | (16.65) |
| விற்பனை | கி.கி. | **161,376** | 186,118 | (13.29) |
| NSA (தலா 01 கிலோவிற்கு) | ரூ. | **252** | 330 | (23.64) |
| COP (தலா 01 கிலோவிற்கு) | ரூ. | **267** | 256 | 4.30 |
| **வருமானம் பற்றிய குறிப்பு** | | | | |
| மொத்த வருமானம் | ரூ. | **576,790,774** | 475,890,175 | 21.20 |
| மொத்த இலாபம் | ரூ. | **250,800,095** | 207,093,357 | 21.10 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | ரூ. | **103,029,740** | 95,827,085 | 7.52 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் | ரூ. | **222,679,652** | 193,669,763 | 14.98 |
| வரிக்கு முந்திய இலாபம் | ரூ. | **228,014,933** | 213,628,985 | 6.73 |
| வரிக்கு பிந்திய இலாபம்/ ஆண்டிற்கான இலாபம் | ரூ. | **214,238,022** | 208,145,938 | 2.93 |
| மொத்த இலாப அளவு | % | **43.48** | 43.52 | (0.09) |
| நிகர இலாப அளவு | % | **37.14** | 43.74 | (15.09) |
| பங்கொன்றுக்கான சம்பாத்தியம் (EPS) | ரூ. | **10.71** | 10.41 | 2.88 |
| **ஐந்தொகை பற்றிய குறிப்புகள்** | | | | |
| மொத்த சொத்துக்கள | ரூ. | **1,794,186,896** | 1,616,447,736 | 11.00 |
| மொத்த உரிமைப்பங்கு | ரூ. | **1,453,569,595** | 1,280,014,666 | 13.56 |
| வழங்கப்பட்ட பங்குகளின் | எண். | **20,000,001** | 20,000,001 | - |
| பணம் மற்றும் குறுகியகால முதலீடுகள் | ரூ. | **409,709,538** | 335,741,661 | 22.03 |
| பங்கொன்றின் நிகர சொத்து | ரூ. | **72.68** | 64.00 | 13.56 |
| தற்போதைய விகிதம் | மடங்குகளின் எண் | **6.52** | 5.61 | 16.22 |
| விரைவு விகிதம் | மடங்குகளின் எண் | **5.69** | 4.84 | 17.56 |
| **ஏனைய தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | எண் | **1,421** | 1,400 | 1.50 |
| உட்பட்ட சம்பளங்களும் வேதனங்களும் | ரூ. | **229,054,334** | 206,683,002 | 10.82 |
| செலாற்றுகை ஊக்குவிப்பு | ரூ. | **28,779,734** | 27,429,989 | 4.92 |
| மிகைவூதியங்கள் | ரூ. | **12,319,147** | 8,614,940 | 43.00 |

**மொத்த வருமானம்**




**வரிக்கு முந்திய இலாபம்**




**மொத்தச் சொத்துக்கள்**




**பங்கொன்றுக்கான நிகர சொத்து**




ரூ. 577 mn
2014 மொத்த வருமானம்
*2013 - 476 mn.* + 21%

ரூ. 1794 mn
2014 மொத்த சொத்துக்கள்
*2013 - 1616 mn.* + 11%

ரூ. 228 mn
2014 வரிக்கு முந்திய இலாபம்
*2013 - 214 mn.* + 7%

ரூ. 73
2014 பங்கொன்றுக்கான நிகர சொத்து
*2013 - 64* + 14%



18 பெப்ரவரி 2015
16 நவம்பர் 2010
18 ஜூன் 2010
18 ஏப்ரில் 2007
06 ஜூன் 2006
01 சனவரி 2005
18 ஜூன் 1992

# மைல்கற்கள்

**18 பெப்ரவரி 2015 |** குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் மீள் இயங்க ஆரம்பித்தது

**16 நவம்பர் 2010 |** குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டது.

**18 ஜூன் 2010 |** குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் அரச வளங்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**18 ஏப்றில் 2007 |** குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பொதுத் தோட்டங்கள் முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வந்தது.

**06 ஜூன் 2006 |** குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தெங்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**01 சனவரி 2005 |** ஏறக்குறைய 13 வருடகாலமாக தனியார்துறையினால் உரியமுறையில் நிருவகிக்கப்படவில்லை. இதனால் பொருளாதாரரீதியில் பயனற்று வீழ்ச்சியடைந்த கரணத்தினால் அரசாங்கம் இந்தக் கம்பனியின் முகாமைத்துவத்தினை 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் செயல் நோக்கின் கீழ் பொறுப்பேற்பதற்கு தீர்மானித்தது.

**18 ஜூன் 1992 |** குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் (KPL) ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள நிறுவனமானது 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முழுமையான அரச உடமைக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டு 2007இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவுசெய்யப்பட்டது. மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபையினால் நிருவகிக்கப்பட்டு வந்த சில தோட்டங்கள் அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் 1987 இன் 23 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அரச உரித்துடைய நிறுவனமாக மாற்றப்பட்டது.

1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி முதல் 2004 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வகைர குருனாகல் ப்ளான்டடஷன்ஸ் லீமிற்றற் தனியார் முகவரினால் நிருவகிக்கப்பட்டு வந்தது.



## சாதனைகள்




| ரூ. மில். | மொத்த வருமானம் | வரிக்கு முந்திய இலாபம் | காசும் காசுக்குச் சமனானவையும் |
|---|---|---|---|
| 2005 | 154 | 20 | 8 |
| 2006 | 197 | 23 | 26 |
| 2007 | 294 | 82 | 48 |
| 2008 | 360 | 100 | 75 |
| 2009 | 337 | 103 | 162 |
| 2010 | 431 | 155 | 275 |
| 2011 | 510 | 225 | 321 |
| 2012 | 492 | 193 | 326 |
| 2013 | 476 | 214 | 336 |
| **2014** | **577** | **228** | **410** |

# சாதனைகள்

## 2014

தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீண்டும் தேசிய தங்க விருதினை வென்று தமது முன்னிலை தன்மை உறுதி செய்தது. 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 04 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் காணப்படுகின்றது.

## 2013

தேசிய விவசாய வர்த்தக விருது விழாவில் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தங்க விருதினை தொடர்ச்சியாக தனதாக்கிக் கொண்டது.

## 2012

2012 தேசிய விவசாய வர்த்தக விருது விழாவில் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தங்க விருதினை தனதாக்கிக் கொண்டது.

## 2011

தேசிய மட்டத்திலான தேசிய விவசாய வர்த்தக விருகள் 2011 விருது விழாவில் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் வெண்கல விருதினை வென்றது.

## 2005

தனியார் முகாமையின் கீழ் இருந்த குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் (1992-2004) 08 ஆணடுகளாக வங்கி மேலதிக பற்று நிலைக்கு முகங்கொடுத்து வந்தது. 01.01.2005 நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்றதை தொடர்ந்து நிறுவனம் அதன் ரூ. 7.09 மில்லியன் மேலதிக பற்றினை சீர்செய்ததுடன் நேரிடையான ரூ 8.02 மில்லியன் மீதியுடன் உறுதியான நிதி ஸ்தீரதன்மைக்கு அத்திவாரமிட்டது.



# முகாமைத்துவத் தகவல்கள்



# தலைவரின் மீளாய்வு



**குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளர்கள் சார்பில் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டினை எமது நிறுவனம் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 228.01 மில்லியன்கள் பெற்று வெற்றிகரமான நிதியாண்டாக பூர்த்தி செய்துள்ளது. கடந்து ஆண்டு பெற்ற வரிக்கு முந்தி இலாபம் ரூ. 213.63 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் இது 6% அதிகரிப்பாகும். நிறுவனத்தின் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய இலாபம் இதுவேயாகும்.**

2005 ஆம் ஆண்டு குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றினை அரசு பொறுப்பேற்றது தொடக்கம் தென்னை, இறப்பர், மற்றும் ஏகைய பயிர்களின் அபிவிருத்தியில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச நிர்வாகத்தின் கீழுள்ள ஏனைய பெருந்தோட்டங்கள் மற்றும் பொது நிறுவனங்களை போலன்றி குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் 2007 தொடக்கம் பொதுச் திறைசேரிக்கு தொடரச்சியான பங்குலாபத்தினை வழங்கும் முன்னணி நிறுவனமாக இருப்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்கு நிறுவனத்தில் காணப்படும் முறையான முகாமை கட்டமைப்புகள் மற்றும் திறமைகளுமே காரணமாகும். மீளாய்வு ஆண்டில் செலுத்தி ரூ. 45 மில்லியன் பங்குலாபத்துடன் 2007 தொடக்கம் நாம் மொத்தமாக ரூ. 275 மில்லியன்களை பங்குலாபமாக பொதுச் திறைச்சேரிக்கு செலுத்தியுள்ளோம்.

இலங்கை பெருந்தோட்ட தொழிற்துறை தேசிய நலன் சார்ந்த ஒன்று என்பதுடன் பல சிறிய தோட்ட உரிமையாளர்களின் செயற்பாடுகளில் உதவுகின்றது. அதற்கு அரசாங்க துணை வழங்கப்படுகின்றது. பெருந்தோட்ட தொழிற்துறை அதிக ஊழியர்கள் பங்களிப்பு கொண்டது என்பதுடன் அதிக ஊதியம் மற்றும் பலமான தொழிற்சங்கங்களுக்கு முகங் கொடுக்கும் தொழிற்துறையாகும். எதிர்காலத்தில் இதற்காக தொழிலாளர் வளத்தை பெற்றுக் கொள்வது பாரிய சவால் என்பதுடன் மாறிவரும் வாழ்க்கைமுறைகள் காரணமாக அடுத்த தலைமுறைக்கு கைமாறுவதில்லை. அதே சமயம் குறைந்த உற்பத்தி மற்றும் மீள்நடுகை போதாமை காரணமாக தோட்ட நிறுவனங்கள் ஸ்தீரதன்மையை தங்கவைப்பதில் பாரிய சிக்கல்களை முகங்கொடுக்கின்றன.

எமது பிரதான பயிரான தேங்காய் இலங்கை அத்தியவசிய பொருட்சந்தையில் முக்கிய பாவனைப் பொருளாக பல்லாண்டுகளாக திகழ்கின்றது. தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பன நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் அன்றாட உணவு தயாரிப்பு சாதனமாக பயன்படுத்தப்படுகின்றன. வருடாந்தம் உள்நாட்டில் 2,000 மில்லியன் தேங்காய்கள் தேங்காய் எண்ணெய், தேங்காய், மற்றும் ஏனைய தேவைகளுக்காக நுகரப்படுகின்றது. மேலும் இவை ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. சிறந்த கொப்பரா பயன்படுத்தி பெறப்படும் தேங்காய் எண்ணெய்யும் முக்கியமான வர்த்தக உற்பத்தியாகும். கடந்த 15 ஆண்டுகளின் ஆசிய வலயத்தில் எண்ணெய் மற்றும் உணவிற்கான தேங்காய் பாவனை 6.5 கி.கி இருந்து 11 கி.கி வரை இரட்டிப்பாகியுள்ளது. திறந்த பொருளாதாரத்தின் நெகிழ்வு காரணமாக பல்வேறு எண்ணெய் வகையில் உள்நாட்டு சந்தையில் பிரவேசித்துள்ளன. பாமாயில் மற்றும் பனை எண்ணெயே இறக்குமதியில் முன்னணி வகிக்கின்றன. உள்நாட்டு எண்ணெய் விலையும் சர்வதேச எண்ணெய் விலைகள் தீர்மானிப்பவையாக உள்ளன. பல தொழிற்துறையாளர்கள் தமது உற்பத்திகளுக்கு தேங்காய் எண்ணெய்யை விட ஏனைய பயிர்வகை எண்ணெய்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இந்த வகையான பயிர்வகைகளின் வருகை காரணமாக உள்நாட்டில் தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது. மேலும் பல்லாயிரம் ஆண்டுகள் இலங்கையில் இது பயன்படுத்தப்பட்டு வந்திருப்பினும் இருதய நோய்களுக்கு காரணமாகின்ற என்ற எண்ணமும் இதற்கு சாதமாகவுள்ளது.

தெங்கு அபிவிருத்தி சபை புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையில் மொத்த தெங்கு தொடர்புடைய உற்பத்திகளின் ஏற்றுமதி 2014 ஆம் ஆண்டில் ரூ. 72 பில்லியன் ஆகும். பனை தொடர்பான ஏற்றுமதிகள்

**தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீண்டும் தேசிய தங்க விருதினை வென்று தமது முன்னிலை தன்மை உறுதி செய்தது. 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 04 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் காணப்படுகின்றது.**

ரூ. 37.1 பில்லியன் என்பதுடன் கடந்த ஆண்டு பெற்ற ரூ. 11.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 111% அதிகரிப்பாகும். தேங்காய் நார் பொருட்கள் மற்றும் ஷெல் பொருட்கள் ஏற்றுமதி சம்பாத்தியம் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10% லிருந்து 37% வரை அதிகரித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு இலங்கை 33 மில்லியன் தேங்காய் நட்டுகளை ஏற்றுமதி செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் இவ் எண்ணிக்கை 21 மில்லியன் ஆகும். இது 54% அதிகரிப்பாகும். மேலும் ஏற்றுமதி வருமானத்தில் 59% அதகரிப்பு காணப்படுகின்றது. 2013 இல் ஏற்றுமதி வருமானம் ரூ. 1.2 பில்லியன் மற்றும் 2014 இல் ஏற்றுமதி வருமானம் ரூ 1.9 பில்லியனாகும்.

தூய தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி மிகவும் அதிகரித்து காணப்பட்டது. தேங்காயில் அடங்கியுள்ள கொழுப்பு பற்றிய அறிவூட்டல் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு அது பாதகமானது என்ற கருத்துக்கள் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. தேங்காய் எண்ணெய் மனித வாழ்விற்கு பொருத்தமற்றது என்பது பிழையான கருத்து என தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் தூய எண்ணெய் உற்பத்தி மற்றும்

# தலைவரின் மீளாய்வு

ஏற்றுமதியில் பிலீபீன்ஸ் முன்னணி வகிக்கின்றது. 80% சந்தை தேவையை அதுவே பூர்த்தி செய்கின்றது. அதனுடன் ஒப்பிடுகையில் நாம் மிகவும் குறைந்த அளவு ஏற்றுமதியே கொண்டுள்ளோம். எனினும் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக இலங்கையே உள்ளது. பிலிபீன்ஸ் ஏற்றுமதியில் தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன் கொள்வனவாளர்கள் மாற்று விநியோகஸ்தர்களை ஏதிர்பார்க்கின்றார்கள். சந்தை வாய்ப்பினை அதிகரிக்க இது சிறந்த சந்தர்ப்பமாகும். தூய எண்ணெய்கான கேள்வி ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கொரிய உட்பட பல நாடுகளில் அதிகரித்து வருகின்றது. சுவை மற்றும் தன்மை காரணமாக இலங்கை தேங்காய்க்கு சர்வதேசத்தில் சிறந்த நன்மதிப்பு உள்ளது.

இதற்கமைய தொழிற்துறையை மேம்படுத்தி அதனை வளர்ச்சியடையச் செய்ய சிறந்த வாயப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் 70% உற்பத்தி உள்நாட்டு தேவைக்கான நுகரப்படுகின்றது. ஏனைய தேங்காய் உற்பத்தி நாடுகளின் அதிகமான அளவு ஏற்றுமதிக்கே பயன்படுத்தப்படுகின்றன. போட்டியாளர்களின் குறைந்த உற்பத்தி செலவும் நாம் அவர்களுடன் போட்டியிட முடியாமைக்கு தடையாக உள்ளது. தேங்காய் நீருக்கு சர்வதேசத்தில் சிறந்த கேள்வி உள்ளது. எமது தேசம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் தேங்காய் நீரின் தரத்தினை தரம்உயர்த்த வேண்டிய அவசர நிலையில் உள்ளது.

தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீண்டும் தேசிய தங்க விருதினை வென்று தமது முன்னிலை தன்மை உறுதி செய்தது. 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 04 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் காணப்படுகின்றது.

தேசிய தேவைகள் மற்றும் ஏனைய நட்டமுறை பிரகடனங்களுக்கு அமைய காணிகளை கையகப்படுத்தல் எமது நிறுவனத்தின் வளர்ச்சி மிகுந்த சவாலாகும். நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது தொடக்கம் இதுவரை 20% நிலம் இழக்கப்பட்டுள்ளது. எமது உற்பத்திகளுக்கு தேவையான காணிகளின் தேவை தொடர்ந்தும் அதிகரித்தே வருகின்றது. மீளாய்வு ஆண்டில் நாம் 16.59 ஹெக்டெயருக்கு அதிகமான காணியை விடுத்துள்ளதுடன் எமது முகாமையின் கீழுள்ள காணியின் அளவு 5,244.58 ஹெக்டெயர்கள் மாத்திரமே ஆகும். 2013 ஆண்டு நிர்வாகத்தின் கீழ் 5,261.17 ஹெக்டெயர்கள் காணப்பட்டன. 1992 ஆம் ஆண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது எம்வசம் 6,555.03 ஹெக்டெயர்கள் காணி காணப்பட்டது. பயிர்செய்கை பண்ணப்படாமல் இருக்கும் நிலங்களை இத்தேவைக்காக விடுவித்த பயிரிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இலாகாக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பும் இலாபமும் பெற்றுத்தரக்கூடிய முதலீடுகளின் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் ஆர்வமாகவும், முயற்சியுடனும் உள்ளது.

பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் திரு. லக்ஷ்மன் கிரியெல்ல, பெருந்தோட்ட தொழிற்துறை அரச அமைச்சர் திரு. கே. வேலாயுதன், பெருந்தோட்ட தொழிற்துறை பிரதி அமைச்சர் திரு. ஜகத் புஸ்பகுமார, பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் செயலாளர் திரு. அனுர ஜயவிக்ரம மற்றும் பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும், குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தற்போதைய தலைவர் என்ற வகையில் நிறுவனத்தின் முன்னைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றேன். அவ்வாறே இந்த சாதனை மிக்க ஆண்டினை நிறைவு செய்ய அர்ப்பணிப்புடன் பங்களிப்பு செய்த தற்போதை பணிப்பாளர் சபை, முகாமைக்குழுவினர் மற்றும் சகல ஊழியர்களுக்கும் எனது நன்றிகளை தெரிக்கின்றேன். எதிர்காலத்திலும் எமது முழுமையான பங்களிப்பை இவ்வாறே நாம் வழங்குவோம் என உறுதிப்படுத்துகிறேன.

**பியசோம உபாலி**

தலைவர்


NAC
National
Agribusiness
Awards
2014
Kurunegala Plantations Limited
National
Gold Award

# பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற அடிப்படையில் வெற்றிகரமான 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2014 ஆம் ஆண்டு பெருந்தோட்டதுறைக்கு மிகவும் சவால் நிறைந்ததாக காணப்பட்ட போதிலும் நிறுவனம் சிரமங்களுக்கு மத்தியில் அதனை வெற்றிக் கொண்டது. இலங்கை பெருந்தோட்ட சங்கத்தின் அறிக்கைக்கு அமைய தேசத்தில் 19 பிராந்திய பெருந்தோட்டங்கள் ரூ. 2.8 பில்லியன் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. இறப்பர் மற்றும் தேயிலையின் உயர் விலைக்குறைவு மற்றும் அதிகரித்த உற்பத்தி செலவுகள் இதற்கு காரணமாகும். குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தேங்காய் மற்றும் இறப்பர் இரண்டையும் பயிர் செய்த போதிலும் நிறுவனம் உயர் இலாபத்தை மாத்திரம் பதிவு செய்யாமல் விவசாய வர்த்தகத்தில் புதிய சாதனை மைல்கல்லையும் எட்டியுள்ளது. இதற்கு காரணம் தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 04 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக காணப்படுகின்றது.

## நிதிசார் முக்கிய குறிப்புகள்

மீளாய்வு ஆண்டின் நிதிச்சார் முக்கிய குறிப்புகளின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

- ரூ. 576.8 மில்லியன் அதிகூடிய வருமானம்
- ரூ. 514.2 மில்லியன் தேங்காய் மூலமான அதிகூடிய வருமானம்
- ரூ. 22.9மில்லியன் ஏனைய பயிர்கள் மூலமான அதிகூடிய வருமானம்
- ரூ. 103 மில்லியன் அதிகூடிய ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்.
- ரூ. 228 மில்லியன் அதிகூடிய வரிக்கு முந்திய இலாபம்
- ரூ. 10.71 அதிகூடிய பங்கொன்றின் சம்பாத்தியம்
- ரூ. 409.7 மில்லியன் அதிகூடிய காசும் காசுக்குச் சமனானவைகளினதும் இருப்பு

## உற்பத்தி மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ சிறப்பம்சங்கள்

### தேங்காய் உற்பத்தி

2014 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் 16.7 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்தது. 2013 ஆம் ஆண்டின் அறுவடையினை விடவும் ரூ. 28.5% அதிகரிப்பாகும். தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 14.2%.

**2014 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் 16.7 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்தது. 2013 ஆம் ஆண்டின் அறுவடையினை விடவும் ரூ. 28.5% அதிகரிப்பாகும். தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 14.2%.**

எங்கள் செயல்திறன் அதிகரிக்க அறிவியல் ரீதியான மேலாண்மை முறைகள் மற்றும் விவசாய முறைகள் ஆகியவனை காரணமாகும். ஊக்க திட்டங்கள் மற்றும் அணுகுமுறை மாற்றம் மேம்படுத்தப்பட்ட மேலாண்மை கட்டுப்பாடுகள், குறிப்பிடத்தக்க உற்பத்தி அதிகரிப்பும், உற்பத்தி கசிவு குறைக்கப்பட்டது. இது போன்ற சரியான நேரத்தில் சரியான உர பயன்பாடு, மண் மேலாண்மை மற்றும் வழக்கமான அறிவியல் விவசாய நடைமுறைகளை பயன்பாடு, சூழல் மேம்பாடு மற்றும் எதிர்காலத்தில் விளைச்சல  தரமுள்ளதாக்க இளம் பயிர் செய்கை. செலவின கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படையான கணக்கு உள்ளிட்ட வலுவான நிதி மேலாண்மை, திறமையான மூலதனம் மேலாண்மை செயல்படுத்தப்படும் மற்றும் நிறுவனத்தின் நிதி பாதிப்பு குறைப்பு என்பன எமது வெற்றிக்கான பிரதான அம்சங்களாகும்.

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றின் 2014 ஆம் ஆண்டில் 70%  இயற்கை எரு பயன்படுத்திய சேதன பசளைகளின் பயன்பாட்டை அதிகரித்துள்ளது. உள்நாட்டிம் சர்வதேசத்திலும் ஆர்கானிக் தென்னை தோப்புகளுக்கு காணப்படும் உயர் கேள்வி காரணமாக நிறுவனம் அதன் 1,952 ஹெக்டெயர் அளவு தென்னைத் தோட்டங்களை ஆர்கானிக் தென்னை தோட்டங்களாக மாற்றியுள்ளது.

தேங்காய் பயிரிடும் பரப்பினை 2013 இல் காணப்பட்ட 19.90% த்திலிருந்து 2014 இவ 20.32% ஆத அதிகரித்துள்ளதுடன் 10,647 வெற்றிடங்களை நிரப்பியுள்ளோம். இதுவே வருமான அதிகரிப்பிற்கு காரணமாகும். ஏக்கருக்குஇருந்த நட்டுக்களின் அளவினை தற்போது ஏக்கருக்கு 56 வரை அதிகரித்துள்ளோம்.

முதிர்வடைந்த நட்டுகள் விழாமல் தேங்காய்களை பாதுகாப்பத்தினை அதிகரித்துள்ளோம். மாதாந்த அறுவடையினை அதிகரிப்பதன் மூலம் எமது வருவாய்யில்



90% பங்களிப்பு செய்யும் தேங்காய்யின் பங்களிப்பை கூட்டுகின்றோம்.

எமது பொருட்களின் தரமம் காரணமாக ஏலத்தில் அதிக விலைக்கு அவை எடுக்கப்பட்டமையே இதற்கு காரணமாகும். நாம் உண்மையில் ஒரு சவாலன ஆண்டையே எதிர்நோக்கினோம். குறைந்த விளைச்சலாக இருப்பினும் வாடிக்கையாளரின் நன்மதிப்பு அதிக வருவாயை பெற உதவியது.

## இறப்பர் மற்றும் ஏனைய பயிர்கள்

எமது இரண்டாம்நிலை பயிராகவுள்ள இறப்பர் பயிரின் வருவாய் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கேள்வி குறைவு காரணமாக 17% வீழ்ச்சி காணப்பட்டது. தேசிய அளவில் உற்பத்தி 24.4% த்தினால் குறைந்த போதிலும் வீழ்ச்சி அளவினை நிறுவனம் குறைப்பதில் வெள்ளி கண்டது. முதல் காலாண்டில் உலர் காலநிலை, இரண்டாவதில் அதிக மழைவீழ்ச்சி பின்னர் காணப்பட்ட மரப்பால்களின் பாதிப்பு காரணமாகவே இறப்பர் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. சர்வதேசரீதியில் இறப்பரின் கேள்வி குறைவினால் பாரிய விலை வீழ்ச்சி ஏற்பட்டது இறப்பர் கி.கி ஒன்றின் விலை 2014 ல் ரூ. 252, 2013 கி.கி விலை ரூ. 330 ஆகும். இது 24% விலை வீழ்ச்சியாகும்.

இடைநிலைப் பயிர்ச் செய்கையினை வெறறிகரமாக முன்னெடுத்து வருகின்றோம். இவை நிறுவனத்திற்கு

குறிப்பிடத்தக்க வருமான அதிகரிப்பை தொடர்ச்சியாக பெற்றுத் தருகின்றன. மேலதிக வருமானததிற்கு மேலதிகமாக இவை செற்பாட்டு இடர் தன்மை குறைந்தவையாகவுள்ளன. 2013 ஆம் ஆண்டை விடவும் 9% அதிகமான பரப்பினை இவ்வாண்டில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பயன்படுத்தியது. இடைநிலை பயிர்கள் ஊடான வருமானம் 2013 இல் கிட்டிய ரூ. 11.1 மில்லியனை விடவும் 106% த்தினால் 2014 இல் ரூ. 22.9 மில்லியன்களால் அதிகரித்தது. இன்று 53,000 கறுவா,

1500 டிரெகன்புருட், 2250 தூரியன், 272 ரம்புண்டன் மற்றும் 200 பாக்கு நட்டுகள் 2014 இல் நடப்பட்டுள்ளன.

## தேசிய அங்கீகாரம்

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் அரசின் நிர்வாக கைகளில் வந்த பின்னர் நாம் நமது திறன் மற்றும் திறன் சிறந்த வாசித்திருக்கிறேன். இது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் அவரது மூலம் இலங்கை பாராளுமன்றத்தால் மதிப்பிடப்பட்டு வருகிறது என்பதை கவனிக்க ஒரு சலுகை உள்ளது. இலங்கை பாராளுமன்றம் 24 அக்டோபர் 2014 தேதியிட்ட .1 - நான் இங்கே அக்டோபர் 24, 2014 அன்று தனது பட்ஜெட் உரையில் உள்ள அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ர்யணெயசன, பாராளுமன்ற விவாதங்கள், தொகுதி 230 மேற்கோள்

**“3.4 மூலம் அரசாங்கத்திற்கு சொந்தமான குருணாகல் மற்றும் சிலாபம் தோட்ட நிறுவனங்கள் திறமையாக கருவூல பங்கிலாபங்களைப். இந்த வெற்றியை அடுத்து, நான் ரூ .1000 மில்லியன் மூலதன உட்செலுத்துதல்தான் அனைத்து JEDB மற்றும் SLPC தோட்ட நிலங்களில் உருவாக்க பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான ஒரு தனி அரசு அமைக்க முன்மொழிகிறேன்”.**

அதில் தெளிவாக செய்து மேலே கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன KPL என அரசுத்துறை மற்றும் மேலாண்மை நிறுவன இதையொட்டி ஒரு மதிப்புமிக்க அடையாளம் மற்றும் நிறுவனத்தின் அளவுகோலாக ஏற்படுத்தப்பட்ட மிக உயர்ந்த மட்டத்தில் ஒரு பின்பற்றத்தக்க வணிக நிறுவன, கருதப்பட்டுவந்தது. இலங்கை விவசாய வர்த்தக ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு மிகவும் மீளாய் ஆண் காலப்பகுதியின் நன்றாக பாடினார் இல்லை, மேலும் இந்த முடிவு மிகவும் சவாலான சூழ்நிலைகளிலும் கீழ் அடைந்துவிட்டோம் மேலும் பாதகமான சந்தை நிலைமைகளின் கீழ், உள்நாட்டிலும் சர்வதேச அனுபவம் என்பதால் இவரது இத்தகைய சாதனைகள் மிக அதிக கவர்ச்சி சேர்க்கின்றன..

## எதிர்கால் மேற்பார்வை

மிகவும் குறைவான தொழிலாளர் வளம் மற்றும் உயர்ந்த தொழிலாளர் செலவுகள் பெருந்தோட்டதுறையினை நிதிச் சிக்கல்படுத்தும் காரணியாக மாறி வருகின்றது. உற்பத்தி தரம் மற்றும் பெறுமதி சேர்ப்புகள் என்பன கேள்வியை அதிகரிக்கவும் உயர் விலைகளை பெற்றுக் கொள்ளவும் அவசியமாகும்.

பொறியில் அறுவடையை வலுப்படுத்தலும், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும்

**இடைநிலை பயிர்கள் ஊடான வருமானம் 2013 இல் கிட்டிய ரூ. 11.1 மில்லியனை விடவும் 106% த்தினால் 2014 இல் ரூ. 22.9 மில்லியன்களால் அதிகரித்தது.**

தேசிய அளவில் அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க வேண்டியுள்ளது. விவசாய நடைமுறைகள் மற்றும் அறுவடையில் காலநிலை மாற்றம் பாரிய தாக்கத்தினை கொண்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக பெருந்தோட்டதுறை முதலீடு செய்ய இடரான தொழிற்துறையாக மாறி வருகின்றது. பங்குதாரர்களின் பிரகாசமான வாய்ப்புகள் குறித்து நம்பிக்கையான மீள்பார்வைகள் செய்யப்படவுள்ளன.

பெருந்தோட்டதுறையின் எதிர்கால நன்மை மற்றும் தங்குதிறன் கருதி இலங்கையிலுள்ள பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் தேவை அவசரமாகின்றது. பாரிய பயிர்களின் விலைகள் பெரிய வீழ்ச்சிகள் ஏற்படும் போது தங்குதிறன் பாதிப்படைகின்றது. எவ்வாறாயினும் தென் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் முன்மாதிரியான பெருந்தோட்ட விவசாய வர்த்தக முகாமைத்துவக் கம்பனியாகத் திகழும் எமது நோக்கில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தூய தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி மிகவும் அதிகரித்து காணப்பட்டது. ஏனைய தேங்காய் உற்பத்திகளின் விலையை விடவும் தூய தேங்காய் எண்ணெய்க்கான விலை சர்வதேச ரீதியில் அதிகரித்து காணப்படுகின்றது. குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் இந்த வாய்ப்பை பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் சிறந்த பயனை அடையும் நிலையில் உள்ளது.

## நன்றிகள்

நிறுவனமானது புதிய அரசாங்க மாற்றத்தின் பின்னர் தற்போது பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. 2014 ஆம் ஆண்டில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் திரு. லக்ஷ்மன் கிரியெல்ல, பெருந்தோட்ட தொழிற்துறை அரச அமைச்சர் திரு. கே. வேலாயுதன், பெருந்தோட்ட தொழிற்துறை பிரதி

அமைச்சர் திரு. ஜகத் புஸ்பகுமார, ஆகியோருக்கு எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் முன்னால் அமைச்சர் திரு. ஜகத் புஸ்பகுமார அவர்களுக்கு அவரின் வழிகாட்டல் மற்றும் உதவிக்கு எனது விசேட நன்றிகளை தெரிவிக்கின்றேன். மேலும் பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் செயலாளர் திரு. அனுர ஜயவிக்ரம மற்றும் பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் முன்னால் செயலாளர், தற்போதைய தலைவர் திரு. பியசோம உபாலி மற்றும் பணிப்பாளர் சபை, முன்னைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் தமது கடின உழைப்பை அர்ப்பணிப்புடன் வெளிப்படுத்திய சிரேஷ்ட முகாமை குழு மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு எனது நன்றிகள் என்றும் உண்டு. எமது நிறுவனம் தேசத்திலுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக திகழவாழ்த்துகிறேன்.

நாம் எமது அபிவிருத்திகளை திட்டமிட்ட மூலோபயங்கள் மற்றும் நீணடகால திட்டமிடல்களுக்கு அமை தங்குதிறனை பேணும் விதத்தில் தொடர்வோம் என்பதுடன் நிறுவனத்தின் வெற்றிக்கு வாழ்த்துகிறேன்.



**சுனில் நில்லேகொட**

# பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்



திரு. டபிள்யூ.ஏ.டி.டி.எம். பிரியந்த
பணிப்பாளர்

திரு. டி.பி. விஜேசிங்க
பணிப்பாளர்.

திரு. எச்.ஏ.என். சமன் குமார
பணிப்பாளர்/ திறைச்சேரி பிரதிநிதி

திரு. டபிள்யூ.எம்.டி.பி. அபேரத்ன
பணிப்பாளர்



திரு. ஏ.எம். பியசோம உபாலி
தலைவர்

திரு. டி.எம். பண்டாரநாயக்க
தொழிற்படு இயக்குனர்

திரு. சுனில் எஸ். அலெஸ்
பணிப்பாளர்

# பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

### திரு. ஏ.எம். பியசோம உபாலி
தலைவர்

திரு பியசோம உபாலி குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தலைவராக 2015.01.29 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். தனது நீண்ட அனுபவம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றின் மூலம் நிறுவனத்தினை எதிர்காலத்தில் மேலும் வளமாக்கும் நோக்கில் தமது கடமைகளை அவர் பொறுப்பேற்றார். அவரின் பணிகள் 1980 தொடக்கமே ஆரம்பமாகின்றது. குளியாபிட்டிய பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது தலைவர் இவர் என்பதுடன், 1988 ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தின் முதலாவது மாகாண சபையில் வடமத்திய மாகாண சபை பிரதி தலைவராக முதலாவது தெரிவானவரும் இவரே. தனது அரசியல் செயற்பாடுகளுக்கு முன்னர் திரு பியசோம உபாலி 1980 இல் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது குருணாகல் மாவட்ட அபிவிருத்தி சபையில் அங்கத்தவராக இருந்தார். மேலும் அவர் குளியாபிட்டிய பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும், தேசிய கூட்டுறவு சபையின் பணிப்பாளராகவும் பணியாற்றி உள்ளார்.

1988 தொடக்கம் திரு பியசோம உபாலி குளியாபிட்டிய தேர்தல் தொகுதியை பிரதி நிதித்துவப்படுத்திய குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக 1989 – 2004 வரை 16 ஆண்டுகள் பணியாற்றினார். 2002 – 2004 ஆண்டு வரை அவர் அரச போக்குவரத்து அமைச்சராக நியமனம் பெற்றார். பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய காலப்பகுதியில் அவர் பல்வேறு உயர் பதவி நிலைகளை வகித்தார். உதவி அரசாங்க கொரடா, பிரதி அரசாங்க கொரடா என்பன அவற்றில் சிலவாகும். ஜப்பானில் நடைபெற்ற விவசாய மற்றும் கூட்டுறவு நிகழ்சித்திட்டம் உட்பட பல்வேறு வெளிநாட்டு செயற்திட்டங்களில் பங்கு பற்றினார். ரஸ்யாவில் இடம்பெற்ற இளைஞர் விவகார நகிழ்வு, இங்கிலாந்து மற்றும் ஸ்பெய்னில் இடம்பெற்ற அதிகாரப் பகிர்வு திட்டம் என்பவும் அதில் அடங்கும். இவற்றுக்கு மேலதிகமாக நாடளாவியரீதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டுள்ளார். இவற்றில் அதிகமானவை குருணாகல் மாவட்டத்தை உள்ளடக்கியதாகும். திரு பியசோம உபாலி அவர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவங்கள் மற்றும் அறிவும் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றறின் சாதகமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்பாக இருக்கும் என்பது உறுதியாகும்.

### திரு. டி.எம். பண்டாரநாயக்க
தொழிற்படு இயக்குனர்

திரு. டி.எம். பண்டாரநாயக்க குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தொழிற்படு இயக்குனராக 26.03.2015 நியமனம் பெற்றார். இவர் மாஹோ விஜயபாகு தேசிய பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். திரு. டி.எம். பண்டாரநாயக்க விவசாயம், பண்ணை மற்றும் தனியார் போக்குவரத்தில் பல்லாண்டுகால அனுபவம் கொண்டவர். அரசியல் சார்ந்தவர்கள் மற்றும் தனியார், அரச துறை நிபுணர்கள் உடன் பணியாற்றி அனுபவம் கொண்டவர். குருணாகல் மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி 1989 தொடக்கம் 2004 வரை பாராளுமன்ற அங்கவத்தராக செயல்பட்ட இவர் கமநல அமைச்சின் கீழுள்ள நெல் அபிவிருத்திக்கான முன்னால் அமைச்சராகும். 1985 தொடக்கம் 1986 வரை கல்கமுவ தனியார் பஸ் செயற்பாட்டாளர் சங்கத்தின் பொருளாளராகவும், 1985 தொடக்கம் 1989 வரை வில்வல கிராமோதய அபிவிருத்தி சபை தலைவராகவும் பணியாற்றி உள்ளார். வில்வல பிராந்திய செயலகத்தின் சனாதிபதி செயல் அணி தலைவராகவும் திகழ்ந்தார். 1985 தொடக்கம் 1989 வரை யாப்பகுவ பால் பண்ணையாளர்கள் சங்க தலைவராகவும், 1989 தொடக்கம் 2003 வரை யாப்பகுவ விகாரா பெரகரா ஏற்பாட்டு குழு அங்கத்தவராகவும் திகழ்ந்த இவர் இக்கால பகுதியில் யாப்பகுவ பிரதேச சமய விகாரைகள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தியிற்கு பாரிய பங்களிப்பை செய்துள்ளார்.

### திரு. டி.பி. விஜேசிங்க
பணிப்பாளர்

திரு. டி.பி. விஜேசிங்க குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளராக 13.03.2015 நியமனம் பெற்றார். இவர் 1980 தொடக்கம் பல்வேறு தனியார் மற்றும் அரசதுறை நிறுவனங்களின் அனுபவங்களை பெற்றவர். சிக்கோ இனிப்பு திண்பண்டங்கள் (பிறை) லிமி. சிரேஷ்ட பதவி, 559 உணவகம் மற்றும் கட்டிட தொகுதி நிர்வாக இயக்குனர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். தற்போது இவர் மில்கோ (பிறை) விமி மற்றும் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். ஹரன்கஹாவ மகா வித்தியாலம் பழைய மாணவராக இவர் அகில இலங்கை சமாதான நீதவான் ஆகும்.

### திரு. எச்.ஏ.என். சமன் குமார
பணிப்பாளர்/ திறைச்சேரி பிரதிநிதி

திரு. எச்.ஏ.என். சமன் குமார குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளர்/ திறைச்சேரி பிரதிநிதியாக 06.03.2015 நியமனம் பெற்றார். குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் கணக்காய்வுக் குழு தலைவராக 07.04.2015 தொடக்கம் பணியாற்றுகின்றார். திரு. எச்.ஏ.என். சமன் குமார இலங்கை அரசதுறையில் பலவருட சேவை உயர் பதவிகளை வகித்த அனுபவம் கொண்டவர் ஆவார். 2002 தொடக்கம் 2005 வரை வளிமண்டலவியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிதி), 2005 தொடக்கம் 2010 வரை பொதுத் தொழிற்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர், 2010 தொடக்கம் 2013 ஜூலை வரை அரச கணக்குகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், 2013 ஜூலை தொடக்கம் 2013 செப்டெம்பர் வரை பொதுத் தொழிற்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர், 2013 செப்டெம்பர் தொடக்கம பொதுத் தொழிற்துறை திணைக்கள பணிப்பாளர் ஆகியவை அவர் வகித்த பதவிகள் ஆகும்.

திரு. எச்.ஏ.என். சமன் குமார இதற்கு முன்னர் 2006 தொடக்கம் 2010 வரை காணி சீர் திருத்த ஆணைக்குழு பணிப்பாளர், 2008 தொடக்கம் 2011 வரை கல்லோயா பெருந்தோட்ட பிறை.

லிமி. பணிப்பாளர், 2009 தொடக்கம் 2011 வரை கல்லோயா ஹோல்டிங்ஸ் பணிப்பாளர், 2010 தொடக்கம் 2011 வரை அரச மரக்கூட்டுப்தாபன பணிப்பாளர், 2013 தொடக்கம் 2015 வரை பரந்தன் கெமிக்கல்ஸ் பிறை. லிமி பணிப்பாளரான பதிவ வகித்துள்ளதுடன் தற்போது 2015 தொடக்கம் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறை) லிமி பணிப்பாளராக உள்ளார். ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் பி.கொம் (விசேட) பட்டப்படிப்பினை 2001 ஆம் ஆண்டு நிறைவு செய்த இவர் ஆளுஉ பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் பிரயோக நிதியியலுக்காக பெற்றுள்ளார். ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தின் பொருளியல் எம்.ஏ (2013) பட்டத்தையும் கொண்டுள்ளார்.

### திரு. சுனில் எஸ். அலெஸ்

பணிப்பாளர்

திரு. சுனில் எஸ். அலெஸ் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளராக 06.03.2015 நியமனம் பெற்றார். இவர் அரசம ற்றும் தனியார் துறையில் பல்வேறு அனுபவங்களை கொண்டவர். மேலும் இவர் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் கணக்காய்வுக் குழு அங்கத்தவராக 07.04.2015 தொடக்கம் பணியாற்றுகின்றார். இவர் முந்தாய் கேஸ் பிறை லிமி செயற்திட்ட வடிவமைப்பு ஆலோசகராக 2004 தொடக்கம் 2005 வரை பணியாற்றியுள்ளார்.

2002 – 2004 கண்டி ஹோட்டல்ஸ் நிர்வாக இயக்குனர், இவர் 1994 – 2002 வரை கேஸ் ஓட்டோ லங்கா (பிறை) லிமி. (லாப்.'.ஸ் கேஸ்) நிறுவனத்தின் இணை ஸ்தாபகரும் நிர்வாக இயக்குனருமாவார். 1973 ஆம் ஆண்டு ஓபேரா ஹோட்டலில் முகாமைத்துவ பயிலுனராக விருந்தோம்பல் துறையில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் புட் அன்ட் பிவரேஸ் ஆலோசகராக மவுண்ட் லெவனியா ஹோட்டலில் 1980 – 1985 வரை பணியாற்றினார். நீர்கொழும்பு சீசெல்ஸ் ஹோட்டல் பொது முகாமையாளராக 1985 – 1989 வரை பணியாற்றினார். அவர் சியரா ட்ரவல்ஸ் மற்றும் சியரா ட்ரேடிங் (பிறை) லிமி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆவார்.

திரு. சுனில் எஸ். அலெஸ் கொழும்பு ஆனந்த கல்லூரி பழைய மாணவர் ஆவார். இங்கிலாந்தின் கோன்வில் தொழில்நுட் கல்லூரி ஹோட்டல் முகாமைத்துவ பட்டதாரியாவார். மேலும் முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர்.

### திரு. டபிள்யூ.எம்.டி.பி. அபேரத்ன

பணிப்பாளர்

திரு. டபிள்யூ.எம்.டி.பி. அபேரத்ன குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளராக 13.03.2015 அன்று நியமனம் பெற்றார். இவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வு துறையில் பல்லாண்டுகால அனுபவம் கொண்டவர். மேலும் இவர் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் கணக்காய்வுக் குழு அங்கத்தவராக 07.04.2015 தொடக்கம் பணியாற்றுகின்றார். தமது தொழில் வாழ்வினை தொரன்தொன் பன்டிதரத்ன அன்ட் கம்பனியில் ஆரம்பித்த அவர் பின்னர் மில்க் இன்டஸ்ரிஸ் ஒப் லங்கா கம். லிமி, ஹொலிடே ஐலண்ட் ரிசோட்ஸ் மாலைதீவு, டி.பி. அபேரத்ன அன்ட் கம்பனி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் பணியாற்றினார். தற்போது இவர் விவசாய ஆராய்ச்சிக்கான இலங்கை சபையில் பணியாற்றுகின்றார். அரச மரக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி போது உள்ளக கணக்காய்வு கயைெட மற்றும் திட்டங்களை 15 வருடங்களுக்கு பின்னர் திருத்தங்கள் செய்தார். இதுவே தற்போது அரச மரக் கூட்டுத்தாபனத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

கண்ணகீட்டில் உயர் தேசிய டிப்ளோமா உட்பட பல்வேறு நிபுணத்தவ தகைமைகளை கொண்டுள்ளார். கணக்கீடு மற்றும் டிப்ளோமா மற்றும் நிதி பேராதனை பல்கலைக்கழக மேலாண்மை மற்றும் பேராதனை பல்கலைக்கழக மனித உரிமைகள் டிப்ளோமா உட்பட தொழில்முறை தகுதிகளை கொண்டுள்ளார்.

மிகவும் தகுதி பெற்ற கணக்காய்வு மற்றும் கணக்கீடு நிபுணராக திரு. அபேரத்ன MAAT அங்கத்தவர் ஆவார். இலங்கை, AFA - நிதி கணக்காளர்கள் சங்கம் - இங்கிலாந்து, FIAB - புத்தக கீப்பர்ஸ் சர்வதேச சங்கம் - பைனான்ஸ் தொழில்நுட்ப சங்கம் இங்கிலாந்து, ACPM - சான்றளிக்கப்பட்ட தொழில் மேலாளர் நிறுவனம் - (இலங்கை கிளை நிறுவனர் உறுப்பினராக), ஏஎம்ஏ - சான்றளிக்கப்பட்ட மேலாண்மை கல்வி நிறுவனம் கணக்காளர்கள் (ICMA), APFA - இலங்கை (APFA) மற்றும் ரோட்டரி பாரம்பரிய கண்டி சாசனம் உறுப்பினர் பொது நிதி கணக்காளர்கள் சங்கம் - அகில இலங்கை சமாதான நீதிவான் என்பன அவரின் தகைமைகளாகும்.

### திரு. டபிள்யூ.ஏ.டி.டி.எம். பிரியன்த

பணிப்பாளர்

திரு. டபிள்யூ.ஏ.டி.டி.எம். பிரியன்த குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் பணிப்பாளராக 13.03.2015 அன்று நியமனம் பெற்றார். பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரே திரு. டபிள்யூ.ஏ.டி.டி.எம். பிரியன்த ஆகும். 1992 ஆம் ஆண்டு இலக்கை கணக்காளர் சேவையில் இணைந்த வடமத்திய மாகாண சபையில் கணக்காளராக 13 ஆண்டுகள் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றி உள்ளார். வென்னப்புவ ஜோசப் வாஜ் பழைய மாணவரான இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வர்த்தக இளநிலைப்பட்டம் பெற்றவர் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



திரு. என்.எம்.எஸ்.கே நில்லேகொட
பிரதான நிறைவேற்று அலுவலகர்



திரு. எஸ்.எம்.எம். சமரகோன்
பிரதிப்பொது முகாமையாளர்



திரு. பி.எம்.டீ.ஜி. பிரேமதிலக
முகாமையாளர் நிதி



திரு. எம்.எம்.ஜே. குரே
முகாமையாளர் கணக்காய்வு



திரு. ஐ.ஏ. குணவர்தன
முகாமையாளர் மனிதவளம் மற்றும் நிர்வாகம்



திரு. எஸ்.எம்.ஆர்.பி. சத்குமார
முகாமையாளர் பெருந்தோட்ட கண்காணிப்பும் ஒருங்கிணைப்பும



திரு. ஜே.கே.ஜே.பி. ஜயவர்தன
முகாமையாளர் சந்தைப்படுத்தல்

# பிராந்திய அத்தியட்சகர்கள்



திரு. கே.ஜே.எஸ். பெரேரா



திரு. ஜீ.கே.ஏ. ஜயவர்தன



திரு. கே.எல்.எச்.சி பெரேரா



திரு. ஏ.எம்.பி. அபேகோன்



திரு. கே.பி.டீ.என். களுகல்ல



திரு. யூ.பி.ஆர்.எம். பதிரன



திரு. எம்.தி.ஜே. பெரேரா



திரு. ஜே.எம்.ஏ.ஏ முனசிங்க







# எமது பெருந்தோட்டங்கள்

மட்டுப்படுத்தப்பட்ட பயிர் மீது சார்புற்றிருப்பதை நீக்க விரிவாக்கம் மிகவும் பொருத்தமான யுக்தியான மூலோபாயமாகவுள்ளது.













# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் ஆய்வு

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் ஆய்வு

## முதன்மைச் செயல்பாடுகள் மற்றும் வணிகத்தின் தன்மை

குறித்த ஆண்டில், தேங்காய், ரப்பர் மற்றும் இதர விவசாய உற்பத்திகளை பயிர்ச்செய்கை, உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதே நிறுவனத்தின் முக்கிய பணிகளாக இருந்தன.

## செயல்பாட்டு திறன்

குருணாகல் ப்ளான்டடஷன்ஸ் லிமிற்றற் குருனாகல், கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பல்வேறு விவசாய காலநிலைகள் கொண்ட வலயங்களில் 5,244.58 ஹெக்டயர் நிலப்பரப்பில் 08 பிராந்திய பெருந்தோட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் சிறிய தோட்டங்களால் 2 – 3 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ளன.

### காணிகளின் விரிவாக்கம்

தேசிய மற்றும் பொது தேவைகளுக்காக காணிகள் கையகப்படுத்தும் செயறப்பாடுகளுக்கு நிறுவனம் முகம் கொடுத்துள்ளது. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 1992 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நிறுவனம் 20% (1,310.45 ஹெக்) காணிகளை இழந்துள்ளது. 1992 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்படும் போது நிறுவனத்தின் வசமிருந்த காணியின் பரப்பு 6,555.03 ஹெக் ஆகும்.

| நிதியாண்டில் இறுதியில் | ஹெக்டயர்கள் |
|---|---:|
| 1992 | 6,555.03 |
| 2004 | 5,537.28 |
| 2005 | 5,451.41 |
| 2006 | 5,450.28 |
| 2007 | 5,450.28 |
| 2008 | 5,409.70 |
| 2009 | 5,397.51 |
| 2010 | 5,397.51 |
| 2011 | 5,327.77 |
| 2012 | 5,316.43 |
| 2013 | 5,261.17 |
| **2014** | **5,244.58** |

## பிராந்திய பெருந்தோட்ட காணி விரிவாக்கம்

| | விஸ்தீரணம் (ஹெக்டயர்கள்) |
|---|---:|
| அத்தனகல்ல | 703.22 |
| தம்பதெனியா | 462.18 |
| தொடன்கஸ்லந்த | 798.83 |
| ஹிரியால | 1107.77 |
| கட்டுகம்பொல | 619.13 |
| குருனாகல | 555.80 |
| மகாயாய | 446.26 |
| நாரம்மல | 551.39 |
| | 5244.58 |

## உற்பத்தித் தொகுப்பு

சகல 08 பெருந்தோட்டங்களிலும் தேங்காயே பிரதான பயிராகும். இறப்பர் அத்தனகல்ல, மஹாயாய மற்றும் தொடன்கஸ்லந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. குருனாகல் மற்றும் நாரம்மலையில் இறப்பர் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள புதிய பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு அங்கு பயிர்ச்செய்கையினை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்து. காணி மற்றும் காலைநிலை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருந்தோட்டங்களிலும் தேங்காயே பிரதான பயிராகும் இருப்பினும் ஏனைய பயிர்ச்செய்கைகள் அதை அண்டி பயிரிடப்படுகின்றன

## காணிகளின் ஒதுக்கம்

| | விஸ்தீரணம் (ஹெக்டயர்கள்) |
|---|---:|
| தேங்காய் | 4,097.36 |
| றப்பர் | 250.10 |
| விவசாயம் | 213.72 |
| ஏனைய பயிர்கள் மொனோ பயிர்ச்செய்கை | 10.28 |
| பயிரிடப்படாத | 673.12 |
| | 5,244.58 |

* தேங்காயின் கீழுள்ள ஏனைய பயிர்கள் - 413.83 ha.

## முகாமைத்துவ நிபுணத்துவம்

2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட முகாமைத்துவ மாற்றத்தின் பின்னர் நிறுவனம் தேசிய பொருளாதாரத்திற்கு பாரியளவிலான பங்களிப்பை செய்துள்ளது. அது தேங்காய் தொழிற்துறை மற்றும் அது சார்ந்த சமூகத்தின் நலங்களின் சிறப்பான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தமது நிதி மற்றும் விவசாய செயற்திறன்கள் ஊடாக தேசத்தில் மிகவும் நிபுணத்துவத்துடன் முகாமை செய்யப்படும் ஒரு நிறுவனமாக தம்மை நிரூபித்துள்ளது. தென் ஆசியப் பிராந்தியத்தில் முன்மாதிரியான பெருந்தோட்ட விவசாய வர்த்தக முகாமைத்துவக் கம்பனியாகத் திகழ்வதே குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றறின் நோக்கமாகும்.

2011 தேசிய மட்டத்திலான தேசிய விவசாய வர்த்தக விருதுகள் 2011 விருது விழாவில் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டத்துறை) பிரிவில் தங்க விருதினையும், வெண்கல விருதினையும் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் வென்றது.

2012 மீண்டும் தேசிய விவசாய வர்த்தக விருதுகள் 2012 விருது விழாவில் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தங்க விருதினை தனதாக்கிக் கொண்டது.

2013 தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில் குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீண்டும் தங்கம் வென்று தமது முன்னிலை தன்மை உறுதி செய்தது. இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 03 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மாறியது. காணப்படுகின்றது.

தேசிய விவசாய வர்த்தக விருதுகள் பாரிய உற்பத்தியாளர் (பெருந்தோட்டதுறை) பிரிவில்

குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீண்டும் தேசிய தங்க விருதினை வென்று தமது முன்னிலை தன்மை உறுதி செய்தது. 03 ஆண்டுகள் தொடர்ச்சியாக தங்க விருதினை வென்றதுடன் தங்க விருதினை 04 தடவைகள் வென்றுள்ள ஒரே தேசிய விவசாய உற்பத்தி நிறுவனமாக குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் சாதனைப் படைத்துள்ளது.

## நிதி மீளாய்வு

### வருமானம்

நிறுவனத்தின் வருமானமானது 2014 ஆம் ஆண்டில் உறுதியான ரூ. 576.79 மில்லியன்கள் 21.2% வரை வளர்ச்சிகண்டுள்ளது.2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருமானம் ரூ. 475.89 மில்லியனாகும். தேங்காயே முதன்மையான பாரிய பங்களிப்பை வருமானத்தில் வழங்கியது. வருமான பங்களிப்பு குறிக்காட்டி கீழே தரப்பட்டுள்ளது.

| | 2014 | 2013 |
|---|---|---|
| தேங்காய் | **514.18** | 402.37 |
| இறப்பர் | **39.70** | 62.41 |
| ஏனைய பயிர்கள | **22.91** | 11.11 |
| | **576.79** | 475.89 |

2014 ஆம் ஆண்டில் பெறப்பட்டரூ. 576.79 மில்லியன் வருமானமே நிறுவனத்தின் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய வருமானமாக சாதனை படைத்துள்ளது.

**மொத்த வருமானம் (ரூ.மி.)**




### இலாபம்

2014 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் வரிக்கு பிந்திய இலாபம் 2.9% அல்லது ரூ. 6 மில்லியனால் அதிகரித்துள்ளது. 2013 இல் பெறப்பட்ட வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 208.15 மில்லியன் என்பதுடன் 2014 இல் பெறப்பட்ட வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 214.24 மில்லியனாகும். தேங்காய் மூலம் பெறப்பட்ட இலாபம் மீளாய்வு ஆண்டில் 30.5% ஆக ரூ. 57.86 மில்லியன்களுக்கு அதிகரித்தது. 2013 தேங்காய் மூலமான இலாபம் 189.35 மில்லியன், 2014 இல் 247.21 மில்லியன் ஆகும். எனினும் இறப்பர் செய்கையில் கடந்த ஆணடில் ரூ. 13.98 மில்லியன் இலாபம் பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டில் ரூ. 2.35 மில்லியன் நட்டம் பதிவாகியது. ஏனைய பயிர்கள் ஊடாக இலாபமும் 58.25% களால் ரூ. 5.94 மில்லியன் வரை அதிகரித்தது. 2013 ல் 3.76 மில், இலாபம் பெறப்பட்டது.

மீளாய்வு ஆண்டில் நிர்வாக செலவுகள் ரூ. 131.15 மில்லியனாக 20% அதிகரித்து. 2013 இல் ஏற்பட்ட நிர்வான செலவினம் 109.25 மிலி ஆகும். 2014 ல் வருமான வரிக்கு முந்திய இலாபம் 6.7% அல்லது 14.3 மில்லியன்களான ரூ. 228.01 மில்லியன்கள் வரை அதிகரித்தது. 2013ல் ரூ. 213.62 மில் ஆகும். மீளாய்வு ஆண்டில் ஏற்பட்ட மொத்த வருமான வரி செலவினம் ரூ 13.77 மில்லியனாகும், ஓராணடிற்கு முன்னர் செலவினம் ரூ. 5.48 மில்லியன்.

**வரிக்கு முந்திய மற்றும் பிந்திய இலாபம் (ரூ.மில்)**




## தெங்கு உற்பத்தி

2013 ஆம் ஆண்டின் இறுதியில் 3,264.04 ஹெக்டயர் பரப்பில் தெங்க பயிர்ச்செய்கை உள்ளது. ஆரம்ப காணி விஸ்தீரத்துடன் ஒப்பிடுகையில் இது 20% குறைவாகும். இது அரச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான காணிகள் பெறப்பட்டதன் விளைவாக ஏற்பட்டது. குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தேங்காய் தோட்டங்களில் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 56 மரங்கள் சிறந்த நடைமுறையில் பயிர் செய்கின்றது, பொதுவில் ஏக்கருக்கு 60 மரங்கள் அடர்த்தி வேண்டும். 2005 ல் நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசு கையகப்படுத்தி போது ஏக்கருக்கு 49 என காணப்பட்டதை விடவும் அதிகரித்துள்ளது. 2012 இல் பெற்ற 18 மில் சாதனை விளைச்சலில் இருந்து 13 மில்லியன் வரை கறைந்த போதிலும் எமது தேங்காய் உற்பத்தி 16.7 மில்லியனுக்கு அதிகரித்தது.

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தேங்காய்கள் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தும் பொது ஏலத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புள்ள முறையில் விற்கப்படுகின்றன. நட்டு ஒன்றுக்கான நிகர விற்பனை பெறுமதி 2014 ல் ரூ. 30.65, மற்றும் 2013 ல் ரூ. 30.98 ஆகும். நிறுவனம் மட்டுப்படுத்தப்பட்ட திறனில் கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய்யை தயாரிக்கிறது

**தேங்காய் உற்பத்தி (நட்டு மில்லி)**




குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் வருவாயில் பாரிய பங்கு வகிக்கும் முக்கிய பயிர் தேங்காய் ஆகிறது. 2014 ஆம் ஆண்டில், தேங்காய் இருந்து வருவாய் ரூ. 514.17 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2013 ல் ரூ. 402.37 மில்லியன். மீளாய்வு ஆண்டில் தேங்காய் வருமானம் 27.79% அதிகரித்துள்ளது.

உற்பத்தியை அதிகரிப்பதற்காக மற்றும் பயிர் பாதுகாப்பு தொடர்பாக மாதாந்த தெங்கு விளைச்சலின் அளவை அதிகரிப்பதில் நிறுவனம் கவனம் செலுத்துகிறது. மாதாந்தம் தெங்கு விளைச்சல் கிடைக்கும அளவை பயன் பெறும் நில அளவை 90 வீதத்தால் அதிகரித்துள்ளது.

**தேங்காய் வருமானம் (ரூ.மில்)**




தேங்காய் உற்பத்தி செலவு மீளாய்வு ஆண்டில் ரூ. 53.9 மல்லயன் வரை அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டை விடவும் 25.3% அதிகரிப்பாதும். 2013 இல் உற்பத்தி செலவினம் ரூ. 213.01 மில், 2014 இல் உற்பத்தி செலவினம் 266.96 மில் ஆகும். உற்பத்தி அதிகரிப்பு காரணமாக நட்டு ஒன்றுக்காக கொப் கடந்த ஆண்டில் காணப்பட்ட ரூ. 16.39 லிருந்து ரூ. 15.98 வரை குறைந்தது.

### மாதாந்த அறுவடை பகுதி மற்றும் வீழ்ந்த நட்டு விகிதம்




| | 2014 | 2013 | |
|---|---|---|---|
| பொதுவான கட்டணங்கள் | **151.27** | 116.92 | 29% |
| முதிர்ந்த பகுதி வைத்திருக்க. | **69.56** | 58.43 | 19% |
| பற்றி எடுத்தல். | **39.42** | 34.13 | 15% |
| உற்பத்தி | **6.72** | 3.55 | 89% |
| | **266.96** | 213.02 | 25% |

தொழிலாளர் வெளியீடு மற்றும் தொழிலாளர் தளத்தில் மாற்று அறிமுகமும், அதிகரித்து, விரயங்கள் குறைக்கப்படுகிறது உகந்த அளவில் பராமரிக்க பங்களிப்பு செய்யப்படுகிறது.

## இறப்பர் உற்பத்தி

நிறுவனம் இரண்டாம் தோட்ட பயிராக முதிர்ந்த இறப்பர் 192,62 ஹெக்டேர் பராமரிக்கிறது. நிறுவனத்தின் இறப்பர் செய்கையை அதிகரித்து வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் சர்வதேசரீதியில் காணப்பட்ட இறப்பர் விலை வீழ்ச்சிகாரணமாக சரிவை சந்தித்தது. 2014 இல் பெற்ற மொத்த வருமானம் ரூ. 39.69 மில்லியன் ஆகும் 2013ல் பெற்ற வருமானம் 62.41 மில்லியன் ஆகும். இறப்பர் கி.கி ஒன்றின் விலை 2014 ல் ரூ. 252, 2013 கி.கி விலை ரூ. 330 ஆகும். இது 24% விலை வீழ்ச்சியாகும். தேசிய இறப்பர் உற்பத்தியிலும் 24.4% வீழ்ச்சி காணப்பட்டது. முதல் காலாண்டில் உலர் காலநிலை, இரண்டாவதில் அதிக டிபைவீழ்ச்சி பின்னர் காணப்பட்ட மரப்பால்களின் பாதிப்பு காரணமாகவே இறப்பர் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தில் மொத்த இறப்பர் உற்பத்தி 157,474 கி.கி ஆகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.65% வீழ்ச்சியாகும். நிறுவனம் தரமான RSS இறப்பர் பாளங்களை உற்பத்தி செய்ய இறப்பர் ஆராய்ச்சி மையத்தில் இருந்து நவீன தொழில்நுட்பத்தினை பெற்றுக் கொண்டுள்ளது. புதிய RSS சீட் தொழிற்சாலை அத்தனகல்ல தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 2014 இல் சுற்றுசூழலை பாதுகாக்கும் நோக்கில் நிறுவனம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை பொற்பேற்றுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் இதன் நன்மைகளை பெறலாம் என்று நம்புகின்றோம்.

### இறப்பர் உற்பத்தி (கி.கி 000)




### இறப்பர் வருமானம் (ரூ.மில்)




மீளாய்வு ஆண்டில் இறப்பர் உற்பத்தி செலவு ரூ. 6.3 மில்லியனால் குறைந்துள்ளது. 2013 இல் உற்பத்தி செலவுகள் ரூ. 48.2 மில்லியனாக இருப்பினும் 2014ல் இது ரூ. 42.1 மில்லியன் மாத்திரமே. ஒப்பீட்டளவில் 13.1% வீழ்ச்சியாகும். 04 பிரதான தொகுதிகளின் உற்பத்தி அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன. பால் எடுத்தலில் குறிப்பிடத்தக்க பின்னடைவினை நோக்கலாம். சீரற்ற காலநிலை காரணமாக இதனை செயற்படுத்துவதில் ஏற்பட்ட சிரமங்களே இந்நிலைக்கு காரணமாகும்.

| | 2014 | 2013 | |
|---|---|---|---|
| பொதுவான கட்டணங்கள் | **20.41** | 22.1 | -8% |
| முதிர்ந்த பகுதி வைத்திருக்க. | **4.26** | 4.39 | -3% |
| பற்றி எடுத்தல் | **15.83** | 20.11 | -21% |
| உற்பத்தி | **1.56** | 1.81 | -14% |
| | **42.05** | 48.42 | -13% |

## ஏனைய பயிர்கள்

2005 தொடக்கம் ஏனைய பயிர்களின் நடுகையினை வெற்றிகரமான முறையில் மேற்கொள்கின்றோம். ஏனைய பயிர்களின் விளைநில விஸ்தீரணம் 71.79 ஹெக்டயர்கள் ஆகும். 2014 ம் ஆண்டில் இது 06 மடங்கு அதிகரிப்பாகும். மிளகாய் கறுவா தூரியன் ரம்புடன் டிரெகன்புருட் மர முந்திரிகை கொகோவா மாம் பழம் கொய்யாப் பழம் கோப்பி அன்னாசிப்பழம் பெரிய கொய்யா வாழைப்பழம் என்பள அவையாகும். 2014 இல் ரூ. 22.92 மில்லியனாக காணப்பட்ட இவற்றின் மூலமான வருமானம் 2013 ஆம் ஆண்டில் ரூ. 11.12 மில்லியனாக இருந்தது. இது 106% வெற்றிகரமான அதிகரிப்பாகும்.

ஏனைய பயிர் வருமானம்




## ஐந்தொகை கட்டமைப்பு

ஐந்தொகை கட்டமைப்பு (ரூ.மில்)




உயிரியில் சொத்துகள் மற்றும் சொத்து பொறி ஆதனம் என்பவற்றில் மேற்கொண்ட முதலீடுகள் காரணமாக மீளாய்வு காலத்தில் மொத்த சொத்துக்கள் ரூ. 177.4 மில்லின்களாக அதிகரித்தது. (2013ல் ரூ 1616.45மில்)

### நடைமுறையற்ற சொத்துக்கள்

2014ஆம் ஆண்டு இறுதியில் நிறுவனத்தின் நடைமுறையற்ற சொத்து பெறுமதி ரூ. 540.33 மில்லியன் (2013 - ரூ 473.18 மில்லியன்) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 67.15 மில்லியன் அதிகரிப்பாகும். உயிரியில் சொத்துகள் மற்றும் சொத்து பொறி ஆதனம் என்பவற்றில் மேற்கொண்ட முதலீடுகளே அதிகரிப்பிற்கு காரணமாகும். முதிரா தோட்டங்களில் பராமரிப்பு செலவு முன் கொண்டு வரப்பட்டமை புதிய தோட்டங்களில் முதலீடுகள் என்பனவே உயிரியல் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகும்.

நடைமுறையற்ற சொத்துக்களில் முதலீடு (ரூ.மில்)




### திரவ முகாமைத்துவம

குறுகியகால முதலீகள் காரணமாக குழுமத்தின் நிகர தொழிற்படு மூலதனம் ரூ. 457.69 மில்லியனால் அதிகரித்துள்ளது (2013 - ரூ. 388.82 மில்)

மீளாய்வு ஆண்டில் காசும் குறுகியகால முதலீடுகளும் அதிகரித்துள்ளது. 2013ல் ரூ 335.74 மில்லியனாக இருந்த இத்தொகை 2014ல் 409.71 மில்லியன் வரை அதிகரித்தது. நிறுவனத்தில் செயற்படுத்தி நிதிசார் மூலோபாயங்களின் பயனால் இந்நிலை ஏற்பட்டது. 2014 திசெம்பர் 31 அளவில் நிறுவனம் குறுகியகால முதலீடாக ரூ. 400 மில்லியனை கொண்டிருக்கின்றது. 2013ல் ரூ. 326 மில்லியன். இவை அரச வங்கிகளில் நிலையான வைப்புகளாக வைப்பிலிடப்பட்டுள்ளவைகளையும் உள்ளடக்கும்.

நடைமுறை விகிதாசாரம் 6.51 இற்கு அதிகரித்தது, 2013 ஆம் ஆண்டில் 5.61 ஆகும். உடனடி விகிதாசாரம் கடந்த ஆண்டின் 4.84 இலிருந்து 5.68 வரை அதிகரித்தது.

| | 2014 | 2013 |
|---|---|---|
| நடைமுறை விகிதாசாரம் (தடவைகள்) | **6.52** | 5.61 |
| நிகர தொழிற்படு மூலதனம் (Rs. Mn) | **457.69** | 388.82 |
| பங்கொன்றுக்கான நிகர சொத்து (ரூ) | **72.68** | 64.00 |

### திரவ சொத்து முகாமைத்துவம் (ரூ.மில்)




### ஈக்விட்டி

குறிந்துரைக்கப்பட்ட மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட ஈக்குவிட்டி 200 மில்லியன் மற்றும் ஒதுக்கம் 1253.57 மில்லியன் ஆகும். ஓதுக்கங்கள் 173.23 மில்லியனால் அதிகரித்துள்ளன. ஒதுக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2014 | 2013 |
|---|---|---|
| தக்க வைக்கக் கூடிய வருவாய் | **1043.15** | 889,23 |
| தளபாட ஒதுக்கம் | **203.48** | 183.16 |
| ஏனைய ஓதுக்கம் | **6.94** | 7.62 |
| மொத்த | **1253.57** | 1080.01 |

### நடைமுறையற்ற பொறுப்புக்கள்

பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் காரணமாக நடைமுறை பொறுப்புக்கள் 5.6 மில்லியன் அதிகரித்தன. அறிக்கையிடும் தினத்தில் நிறுவனம் பிற்போடப்பட்ட வரிச் சொத்து ரூ. 12.63 மில்லியன் மற்றும் பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு ரூ. 77.95 மில்லியனையும் கொண்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ல் பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் ரூ. 65.32 மில்லியன் ஆகும்.

### நடைமுறை பொறுப்புக்கள்

நடைமுறை பொறுப்புக்கள் ரூ. 1.39 மில்லியனால் குறைந்தது. (2014 - ரூ. 82.97 மில், 2013 - ரூ.84.36 மில்)

## காசுப் பாய்ச்சல்

காசும் காசுக்கு சமனானவையும் ரூ. 73.79 மில்லியன்காளல் அதிகரித்தது. 2014ம் ஆண்டில் காசும் காசுக்கு சமனானவையும் ரூ. 409.71 மில்லியன்களாகும் (2013 ரூ. 335.74 மில்) செயற்பாடு நடவடிக்கைகளுக்கான நிகர பணம் ரூ. 264.20 மில்லியாக அதிகரித்தது (2013ல் - 228.93 மில்) இலாபத்திற்கு முந்திய செயற்பாட்டு மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகே இதனை எதிர்நோக்க நேர்ந்தது. இதனால் செயற்பாடுகளின் பன உருவாக்கம் மேலெழுந்தது.

முதலீட்டு செயற்பாடுகளில் நிகர பணம் பாவனை ரூ. 120.69 மில் (2013 – 144.60 மில்) சொத்து பொறி ஆதனம் என்பவற்றில் மேற்கொண்ட முதலீடுகளின் பெறுமதி ரூ. 159.58 மில் (2013ல் - 186.70 மில்) முதிரா தோட்டங்களின் விரிவாக்கல், கட்டிட நிர்மாணம், வேலிகள் அமைத்தல் என்பவற்றுக்கே அதிகம் பயன்படுத்தப்பட்டன முறையே ரூ. 82.38 மில், ரூ. 48.68 மில் (செயற்பாடுகள் உள்ளடக்கி) மற்றும் 12.14 மில்லி ஆகும்.

நிதிச் செயற்பாடுகளில் நிகர பணம் பாவனை ரூ. 69.55 மில்லியன் (2013 - ரூ. 74.25 மில்) மக்கள் பெருந்தோட்ட அபிவிருந்நதி சபையின் சொத்துக்களுக்கான குத்தகை வாடகையில் ஏற்பட்ட குறைவே இத்தொகை குறைவதற்கு ஏதுவாகியது.

## பங்கிலாபம்

இன்று அதிகமான அரச நிறுவனங்கள் தமது நிதியினை திறைசேரி மூலம் பெறுகின்றன. அரச முகாமைத்துவத்தின் கீழ் சுயமாக நிதி ஈட்டும் ஒரு அரச நிறுவனமாக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நாம் இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். கம்பனியின் பங்கு ஒன்றின் வளர்ச்சி தொடர்ச்சியாக இடம் பெற்று உள்ளது. திறைசேரிக்கு வருடாந்தம் செலுத்துகின்ற பங்கிலாபத்தை அதிகரிப்பதற்கு எமக்கு முடிந்தது. பங்கிலாபமாக 230 மில்லியன் ரூபா 2007 முதல் தொடர்ச்சியாக எமது தங்க பங்காளருக்கு செலுத்தி 2014 ஆம் அண்டு 45 மில்லியன் ரூபா பங்கிலாபம் கொடுக்க நாம் எதிர்பார்க்கிறோம். கடந்த வருடம் திறைசேரிக்கு செலுத்தி பங்குலாபத்திலும் விட இது 12.5% அதிகரிப்பாகும். 2007 தொடக்கம் இது வரை ரூ. 275 மிலிலயன்கள் பங்குலாபமாக திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளன.

### செலுத்திய பங்குலாபம் (ரூ.மில்)



# ஸ்தீரதன்மை பற்றிய மீளாய்வு

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் ஒரு பெருந்தோட்ட நிறுவனமாக எமது நீடிப்புதிறன் வளர்ச்சி பொருளாதார, சமூக மற்றும் சூழல்கள் உடன் ஒன்றிணைந்ததாக இருக்கும். பொருளாதார வளர்ச்சியானது நிதி ஸ்தீரதன்மையினை பிரதிபலிக்கும். அவை சமூகத்திற்கான பொருளாதார வாய்ப்புகளை வழங்கிடும். அத்துடன் தேசிய மற்றும் ஊழியர்களின் நன்மைகளுக்கும் காரணமாகும். ஒரு விவசாய செயற்பாடாகவுள்ள எமது செயற்பாடுகளின் ஸ்தீரதன்மை வளர்ச்சி சூழலின் ஸ்தீரதன்மையிலும் ஆதிக்கும் செலுத்தும். அதனாலே எமது வத்தக செயற்பாடுகளை சூழலுக்கு பாதகமில்லாமல் முன்னெடுப்பதில் நாம் கவனம் செலுத்துகிறோம். காணி மற்றும் நீர் பாவனையுடன், எமது விவசாய செயற்பாடுகள் இயற்கை வளங்களை பாதுகாக்கும் விதத்தில் இருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக, நாம் சமூக ஸ்தீரதன்மையிலும் நம்பிக்கை கொண்டு, எமது பெருந்தோட்டங்களில் சமுதாய நலன்களையும் உள்வாக்கியுள்ளோம். அது எமது வர்தககத்தின் ஒரு பகுதியாகும். ஒரு பொது நிறுவனமாகவுள்ள நாம் எமது ஆளுகை மற்றும் சமூக நல அக்கறையில் பொது நலன்களுக்கு முன்னுரிமம் அளிப்பதை அவசியமாக கருதுகிறோம். மோசடி மற்றும் ஊழல்களை தவிர்க்க எமது கட்டமைப்பில் சிறப்பான, அவசியமான முகாமைத்துவ மேலாண்மை செயற்பாடுகளை முன்னெடுக்கும் நாம், எமது நல்ல மேலாண்மை நடத்தை மற்றும் பேச்சு ஊடாக ஊழியர்களுக்கும் சிறந்த முன்னு தாரணமாக திகழ்கின்றோம்.

## ஆரோக்கியமான விவசாய நடைமுறைகள்

எமது அனைத்து 08 பெருந்தோட்டங்களிலும் நாம் ஆரோக்கியமான விவசாய நடைமுறைகளை முன்னெடுத்துள்ளோம். நில பயன்பாடு திறன், பயிர்பல்லினபடுத்தல், ஊடுபயிர் மற்றும் நடுதல் கீழ் இது திகரிக்கப்படுகின்றது. குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் 2005 இல் அரச உடமையாகும் போது ஏக்கருக்கு 49 என்று இருந்த நட்டுக்களின் அளவினை தற்போது ஏக்கருக்கு 56 வரை அதிகரித்துள்ளது. உழவு, கவர் பயிர்கள், கால்வாய்கள் சருகு நிலப்போர்வை, நிறுவுதல் எனபவற்றில் ஆரோக்கியமான விவசாய நடைமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த ஆண்டில் ரூ. 64.13 மில்லியன் இளந்தாவரத்தோட்டங்களில் முதலீடு செய்யப்பட்டன. 2014 மேற்கௌ்ளப்பட்ட வெளியேற்றம் நிரப்புபொருள் எண்ணிக்கை 10.647 இருந்தது. ஏக்கருக்கு பனை எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது எங்கள் தோட்டங்களில் எதிர்கால தேங்காய் விளைச்சலை அதிகரிக்க வேண்டும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றின் 2014 ஆம் ஆண்டில் 70% இயற்கை எரு பயன்படுத்திய சேதன பசளைகளின் பயன்பாட்டை அதிகரித்துள்ளது. அனைத்து தென்னை பெருந்தோட்டங்களிலும் ஊட்டச்சத்து தேவையில் 50% இயற்கை உரம் மூலம் வழங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக இயற்கை உரம் மண் அமைப்பு மற்றும் நீர்ப்பிடிமானம் திறனை மேம்படுத்த உதவுகிறது. மேலும், இது உறிஞ்சப்படுதலை

குறைத்து மண் இரும்பு பிடித்து வைக்கும் திறனையும் அதிகரிக்கிறது. உள்நாட்டிம் சர்வதேசத்திலும் ஆர்கானிக் தென்னை தோப்புகளுக்கு காணப்படும் உயர் கேள்வி காரணமாக நிறுவனம் அதன் 1,952 ஹெக்டெயர் அளவு தென்னைத் தோட்டங்களை ஆர்கானிக் தென்னை தோட்டங்களாக மாற்றியுள்ளது.

## பெருந்தோட்டங்களில் செயற்கை ரசாயனங்களின் பயன்பாட்டை குறைத்தல்

சுற்று சூழலை பாதுகாக்கும் விதத்தில் நிறுவனமானது இயலுமான சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளது. அதற்கமைய பெருந்தோட்டங்களில் செயற்கை ரசாயனங்களின் பயன்பாட்டை பெருமளவில் குறைத்து உயிரியல் மற்றும் இயந்திர கட்டுப்பாடுகள் பயிற்சி, மற்றும் இயற்கை உரம் பயன்பாட்டை அதிகரித்துள்ளது.

## உயிரியல் கட்டுப்பாடு

- இரை தேடும் விலங்கு சிற்றுண்ணி (Neoseiulusbaraki) பயன்பாடு தென்னை உள்ள சிற்றுண்ணி (Aceriaguerreronis) கட்டுப்படுத்த - நாம் (Neoseiulusbaraki) இரை தேடும் விலங்கு சிற்றுண்ணி தயாரிக்கக் கூடிய ஆய்வுக்கூடத்தை நிறுவினோம்.
- இந்த நுட்பம், சுற்றுச்சூழல் நட்பானது. நாம் வெற்றிகரமாக இரை தேடும் விலங்கு உற்பத்தி மற்றும் மறுஆய்வு கீழ் இவ்வாண்டில் பொதிகளில் அடைக்கப்பட்ட சிற்றுண்ணி 36,000 இனை தோட்டப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகித்தோம்.
- இந்த உயிரியல் கட்டுப்பாட்டிற்கு மிகவும் அனுகூலமான முடிவுகள் கிடைத்தன.
- இனக்கவர்ச்சி பொறிகளை தென்னை பழம் தோட்டங்கள் மற்றும் சிவப்பு அந்துப்பூச்சி (Rhynchophorusferrugineus) உள்ள < (பழப்பூச்சியினுள் இனங்கள்) கட்டுப்படுத்த.
- சிவப்பு எறும்புகள் (Solenopsis இனங்கள்) அறிமுகம் முந்திரி தோட்டங்களில் உள்ள Helopeltis கொசுவினை கட்டுப்படுத்த.

## பொறிமுறைப் கட்டுப்பாடு

ஒரு களைக்கொல்லி போன்ற கிளைபோசேட்டு பயன்பாடானது பரந்த அளவில் தற்போது பல்வேறு மன்றங்களில் விவாதத்தில் உள்ளது, அரசாங்கம்

இப்போது கிளைபோசேட்டு பயன்பாடு தடை செய்ய ஒரு முடிவை எடுத்துள்ளது. முன்கூட்டியே இந்த நிலைமை அடையாளம் கண்ட நாம், களை மூலம் கட்டுப்படுத்தும் கிளைபோசேட்டு பயன்பாடு பதிலாக உர வட்டங்கள் வேர்ப்பாதுகாப்பிற்கான அட்டைப் பயிர்களை கால்நடை ஸ்தாபனத்தில் மேய்ச்சல், உழவுஇயந்திரங்கள் பயன்படுத்தி செயற்படுத்தினோம்.

- இயந்திரங்கள் பயன்படுத்தி குறைத்தல், உழுதல்
- கால்நடை மேய்ச்சல்
- மூடு பயிர்கள் நிறுவுதல
- வேர்ப்பாதுகாப்பிற்கான உர வட்டங்கள்



இரை தேடும் விலங்கு சிலந்தி உற்பத்தி

## இயற்கை உரம் இடுதல்

அதேபோன்று, “அடிப்படை ஆய்வுகள் நிறுவனம் (IFS) ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டுள்ளன இயற்கை உரம் மற்றும் வெற்றிகரமான சோதனைகளின் பயன்படுத்தி மூலம் ரசாயன உரங்கள் பயன்பாடு குறைப்பதில் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது - ஹத்தானை, கண்டி தேங்காய் இரசாயண உரத்தால் குறைத்து 50% பயோ பிலிம் உயிர் உரம்” பயன்படுத்தின்றோம்.

எங்கள் தோட்டங்கள் உள்ள ரசாயனங்கள் பயன்பாடு குறைப்பு கூடுதலாக, நாம் பயன்பாடு கண்காணிப்பு விழிப்புடன் மற்றும் இரசாயன கையாளுவதில் நிலைத்திருக்கும். ஊழியர்கள் மருந்துகளை தெளித்தல் மற்றும் கையாளுவதில் ஈடுபட. அதிகம் படித்தவர்களாக மற்றும் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு பயன்பாட்டுகள் பயிற்றுவிக்கப்படுகிறார.



விளிம்பு வடிகால்கள்



வேர்ப்பாதுகாப்பிற்கான

## உயிரியல் பல்வகைமை

அனைத்து தோட்டங்களில் நாங்கள் பல்லுயிர் மேம்படுத்தும் நோக்கி தீவிரமாக செயலாற்றுவதுடன் நாம் தற்போதைய மற்றும் எதிர்கால வெற்றிகரமான ஊடுபயிர், ரப்பர், மற்றும் மரங்களுக்கு பொருத்தமான விரிவாக்கத்திற்கு தேவையான சாத்தியமான தொடர் மதிப்பீட்டுகளை செய்கின்றோம். தற்போது 1049.85 ஏக்கரில் இடைபயிர்களை ஸ்தாபித்துள்ளோம். குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் இறப்பர் செய்கை அத்தனகல்ல மகாயாய மற்றும் தொடன்கஸ்லந்த பகுதிகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இறப்பர் செய்கையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து நாம் தற்போது எமது இறப்பர் தோட்டங்களை குருணாகல் மற்றும் நாரம்மலைக்கும் விஸ்தரித்து உள்ளோம்.

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தமது தோட்டக்களிலுள்ள மரங்களை பெறுமதியான உயிரியல் சொத்தாக கருதுகின்றது. மரப்பலகைகள் சுற்றாடல் அதிகார சபை, வனஇலாக திணைக்களம், அமைச்சு மற்றும் பிரதேச செயலகங்களின் அனுமதியுடன் மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் அறுவடை செய்து பெறப்படுகின்றது. அறுவடை செய்யப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் 06 மரங்கள் ஸ்தீரதன்மையை பேணுவதற்காக நடப்படுகின்றன என்பதை நாம் பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

## எமது ஊழியர்கள்

### ஊழியர் நலன்கள் மற்றும் உற்சாகப்படுத்தல்

எமது ஊழியர்கள் மிகவும் தகமைவாய்ந்த போட்டிதன்மை கொண்ட எமது சொத்தாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றோம். அவர்கள் அனுபவமும், திறமையும், நம்பிக்கையும் கொண்டவர்கள். மிகவும் உன்னதமாக நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களின்றி பெருந்தோட்டங்கள் இலாபமீட்டம் நிறுவனங்களாக மாற முடியாது என்பது தெளிவான சான்றாகும். இவ்வாறான சிறந்த மனிதவளம் இருப்பதே குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் நிறுவனத்தின் வெற்றிக்கு ஏதுவாகியது.

குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மொத்த ஊழியர் படையணி 1421 ஆகும்

| தரம் | தலைமை அலுவலகம் | எஸ்டேட்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| நிறைவேற்ற அதிகாரிகள் | 11 | 21 | 32 |
| எழுதுநர்கள் மற்றும் அதனுடன் இணைந்த | 29 | 119 | 148 |
| சிறிய மற்றும் அதனுடன் இணைந்த | 21 | 32 | 53 |
| கவனிப்போர் மற்றும் செக்ரோல் தொழிலாளர்கள் | - | 1,188 | 1,188 |
| மொத்தம் | 61 | 1,360 | 1,421 |

## செயல்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு

2005 ஆம் ஆண்டு கொடக்கம் நிறுவனம் செயல்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றை செயற்படுத்துகின்றது. இந்த ஆரோக்கியமான வெகுமதி திட்டம் ஊழியர்கள் சிறப்பாக செயற்படுவதை உற்சாகப்படுத்துகின்றது. 2014 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுகளின் படி மொத்த இலாபத்தின் 11.4% ஆன ரூபா. 28.7 மில்லியன் செயல்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவான வழங்கப்பட்டுள்ளது. 2013 வழங்கப்பட்ட செயல்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூ. 27.4 மில்லியன் ஆகும். இந்த முன்னேற்பாட்டில் மாதாந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு 2½ மாதச் சம்பளமும் நாளாந்த ஊனியம் பெறுவோருக்கு ரூ. 12,000 மும் வழங்கப்பட்டன.

## எமது ஊழியர்களுக்கான ஏனைய அனுகூலங்கள்

- குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வசதிகள்,
- பாடசாலை புத்தகங்கள் மற்றும் துணிவகைகளுக்கு வட்டியற்ற கடன்,
- ஊழியர்களின் தேவைக்கான தேங்காய்களை சாதாரண விலையான நட்டு ஒன்று ரூ. 01 என்ற அடிப்படையில் வழங்கல்
- விழுந்த நட்டு சேகரிப்புக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு, மற்றும் கவனிப்பாளர்களின் மாதாந்த வருகைக்கான ஊக்குவிப்பு
- கவனிப்பாளர்களில் மினசாரம் அற்றவர்களுக்கான மண்ணெண்னை கொடுப்பனவு
- அனைத்து ஊழியர்களுக்கும் தொழில் நட்ஈட்டுக் காப்புறுதி
- அதிகாரிகாரிகளுக்கு ரூ. 01 மில்லியன் தனிநபர் விபத்து காப்புறுதி,
- நிறைவேற்றதிகாரிகளுக்கு ரூ. 400,00 பெறுமதியான குடும்ப மருத்துவ காப்பறுதி,
- ஊழியர் உயர்கல்விக்கான நிதி உதவி
- ஊழியர் குழந்தைகளுக்கு உயர்கல்விக்கான புலமைப்பரிசில் நிதி உதவி
- எதிர்பாராத மருத்துவ விடுமுறைக்காக ஒருமாத சம்பளம்,
- அத்துடன் நிறுவனம் 12% மற்றும் 3% பங்களிப்பை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வழங்குகின்றது. இப்பங்களிப்பு குறித்த திகதியில் எவ்வித தாமதங்களும் இன்றி செலுத்தப்படுகின்றன.

**ஊக்குவிப்புக் கொடுப்பனவு (ரூ. மில்)**



## வதிவிட வசதிகள்

குறித்த ஆண்டில் எமது ஊழியர்களுக்கான பல நலன்காப்பு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. ரூ. 46.29 மில்லியனுக்கு அதிகமான தொகை 13 கவனிப்பாளர்கள் விடுதி மற்றும் 10 முஜஊஊ தங்குமிடம் ஒன்றை நிர்மாணிக்க செலவிடப்பட்டது. அவர்களுக்கு சிறப்பான வதிவிடம் ஒன்றை ஏற்படுத்துவதே எமது நோக்கமாக இருந்தது. ஊழியர்கள் மற்றும் கவனிப்பார்களுக்கான வாழ்வாதார தரங்கள் சிறந்த குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் ஊடாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

## ஊழியர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஊழியர்களை திறன்களை அபிவிருத்தி செய்வதில் நாம் தொடர்ச்சியாக முதலீடு செய்தோம். இதன் ஊடாக நிறுவனத்தினை மேலும் அபிவிருத்தி செய்ய நாடினோம். 2014 ஆம் ஆண்டில் ஊழியர்களின் திறன் விருத்திக்காக 801 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது 2013 ஆம் ஆண்டில் ரூ. 1.02 மில்லியன்கள் செலவிடப்பட்டன. நாம் பல்வேறு உள்ளக பயிற்றி திட்டங்களை வழங்குகின்றோம். நாம் பல்வேறு டிப்ளோமா, பட்டப்படிப்பு மற்றும் முதுமானி கட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். நாம் நிபுணர்கள் மற்றும் விவசாய துறைசார் அதிகாரிகள் ஊடாக விசேட பயிற்சிகளை கள ஊழியர்களுக்கு வழங்குகின்றோம்.

## ஊழியர்களுடன் வாழ்நாள் உறவினை கட்டியெழுப்புதல்

ஊழியர் உறவினை பேணுவதற்காக நிறுவனம் பல்வேறு ஊழியர் செயற்பாடுகளை ஏற்பாடு செய்கின்றது.

- தொடர்ச்சியாக 06வது ஆண்டாகவும் வருடாந்த பிரித் சமய நிகழ்வு இடம்பெற்றது. வெசவாச் போயா தினத்தில் கண்டி தலதா மாளிகைக்கு 15000 மாதரைக்கள் வழங்கப்பட்டு தாமரைப்பூ தன்சல் இடம்பெற்றது.
- பொசோன் போயா தினத்தில் 08 வது தடவையாகும் வருடாந்த பாற்சோறு தன்சல குருணாகலை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.
- வருடாந்த ஊழியர் குடும்பங்களின் ஒன்றுகூடல்
- பெருந்தோட்டங்கள் இடையிலான கிரிக்கெட் போட்டி
- வருடாந்த சுற்றுலா

எங்கள் மனித வள மேலாண்மை உத்தியானது பெருமளவில் ஊழியர்கள் ஊக்க பங்களிப்பினை மற்றும் நிறுவனத்தின் நோக்கி அதிக உற்பத்திக்கான, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு விளைவித்துள்ளது.


பாலை ஒட்டுக் பயிற்சி


கத்தரித்து பயிற்சி

## உள்நாட்டு தேங்காய் தொழில் துறைக்கு பங்களிப்பு

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மீளாய்வு ஆண்டில் பல்வேறு வழிகளில் தனது பரந்த சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றியது. நிறுவனம் தங்குப் பயிர்ச் செய்கை சபைக்கு 990,633 உயர் தரம் தேங்காய் விதை கொட்டைகள் வழங்கியது. இது தேசிய தேங்காய் அபிவிருத்தி திட்டத்தின் மற்றும் உள்நாட்டு தேங்காய் துறையின் எதிர்கால நலனிற்காகும். நாங்கள் உள்ளூர் நுகர்விற்கும் மற்றும் தொழில் துறையிலும் உயர் தர தேங்காய்களை வழங்கும் முன்னணி விநியோகஸ்தர்கள் ஆகும்.

## குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் மற்றும் சமூகம்




இயற்கை உரம் பெறும் வகையில் அயலில் உள்ள கால்நடை பண்ணையாளர் தமத கால்நடைகளை மேயவிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தேசிய பால் உற்பத்திற்கு கால்நடைகளின் சனத்தொகை அதிகரிப்பிற்கும் உதவுகின்றது. பெருந்தோட்டங்களுக்கு அருகிலுள்ள கால்நடை உரிமையாளர்களின் கால்நடைகள் அவற்றின் பெருந்தோட்டங்களில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்பட்ட நோக்கம் எருவினை பெருவதாகும்.



நாம் அயலிலுள்ள கிராமளசிகளை அவர்களுக்கு உதவும் மற்றும் பணம் பெறக்கூடிய துணை பயிர்களை பயிரிட ஊக்குவிக்கின்றோம். இது அவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும். இது பெருந்தோட்டம் மற்றும் சமூகத்திர் உயிரியல் சமநிலையை பேணும். மேலும் கராம்பரிய விவசாய திறன்களை கொண்டுள்ள திறனான ஊழியர்களை அடையாளம் காணவும் இத்திட்டம் உதவுகின்றது.

மேலும் கண்டி தலதா பெரஹரா மற்றும் ஏனைய சில பெரஹராவிற்கு தேவையான கொப்பராய் தேங்காயை நிறுவனம் வழங்கியது. மதவழிபாடுகள் மற்றும் பாடசாலைகளுக்கு தேவையான மரப்பலகைகளும் வழங்கப்பட்டன.

நீடித்த உறுதித்தன்மைக்கான எங்கள் பணிகளைத் ஒரு சரியான நிர்வகிக்கப்படும் வணிக அல்லது ஒரு தோட்ட பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை வேண்டும். தோட்ட நிறுவனமாக சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பல்லுயிரியம் சார்ந்த வளத்தினை மேம்படுத்தி, ஊழியர்கள் நல்வாழ்வு மற்றும் தேசத்திற்கு உதவும் நேரத்தில் பொருளாதார சாத்தியமான விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.



# இடர் முகாமைத்துவம்

குருணாகல் ப்ளான்டேஷன் லிமிறெற் தெங்கு, இறப்பர் மற்றும் துணைப் பயிர்களின் அறுவடை, சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய பல்வேறு இடர் தன்மைகளுக்கு முகங்கொடுத்தது. சமூக அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளே இதில் தாக்கம் செலுத்தியது.

சரியான நிதி, செயற்பாட்டு மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் மீதான முகாமைத்துவ செயற்பாடுகளை இவற்றை சிறப்பான செயற்பட உதவின.

## செயற்பாட்டு இடர்

தேங்காய் விற்பனையே எமது பிரதான வருவாய் மார்க்கமாகும். உற்பத்தியில் 70% உள்நாட்டு தேவைகளுக்கே நுகரப்படுகின்றது. மிகுதியான 30% மாத்திரமே ஏனைய தொழிற்துறை தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக அதிக விளைச்சலும் குறைந்த வருமானத்தையும் பெற்றுத்தருகின்றது. தரமான தேங்காய் உற்பத்திகளை மேற்கொண்டு அறுவடை குறைந்த போதிலும் கொள்வனவாளர்களால் வரவேற்கப்பட்டது. இதனால் தெங்கு அதிகார சபையில் தேங்காய் நட்டு ஏல விற்பனையில் பாரிய விற்பனை பங்களிப்பை செய்ய முடிந்தது. போட்டியினை சமாளிக்க நிறுவன உள்ளூர் கொள்வனவாளர்கள் தளமொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் அதிக விளைச்சலின் போதும் இது நன்மையளிக்கும். நெகிழ்வான சேகரிப்பு தன்மை போக்குவரத்து வசதி, ஏற்றி இறக்கும் கால அவகாச அதிகரிப்பு என்பன கொள்வனவாளர்களின் சிநேகபூர்வ நிறுவனம் எனற அங்கீகாரத்தை பெற்றுத்தந்தது.

மோசமான காலநிலை பாரிய சவாலாக உருவெடுத்துள்ளது. இது தேங்காய் உட்பட சகல விவசாய உற்பத்திகளையும் பாதித்துள்ளது. அதிகமாக மழை வீழ்ச்சி, இயற்கை உரமானியத்திற்கு சாதமானதல்ல, நிறுவனத்தின் இறப்பர் பயிர் செய்கையும் காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுக்கும் வகையில் தயார் படுத்தப்பட்டு வருகின்றது.

## நோய்க்காவுகள்

வெலிகம வில்த் தாக்கம் மற்றும் சிலந்திகளின் தாக்கம் என்பன நாம் எதிர்கொண்ட சவாலான நோய்காவுகள் ஆகும். வெலிகம வெல்த் தாக்கம் பரவாமல் இருக்க மரங்கள் கழற்றப்பட்டதுடன் இன்று இது தெங்கு அமைச்சினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த பரம்பலை கண்களால் நோக்கும் போதே கண்டறியக்கூடிய அறிவினை தற்போது ஊழியர்கள் பெற்றுள்ளனர். சூழலுக்கு மாசற்ற முறைகளால் இது தற்பொழுது கட்டுப்பாட்டிலுள்ளது. எமது ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், நெருக்கமான கண்காணிப்பு பணிகள் காரணமாக இதனை ஆரம்பத்திலேயே கண்டறிக்கூடியதாக இருந்தது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஊழியர்களுக்கு தொடர்ச்சியான அறிவு மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

## பயிர்ப் பாதுகாப்பு

இயற்கை மற்றும் ஏனைய பாதிப்புகளுக்கு மேலதிகமாக தேங்காய் களவினால் அதிக பாதிப்பு ஏற்படுகின்றது. சகல தோட்டங்களிலும் இவ்வாறான களவுகள் பதியப்பட்டுள்ளன. பாதுகாப்பு அதிகரிப்பு மற்றும் விழுந்துள்ள நட்டுகளின் சேகரிப்புகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் மூலம் அறுவடை 90% வருமான அதிகரிப்பை தந்துள்ளது. வேலிகள் அமைத்தல் மற்றும் நெருக்கமான கண்காணிப்புகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. முக்கிய சிரேஷட ஊழியர்கள் இதில் அதிக அக்கறை காட்டியுள்ளனர். கண்காணிப்பாளர்கள் சேகரித்து வழங்கும் விழுந்த நட்டுகளுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தம், தீ மற்றும் களவினால் ஏற்படும் சேதங்களுக்கான நிறுவனம் காப்புறுதி ஒன்றையும் செய்துள்ளது.

# இடர் முகாமைத்துவம்

## ஊழியர் பற்றாக்குறை

அறுவடைக்கான திறமையான ஊழியர்களின் பற்றாக்குறை என்றும் காணப்பட்டு வருகின்றது. திறமையற்ற ஊழியர்களின் செயற்பாடுகள் தினசரி முகாமைத்துவ செயற்பாடுகளில் தாமதங்களையும் சிரமங்களையும் ஏற்படுத்தியுள்ளது. தேயிலை மற்றும் இறப்பர் போன்று தேங்காய்க்கு வதிவிட ஊழியர் அணியொன்று இல்லை. விதைவிதித்தல், வாய்க்கால் மற்றும் உரமிடுவதற்கு நிறுவனம் இயந்திர உபகரணங்களை பயன்படுத்துகின்றது. நாம் இயந்திரமயமாக்கல் ஊடாக சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளோம்.

இலவச வதிவிடம், நீர், மின்சாரம் மற்றும் சலுகை விலையில் தேங்காய், செயற்திறன் அடிப்படையில் ஊக்குவிப்பு தொகை, பணிக்கொடை அங்கீகாரம், மிகையூதியம், பிள்ளைகளுக்கு புலமைபரிசில், பல்வேறு கடன் வசதிகள், செலுத்த வேண்டியவைகளுக்கான உதவி, நிபுணத்துவ பயிற்சி, சிநேகபூர்வ மற்றும் ஒழுக்கமான வேலைச் சூழல் என்பன ஊழியர்கள் மத்தியில் சிறந்த முன்னேற்றத்தை நிறுவனத்திற்கு பெற்றுத்தந்து நன்மைளித்துள்ளது.

## காணி கையகப்படுத்தல் இடர்தன்மை

தேசிய மற்றும் பொது தேவைகளுக்காக காணிகள் கையகப்படுத்தும் செயறப்பாடுகளுக்கு நிறுவனம் முகம் கொடுத்துள்ளது. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 1992 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நிறுவனம் 20% காணிகளை இழந்துள்ளது. தெங்கு அபிவிருத்தி அமைச்சின் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் காரணமாக இந்த இடர் தன்மை தற்பொழுது பெரிதும் குறைந்துள்ளது.

## தொழிற்சங்கங்கள், சமூக மற்றும் சுற்றாடல் மாற்றங்கள்

தொழிற்துறை நலன்களின் முக்கியத்துவங்களை அறிந்துள்ள நிறுவனம் தொழிற்சங்க மற்றும் ஊழியர் முன்னணி சிலோன் உடன் ஒருங்கிணைந்த ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது. சரியான நேரத்தில் ஊர்தியம், தாமதமற்ற கொடுப்பனவுகள், தொழில் நஷ்டஈடுகள், தொழிலாளர் பிரச்சினைகள் என்பன கவனம் செலுத்தப்படும்.

# கூட்டுறவு மேலாண்மை

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நேர்மை, கூட்டுத்தாபனச் சமத்துவம் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறும் தன்மை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்குகின்றது. கம்பனி இயங்கும் சூழலை வளப்படுத்தவும் சகல அக்கறையுடைய தரப்புகளுடன் வலிமையான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குமான தனது முயற்சிக்கு இந்த மிருசவானக் கோட்பாடுகள் அடித்தளமாக அமையும். எமது கம்பனியின் சகல செயற்பாடுகளும் அக்கறை உடைய தரப்புகளின் நலன்கள் கருதி ஒழுக்கவிழுயமியங்களைக் கொண்டு மேற் கொள்ளப் படுகின்றன. வணிக நடவடிக்கையின் நிலை பெறுதகு தன்மையையும் ஒழுங்குறுத்துகை இணக்கப் பாட்டையும் உத்தரவாதப் படுத்துவதற்காக மட்டுமன்றி வணிக விழுமியங்ககள் மேம் படுத்துவதற்கும் எனத் திட்டமிடப் பட்டிருக்கின்ற கொள்கைகளையும், நடைமுறைளையும் மற்றும் நடவடிக்கைளையும் கொண்டு பிரதிபலித்துக் காணப்படும் சரியான பங்களிப்புப் பணிகைளயும்,கட்டமைப்புகளையும், வளங்களையும் கொண்டு இந்தப் பொறுப்புப் பணி ஆதாரப்படுத்தப் படுகின்றது.

## பணிப்பாளர்கள் சபை

இறுதியாக கம்பனியின் செயலாற்றுகை தொடர்பில் பொறுப்பும், வகையும் கூறக்கூடியது பணிப்பாளர்கள் சபையாகும். அதே நேரம் இது கூட்டுத் தாபனத்தினது நிருவாக நடவடிக்கையின் இன்றியமையாத அங்கமாகவும் விளங்கும்.

## பொறுப்புக் கூறும் தன்மை

பொறுப்புக் கூறும் தன்மையானது முக்கியமான கொள்கைகளையும் திறமுறை நோக்கங்களையும் நிலைப் படுத்தும் அதே நேரம் செயற்படுத்துகையையும் உத்தரவாதப்படுத்தும். இறுதியாக கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பயன்தகு தன்மையினதும் நிதி சார் தகவல்களினதும் ஒருமைப்பாட்டிற்கான பொறுப்புக் கூறும் தன்மையை பணிப்பாளர்கள் சபை கொண்டிருக்கும்.

## பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்கள்

தலைவர் ஒருவர் அடங்கலாக ஏழு நிறைவேற்றல்லாப் பணிப்பாளர்கள் சபையில் அடங்கி இருந்தனர்.

## பணிப்பாளர்கள் சபையின் கூட்டங்கள்

கூட்டங்கள் மாதாந்த அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இந்தக் கூட்டங்களின் போது, பணிப்பாளர்கள் சபை கம்பனியின் திறமுறை வழிகட்டலை விதிக்கும் என்பதுடன் சகல நடைமுறை சார் செயற்பாடுகளினதும் மூலதனச் செலவின நிழ்ச்சித் திட்டங்களினதும் முன்னேற்றம் பற்றியும், வருடாந்த வரவுசெலவுகள் பற்றியும் மீளாய்வும் செய்யும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்கூட்டி உரிய ஆவணங்கள் பணிப்பாளர்கள் சபைக்கு வழங்கப்படுகின்றன.

புதிய பணிப்பாளர் சபை 2015 மார்ச் 13 ஆம் திகதி நியமனம் பெற்றது. 2014 மீளாய்வு ஆண்டில் முன்னைய சபை 12 தடவைகள் கூடியுள்ளது. கூட்டத்திற்கு பங்கேற்ற பணிப்பாளர்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| கலா. சுனில் ஜயசிங்க - தலைவர் | 11/12 |
| திரு. பீ.ஜீ. அமரகோன்<br>நிறைவேற்று பணிப்பாளர் | 10/12 |
| திரு ஆர்.டப்ளியூ.எம். ஜுட் ரூகாந்த பெரேரா<br>தொழிற்படு பணிப்பாளர் | 11/12 |
| திரு. ஏ.பி. குரும்பலபிட்டிய<br>பணிப்பாளர்/ திறைசேரி பிரதிநிதி | 12/12 |
| பேரா. டபிள்யூ. பி. காமினி டி அல்விஸ் | 9/12 |
| திரு. ஜீ.வி.ஏ.டபிள்யூ.டீ. காமினியாராச்சி | 8/12 |
| திரு. ஜே தேவபிரன் | 9/12 |

## கணக்காய்வுக் குழு

இந்த கணக்காய்வுக் குழுவில் நிறைவேற்றல்லாத மூன்று பணிப்பாளர்கள் அடங்குகின்றனர். திறைசேரிச் சபை பிரதிநிதி கணக்காய்வுக் குழுவின் தலைவராக இருப்பார். கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் காலாண்டு அடிப்படையொன்றில் நடாத்தப்படுகின்றன. திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் சபை அங்கத்தவரின் தலைமையில் கணக்காய்வுக் குழு சந்திப்புக்கள் இடம்பெறும். அழைப்பின் பேரில் இந்த கணக்காய்வுக் குழு கூட்டங்களில் பிரதான நிறைவேற்று அலுவலகர், தலைவர், தொழிற்படு பணிப்பாளர், சிரேஸ்ட முகாமையாளர்கள், பிராந்திய அத்தியட்சகர்கள், கணக்காய்வு முகாமையாளர், நிதி முகாமையாளர் ஆகியோர் பங்குபற்றுவார்கள். புதிய கணக்காய்வுக் குழுவானது 2015 ஏப்ரல் 07 ஆம் திகதி செயற்படும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளது.

22014 ஆம் ஆண்டில் காணக்காய்வுக் குழு 04 தடவை சந்தித்துள்ளதுடன், காணக்காய்வுக் குழு சார்பில் பணியாற்றியவர்களின் வருகை விபரங்கள்.

| | |
|---|---|
| திரு. ஏ.பி. குரும்பலபிட்டிய திறைசேரி பிரதிநிதி | 4/4 |
| திரு. ஜீ.வி.ஏ.டபிள்யூ.டீ. காமினியாராச்சி | 3/4 |
| திரு. ஜே தேவபிரன் | 4/4 |

## சட்டமுறைத் தேவைபாடுகளுடனான இணக்கப்பாடு

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் சங்க உறுப்புரைகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கும், நாட்டின் அரச உடமை வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் ஏற்புடைய ஏனைய நியதிகள் நிபந்தனைகளுக்கும் கம்பனி இயைந்தொழுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பணிப்பாளர்கள் சபை இயன்ற முயற்சிகளை மேற் கொள்கின்றது.

கம்பனியின் நிதிக்கூற்றுகள் இலங்கைக் கணக்கீட்டுத் 2007 ஆம் ஆண்டு கம்பனிகள் சட்ட இல 07 இன் தரவுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்படுகின்றனவா என்பதை பணிப்பாளர்கள் சபை உறுதிசெய்யும்.



# நிதி அறிக்கைகள்



# பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை

2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்களாகிய நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## பொது

குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் (KPL) ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள நிறுவனமானது 1982 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முழுமையான அரச உடமைக் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் PB 1319 புதிய கம்பனியாக உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் 1987 இன் 23 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அரச உரித்துடைய நிறுவனமாக மாற்றப்பட்டது. இலங்கை அரசாங்க திறைசேரியின் செயலாளரின் தனிபங்குடைமை நிறுவனமாக செயற்படும் குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் அதன் தங்க பங்குதாரர் ஆகும். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலம் இல. 80, தம்புள்ளை வீதி, குருணாகலையில் அமைந்துள்ளது.

## பிரதான செயற்பாடுகள் மற்றும் வணிகதன்மை

குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் தேங்காய், இறப்பர் மற்றும் துணைப் பயிர்களை பயிரிடுவதன் ஊடாகவும், அவற்றை உற்பத்தி செய்வதன் ஊடாகவும், அவற்றைப் பதனிடுவதன் ஊடாகவும் மற்றும் அவற்றை விற்பனை செய்வதன் ஊடாகவும் பல வித விவசாய உற்பத்திகள் அடங்கிய தோட்டங்களை குருணாகல், கம்பஹா மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| அத்தனகல்ல | கடுகம்பொல |
| தம்பதெனியா | குருணாகல், |
| தொடன்கஸ்லந்த | நாரம்மல |
| ஹிரியால | மஹாயாய |

## கீழ் அக்கறை

பணிப்பாளர்கள் சபை எதிர்வு கூறக் கூடிய எதிர் காலத்தில் தனது இயக்கச் செயற்பாடுகளைத் தொடருவதற்கான போதிய வளங்கள் எமது கம்பனியின் வசமுள்ளன என பணிப்பாளர்கள் சபை திருப்தியடைகின்றது. அதற்கிணங்க 'கீழ் அக்கறை' எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

2014 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்கள் சபையினால் உரிய விதத்தில் கையொப்பமிடப்பட்ட முழுமையான நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வாளாரின் அறிக்கையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் தரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டின் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றம் நிகழவில்லை.

## வருமானம்

2014 ஆம் ஆண்டில் கம்பனி ஈட்டிய மொத்த வருமானம் 576.79 மில்லியன் ரூபாய் (2013 ஆண்டு 475.89 மில்லியன் ரூபாய்) தொகையாகவும், அதே வேளை அதன் இயக்கச் செயற்பாட்டு வருமானமும் பிற வருமானமும் 103.03 மில்லியன் ரூபாய் (2013 ஆம் ஆண்டில் 95.83 மில்லியன் ரூபாய்) தொகையாகவும் காணப்பட்டன. குறித்த மீளாய்வு ஆண்டில் பெற்றுக் கொண்ட வட்டி வருமானம் ரூ. 31.34 மில்லியன் (2013 - ரூ. 44.34 மில்லியன்) ஆகும். இது நிதிக் கூற்றுக்களின் நிகர நிதி வருமானத்தில் தரப்பட்டுள்ளது.

## பெபேறுகளும் எதிர்வுகூறலும்

நிறுவனத்தின் வரிக்கு பிந்திய இலாபம் 2014 ஆம் ஆண்டில் ரூ. 214.24 மில்லியனாகும் (2013 - ரூ. 208.15 மில்லியன்) கூட்டிணைக்கப்பட்ட வருமானக்கூற்றில் நிறுவனத்தின் நிதி பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன.

| ரூ. மில். | **2014** | 2013 |
|---|---|---|
| தெங்கு இலாபம் | **247.21** | 189.35 |
| இறப்பர் இலாபம்/ (நட்டம்) | **(2.36)** | 13.99 |
| இலாபம் ஏனைய பயிர்கள் | **5.94** | 3.76 |
| இலாபம் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | **103.03** | 95.83 |
| | **353.83** | 302.92 |
| நிர்வாக செலவுகள் | **(131.15)** | (109.25) |
| இலாபம் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | **222.68** | 193.67 |
| நிகர நிதி வருமானம் | **-** | - |
| வட்டி வருமானம் | **31.34** | 44.34 |
| வட்டிச் செலவினம் | **(26.01)** | (24.38) |
| | **19.96** | 5.34 |
| வருமான வரி சார் செலவுகளுக்கு முன்னருள்ள இலாபம் | **228.01** | 213.63 |
| வருமான வரி சார் செலவுகள் | **(13.78)** | (5.48) |
| ஆண்டிற்கான இலாபம் | **214.24** | 208.15 |

## மூலதன விரிவாக்கம் மற்றும் முதலீடுகள்

2014 ஆம் ஆண்டில் ரூ. 159.58 மில்லியன் (2013 - ரூ. 186.70 மில்லியன்) தொகை நிலையான சொத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 82.38 மில்லியன் (2013 – 93.66 மில்.) முதிர்வுறா பயிரில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## குறுங்கால முதலீடுகள்

எமது கம்பனி 2014 திசெம்பர் 31 இல் குறுங்கால முதலீடுகளை 400 மில்லியன் ரூபாய் வரை அதிகரித்துள்ளது (2013 திசெம்பர் 31 இல 326 மில்லியன்). அரச வங்கியிலுள்ள நிலையான வைப்புக்கள் இந்த முதலீடுகளில் அடங்குகின்றன. (இலங்கை வங்கி ரூ. 65 மில்லியன், மக்கள் வங்கி ரூ. 175 மில்லியன், தேசிய சேமிப்பு வங்கி ரூ. 160 மில்லியன்)

## எடுத்துரைக்கப்பட்ட மூலதனம்

பங்குகளின் விநியோகம் தொடர்பில் கம்பனிக்குக் கிடைத்த மொத்தத் தொகைகள் தற்பொழுது எடுத்துரைக்கப்பட்ட மூலதனம் எனக் குறிப்பீடு செய்யப் படுகின்றன. 2014 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிக்கு கம்பனியின் எடுத்துரைக்கப்பட்ட மொத்த மூலதனம் 200,000,010 ரூபாவாகக் காணப்பட்டது. 20,000,000 சாதாரன பங்குகளும் 01 கோல்டன் பங்கும் இதில் அடங்குகின்றன. குறித்த மீளாய்வு காலப் பகுதியில் பங்கு ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படவில்லை.

## ஒதுக்கீடு

2014 திடிசம்பர் 31 இறதியில் இலாபத்திற்கு ஒதுக்கப்பட்டது ரூ. 1043.15 மில்லியனாகும். மர ஒதுக்கம் 203.48 மில்லியன்கள் மற்றும் ஏனைய ஒதுக்கம் 6.94 மில்லியனாகும்..

## பணிப்பாளர்கள்

2014 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களிடையே மாற்றம் நிகழ்ந்தது. 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் பணிப்பாளர்கள் குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றற் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையில் பணியாற்றியிருந்தனர்.

**01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரை**

| பெயர் | பதவி நிலை | நியமனம் பெற்ற திகதி | இராஜினாமா செய்த திகதி |
|---|---|---|---|
| கலாநிதி. கே. சுனில் ஜயசேகர | தலைவா் | 24.09.2013 | 30.01.2015 |
| திரு. பி.ஜீ. அமரகோன் | நிறைவேற்று இயக்குனா் | 24.09.2013 | 16.03.2015 |
| திரு. ஆர்.டபிள்யூ. எம்.ஐ.ஆர். பெரேரா | தொழிற்படு பணிப்பாளா் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஏ. பி. குரும்பலபிட்டிய | பணிப்பாளர்/ திறைசேரி பிரதிநிதி | 24.09.2013 | 05.03.2015 |
| பேராசிரியர். டபிள்யூ. பி. காமினி த அல்விஸ் | பணிப்பாளர் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஜீ.வி.ஏ.டபிள்யூ.டீ. காமினியாராச்சி | பணிப்பாளர் | 24.09.2013 | 12.03.2015 |
| திரு. ஜே தேவபிரன் | பணிப்பாளர் | 24.09.2013 | 28.01.2015 |

**தற்போதைய பணிப்பாளர் சபை**

| பெயர் | பதவி நிலை | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|
| திரு. ஏ.எம். பியசோம உபாலி | தலைவா் | 29.01.2015 |
| திரு. தி.எம். பண்டாரநாயக்க | தொழிற்படு பணிப்பாளா் | 26.03.2015 |
| திரு. எச்.ஏ.என். சமன் குமார | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி | 06.03.2015 |
| திரு. சுனில் எஸ். அலஸ் | பணிப்பாளர் | 06.03.2015 |
| திரு. டி.பி. விஜேசிங்க | பணிப்பாளர் | 13.03.2015 |
| திரு. டபிள்யூ.எம்.டி.பி. அபேரத்ன | பணிப்பாளர் | 13.03.2015 |
| திரு. டபிள்யூ.ஏ.டி.டி.எம். பிரியன்த | பணிப்பாளர் | 13.03.2015 |

## பணிப்பாளர்களுக்கு ஒப்பந்தங்களிலிருக்கும் அக்கறை

பணிப்பாளர்களுக்கு ஒப்பந்தங்களில் நேரடியான அல்லது மறைமுகமான அக்ககறைகள் ஏதும் கிடையாது.

# பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை

## பணிப்பாளர்களின் பங்குடைமை

கம்பனியின் பணிப்பாளர்களுக்கு அல்லது அவர்களின் துணைவர்களுக்கு கம்பனியில் எந்தவித பங்குடைமைளும் கிடையாது.

## கணக்காய்வுக் குழுக்கள்

பின்வரும் சபை உறுப்பினர்கள் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கணக்காய்வுக் குழு சார்பில் பணியாற்றியிருந்தனர்.

| | |
|---|---|
| திரு. ஏ. பி. குரும்பலபிட்டிய | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி (05.03.2015 இராஜினாமா செய்தார்) |
| திரு. ஜீ.வி.ஏ.டபிள்யூ.டீ. காமினியாராச்சி | பணிப்பாளர் (12.03.2015 இராஜினாமா செய்தார்) |
| திரு. ஜே தேவபிரன் | பணிப்பாளர் (28.01.2015 இராஜினாமா செய்தார்) |

## தொழில்வாய்ப்பு

எமது கம்பனி ஒரு சம தொழில்வாய்ப்புக் கொள்கையைக் கொண்டுள்ளது. சகல தீர்மானங்களும் தகைமை அடிப்படையில் அமைந்தனவாகும் என்பதை உத்தரவாதப் படுத்துகின்ற குறித்த தேர்வு, பயிற்சி, அபிவிருத்தி மற்றும் பதவியுயர்வு சார் கொள்கைகள் என்பவற்றில் இந்தக் கோட்பாடுகள் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன. இனம், சமயம், அரசியல் அபிப்பிராயம், பால் நிலை, விவாக நிலை அல்லது பௌதீக ஆற்றல் என்ற பாரபட்சம் காட்டாது எமது கம்பனி சகல ஊழியர்களுக்கும் சம தொழில் வாய்ப்புக் கொள்கையைச் செயல் முறைப் படுத்துகின்றது.

## நியதிச்சட்டமுறைக் கொடுப்பனவுகள்

கம்பனியினால் செலுத்தத்தகு சகல வாரிகளும், வரித் தீர்வைகளும், கட்டணங்களும் மற்றும் அதன் பேரில் செலுத்தத்தகு சகல வரிகளும், வாரித் தீர்வைகளும், கட்டணங்களும் மற்றும் பங்களிப்புத் தொகைகளும், மற்றும் கம்பனியின் ஊழியர்கள் தொடர்பில் செலுத்தத்தகு அத்தகைய வரிகளும், வரித் தீர்வுகளும் மற்றும் கட்டணங்களும், ஐந்தொகைக் கணக்குத் திகதிக்கு கம்பனியினால் செலுத்தத்தகு நிலுவைகளாகக் காணப்பட்ட சகல அறிந்த நியதிச்சட்டமுறைக் கொடுப்பனவுகளும் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளன அல்லது அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என தமது அறிவுக்கு எட்டிய வகையில் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

## ஐந்ததாகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்

ந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தவிர கம்பனி மீது அல்லது குழு மீது ஏதேனும் கற்புலத் தாக்கங்களைக் கொண்டிருக்கலாம் எனும் சம்பவங்கள் ஏதும் ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் நிகழவில்லை.

## கணக்காய்வாளர்கள்

2014 ஆம் ஆண்டிற்கான எமது கம்பனியின் கணக்குகள் தயானந்த சமரவிக்கிரம அன்ட் கம்பனி (பட்டயக் கணக்காளர்கள்) என்ற கணக்காய்வுக் கம்பனியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## வருடாந்த அறிக்கை

பணிப்பாளர்கள் சபை 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி கம்பனியின் நிதிக் கூற்றுக்களை அங்கீகரித்தது.

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

வருடாந்தப் பொதுக் கூட்டம் 2015 ஆம் ஆண்டு ஜூனி 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணிக்கு இல. 80, தம்புள்ளை வீதி, குருணாகல் எனும் முகவரியில் நடைபெறும்.

வருடாந்தப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் பத்திரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் வருடாந்த அறிக்கை கையொப்பம் இடப்படுகின்றது.

**திரு. ஏ.எம். உபாலி பியசோம**
தலைவர்

**திரு. எச்.ஏ.என். சமன் குமார**
பணிப்பாளர்/திறைசேரி பிரதிநிதி

**கூட்டிணைந்த ஆலோசனை சேவைகள் (தனியார்) லிமிற்றற்**
செயலகங்கள் - குருணாகல் ப்ளான்டேஷன்ஸ் லமிற்றற்
குருணாகலை, 02 ஜுன் 2015

# பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பின்வரும் கூற்றில் குறிப்பீடு செய்யப் பட்டிருக்கின்றன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் படுவது மீதான கணக்காய்வாளர்களின் பொறுப்புக்கள் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன

## நிதிக் கூற்றுக்களில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருக்கும்.

- குறித்த நிதி ஆண்டிற்கான கம்பனியின் இலாப நட்டத்தின் உண்மையான நியாயமான கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றவொரு வருமானக் கூற்று,
- குறித்த சட்டத்தின் தேவைப்பாடுகளை அனுசரிக்கின்ற, நிதி ஆண்டு முடிவில் கம்பனியின் உண்மையான நியாயமான அரச விவகாரங்களைகளப் பிரதி

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தவேண்டியவை:

- மூலப்பொருட்களின் வெளிச்செல்கை ஏதுமிருப்பின், அந்த மூலப்பொருட்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்றும், அந்த மூலப்பொருட்கள் விபரிக்கப்பட்டுள்ளனவா என்றும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா என்றும், தொடர்ச்சியானவொரு விதத்தில் அந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளனவா என்றும், ஏற்புடைய,
- சகல கணக்கீட்டு நியமங்களும் உரிய விதத்தில் பின்பற்றப் பட்டுள்ளனவா என்றும்,
- மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளும் தீர்வுகளும் நியாயமான மதிநுட்பமுள்ளனவா என்றும், உத்தரவாதப்படுத்தத் தேவைப்படுகின்றனர்,
- தனது இயக்கச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளதா என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதுடன், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் நடவடிக்கையில் 'நிகழ் எண்ணக்கரு' அடிப்படை பிரயோகிக்கப் பட்டுள்ளதா என்பது பற்றி நியாயப்படுத்தவும் வேண்டும்.

கம்பனியின் நிதி நிலையை நியாயமான செவ்வையான விதத்தில் உத்தரவாதப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தப்படுத்தல் வேண்டும் எனவும், போதிய கணக்கீட்டுப் பதிவுகளை கம்பனி பேணி வருகின்றதா என்பதையும், 2007 கம்பனிகள் இல 7 சட்டத்தின் தேவைப்பாடுகளை அனுசரித்து நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படுகின்றனவா என்பதையும் உத்தரவாதப்படுத்தும் பொறுப்பும் பணிப்பாளர் சபைக்கு இருக்கின்றது.

அதே போன்று கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாத்துப் பேணுவதற்கும், மற்றும் இது தொடர்பில், மோசடிகளையும் ஏனைய முறைகேடுகளையும் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதற்கான நோக்கத்துடன் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைளைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

பணிப்பாளர்கள் சபை நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்கும், மற்றும் தேவையான எந்தவித நடவடிக்கைகளை கணக்காய்வாளர் எடுப்பதற்கும், அதே நேரம் அவர்களின் கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிக்க இயலுமான வகையில் அவர்கள் பொருத்தம் எனக் கருதும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

கம்பனி சட்டத்தின் பிரகாரம் வருடாந்த பொது கூட்டம் நடைபெறவுள்ள திகதிக்கு முன்னர் குறைந்த பட்சம் 15 வேலை நாட்களுக்கு முன்னரே வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையினை நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்புவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

இந்தக் கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தமது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளனர் என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

## உடன்பாட்டு அறிக்கை

தமது அறிவுக்கு எட்டிய வகையில் ஐந்ததாகைக் கணக்குத் திகதிக்கு கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச் சட்ட முறைக் கொடுப்பனவுகளும் செலுத்தித் தீர்க்கப் பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

பணிப்பாளர்கள் சபை சார்பில் இங்கு கையொப்பமிடப்படுகின்றது.



**கூட்டிணைந்த ஆலோசனை சேவைகள் (தனியார்) லிமிற்றற்**
செயலகங்கள் - குருணாகல் ப்ளான்டடஷன்ஸ் லிமிற்றற்

# சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை

*Dayananda Samarawickrema & Co.,*
CHARTERED ACCOUNTANTS

**Partners**
H.G. Dayananda FCA
K.G. Chandana Kumara ACA
**Consultant**
T.H. Dharmasena FCA, BA

No. 20/26, Station Lane, (Janatha Pola Road)
Nugegoda, Sri Lanka.
Tele : 2854614, 2809650, 2822940
Fax : 2820112
E-mail : dsandco@sltnet.lk

## குருனாகல் ப்ளான்டேஷன் லிமிற்றற் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு,

### நிதிக் கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

2014 திசம்பர் 31 இற்கான ஐந்தொகைக் கணக்கு அடங்கிய குருனாகல் ப்ளான்டேஷன் லிமிற்றற் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களும் சேர்ந்து வரும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல், சுருக்கமான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகள் என்பவற்றை நாம் கணக்காய்வு செய்தோம்.

### முகாமைத்துவத்தின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய பொறுப்புக்கள்

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு இணங்க இந்த நிதிக் கூற்றுக்களை நியாயமான விதத்தில் தயாரித்து முன்வைப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வடிவமைத்துத் திட்டமிடுதல், செயற்படுத்துதல், பேணுதல், மற்றும் மோசடி, அல்லது கருப்பொருள் சார்ந்த, தவறான, பிறழ் கூற்றுக்களில்லாத நியாயமான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்துப் பிரயோகித்தல் மற்றும் சூழ் நிலைகளில் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற் கொள்ளுதல் என்பன இந்தப் பொறுப்புக்களில் அடங்கும்

### கணக்காய்வு நோக்கெல்லையும் கணக்காய்வு அபிப்பிராய அடிப்படையும்

எமது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பது எமது பொறுப்பாகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நாம் எமது கணக்காய்வை மேற்கொண்டுள்ளோம். நிதிக் கூற்றுக்கள் கருப்பொருள் சார்ந்த பிறழ் கூற்று நீங்கியனவாகக் காணப்படுகின்றனவா என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தைப் பெறும் வகையில் கணக்காய்வை நாம் திட்டமிட்டு மேற்கொள்வதற்கு இந்த நியமங்கள் அவசியமாகும்.

ஒரு சோதனை அடிப்படையில், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொகைகள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பவற்றை ஆதாரப்படுத்துகின்ற பாரிசீலனை கணக்காய்வொன்றினுள் அடங்கும். பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளையும் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிசமான மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைத்தலை மதிப்பிடுதல் ஆகிய விடயமும் கணக்காய்வொன்றினுள் அடங்கும்.

எமது கணக்காய்வின் நோக்கத்தின் நிமித்தம் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் நாம் பெற்றுள்ளோம். ஆகையால் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எமது கணக்காய்வு வழங்கும் என நாம் நம்புகின்றோம்.

### கணக்காய்வு அபிப்பிராயம்

எமது பாரிசீலனையிலிருந்து இது வரை தோன்றுகின்ற விதத்தில், கம்பனி 2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளை பேணியிருக்கின்றது என்பதும், நிதிக் கூற்றுக்கள் 2014 திசம்பர் 31 இற்கான அரச விவகாரங்களின் உண்மையான நியாயமான கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றன என்பதும், அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் இலாபமும் காசுப் பாய்ச்சலும் இலங்கைக் கணககீட்டு நியமங்களுக்கு அமைவானதாகக் காணப்படுகின்றன என்பதும் எமது அபிப்பிராயமாகும்.

### ஏனைய சட்ட ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

இந்த நிதிக் கூற்றுக்களும் கூட 2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151(2) இன் தேவைப்பாடுகளை அனுசரிக்கின்றன என்பது எமது அபிப்பிராயமாகும்.

**தயானந்த சமரவிக்ரம என்ட் கம்பனி**
பட்டயக் கணக்காளர்கள்

நுகேகொடை.
30 மார்ச் 2015

# கூட்டிணைக்கப்பட்ட வருமானக்கூற்று

31 டிசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | 4 | **576,790,774** | 475,890,175 |
| விற்பனை செலவினம் | 5 | **(325,990,679)** | (268,796,818) |
| மொத்த இலாபம் | | **250,800,095** | 207,093,357 |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 6 | **103,029,740** | 95,827,085 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவினம் | 7 | **(131,150,183)** | (109,250,679) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்** | | **222,679,652** | 193,669,763 |
| நிகர நிதிவருமானம்/ (செலவினம்) | 8 | **5,335,281** | 19,959,222 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **228,014,933** | 213,628,985 |
| வருமானவரிச் செலவினம் | 9 | **(13,776,911)** | (5,483,047) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **214,238,022** | 208,145,938 |
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | |
| வரையறுத்த நலக்திட்டங்களின் ஆதாயம்/ (இழப்புகள்) | | **(683,093)** | 783,904 |
| **ஆண்டின் விரிவான மொத்த வருமானம்** | | **213,554,929** | 208,929,842 |
| பங்கொன்றின் மீதான வருவாய் (ரூபா. சதம்.) | 10 | **10.71** | 10.41 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி கூற்றின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழிவுகளை குறிக்கும்.

# நிதியியல் நிலமைக் கூற்று

31 டிசெம்பரில் உள்ளவாறான

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| குத்தகை காணிகளின் ஆதன உரிமை | 11 | **96,557,661** | 99,727,614 |
| அசையா குத்தகை சொத்துக்கள் (காணிகள் தவிர்ந்த) | 12 | **45,569,801** | 50,411,777 |
| நுகரமுடியாத உயிரியல் சொத்துக்கள் | 13A | **705,525,471** | 632,375,347 |
| நுகரக்கூடிய உயிரியில் சொத்துக்கள் | 13B | **132,192,052** | 130,885,608 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 14 | **268,154,134** | 225,018,509 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 15 | **5,529,152** | 4,848,097 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **1,253,528,271** | 1,143,266,952 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் | 16 | **43,373,473** | 41,909,937 |
| வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும் | | **5,549,623** | 4,529,765 |
| குறுகியகால வேலைத்திட்டங்களுக்கு முன்செலுத்திய செலவினம் | 17 | **12,847,143** | 10,263,971 |
| வருமான வரி திரும்பல் | | **6,829,501** | 7,571,822 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருவாய் | 18 | **56,792,077** | 68,063,660 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 15 | **5,557,270** | 5,099,968 |
| குறுகியகால முதலீடுகள் | 19 | **400,000,000** | 326,000,000 |
| காசும் காசுக்குசமனானவையும் | 20 | **9,709,538** | 9,741,661 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **540,658,625** | 473,180,784 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,794,186,896** | 1,616,447,736 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் மூலதன ஒதுக்கீடுகளும்** | | | |
| எடுத்துரைக்கப்பட்ட மூலதனம் | 21 | **200,000,010** | 200,000,010 |
| திம்பர் ஒதுக்கம் | | **203,478,239** | 183,160,698 |
| மீள்திரும்பிய வருவாய் | | **1,043,150,677** | 889,230,196 |
| ஏனைய ஒதுக்கம் | | **6,940,669** | 7,623,762 |
| **மொத்த ஒப்புரவு** | | **1,453,569,595** | 1,280,014,666 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நல ஏற்பாடுகள் - | 22 | **124,548,410** | 124,782,559 |
| குத்தகைகாரருக்கான நிகர பொறுப்புக்கள் | 23 | **67,779,021** | 71,344,225 |
| ஏற்புடைய வருமானம் | 24 | **65,321,092** | 55,944,676 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **257,648,523** | 252,071,460 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| குத்தகைகாரருக்கான நிகர பொறுப்புக்கள் | 23 | **3,565,204** | 3,565,204 |
| பெறப்பட்டுள்ள முற்பணங்கள் | 25 | **948,352** | 1,675,873 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலவினம் | 26 | **78,455,222** | 79,120,533 |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | | **82,968,778** | 84,361,610 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **1,794,186,896** | 1,616,447,736 |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பாகங்களாகும். கழித்தல்களை அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் குறிக்கின்றது. இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளை அனுசாரித்துக் காணப்படுகின்றன.

**பி.எம்.டீ.ஜீ. பிரேமதிலக.**
நிதி முகாமையாளர்

இந்த நதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும். குருனாகல் ப்ளான்டேஷன்ஸ் லிமிற்றட் பணிப்பாளர்கள் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் இந்த நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றன.

**ஏ.எம். பியசோம உபாலி**
தலைவர்

**எச்.ஏ.என். சமன் குமார**
பணிப்பாளர்.'.திறைசேரி பிரதிநிதி

கொழும்பு
30 மார்ச் 2015

# பங்குமூலதன மாற்றங்களின் கூற்று

31 டிசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | கூறப்பட்ட மூலதனம் ரூ. | சட்டநிதி ஒதுக்கீடு ரூ. | பெறப்பட்ட வருவாய் ரூ. | ஏனைய ஒதுக்கீடு ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 2013 சனவரி 01 நிலுவை | 200,000,010 | 148,832,548 | 755,412,408 | 6,839,858 | 1,111,084,824 |
| ஆண்டிற்கான இலாபம | | | 208,145,938 | | 208,145,938 |
| ஒக்கத்திற்கு மாற்றியது | | 34,328,150 | (34,328,150) | | - |
| ஏனைய ஏற்புடைய வருமானம் | | | | 783,904 | 783,904 |
| செலுத்திய பங்குலாபம் - 2012 | | | (40,000,000) | - | (40,000,000) |
| 2013 டிசெம்பர் 31 இல் நிலுவை | 200,000,010 | 183,160,698 | 889,230,196 | 7,623,762 | 1,280,014,666 |
| **2014 சனவரி 01 இல் நிலுவை** | **200,000,010** | **183,160,698** | **889,230,196** | **7,623,762** | **1,280,014,666** |
| **ஆண்டிற்கான இலாபம்** | **-** | **-** | **214,238,022** | **-** | **214,238,022** |
| **திம்பர் ஒதுக்கத்திற்கு மாற்றியது** | **-** | **20,317,541** | **(20,317,541)** | **-** | **-** |
| **ஏனைய ஏற்புடைய வருமானம்** | **-** | **-** | **-** | **(683,093)** | **(683,093)** |
| **செலுத்திய பங்குலாபம் - 2013** | **-** | **-** | **(40,000,000)** | **-** | **(40,000,000)** |
| **2014 டிசெம்பர் 31 இல் நிலுவை** | **200,000,010** | **203,478,239** | **1,043,150,677** | **6,940,669** | **1,453,569,595** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பாகங்களாகும்.

கழித்தல்களை அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் குறிக்கின்றது.

# காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசெம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் | **228,014,933** | 213,628,985 |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம்/ கழிவு | **50,933,499** | 38,633,551 |
| குத்தகை ஒப்பந்தம் மீதான வட்டி | **24,844,072** | 22,742,587 |
| தற்காலிக வங்கி கடன் மீதான வட்டி | **-** | 469,199 |
| ஊழியர் கடன் கழிவு | **1,162,966** | 1,165,986 |
| ஒய்வூதிய நலன் ஏற்பாடு | **24,114,591** | 23,593,586 |
| வட்டி வருமானம் | **(31,342,319)** | (44,336,994) |
| ஆதனம், இயந்திரம், உபகரணம் என்பவற்றின் விறபனையால் பெறப்பட்ட காசு | **(1,209,025)** | 74,868 |
| PPE செலவின பரிமாற்ற இழப்பு | **309,677** | - |
| வெலுத்திய வருமான வரி | **(3,658,174)** | (6,820,059) |
| செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான நிதியேற்பாடு | **28,779,734** | 27,429,989 |
| சொத்துக்களின் நியாய பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு/ (குறைவு) | **(20,317,541)** | (34,328,150) |
| மிகைவூதியங்களுக்கான ஏற்பாடு | **12,319,147** | 8,614,940 |
| **இயக்க மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச் செயற்பாட்டு இலாபம்** | **313,951,560** | 250,868,488 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றம்** | **-** | |
| பொருட் பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **(1,423,536)** | (4,592,709) |
| வைப்புகளிலும் முற்கொடுப்பனவுகளிலுமுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **(1,019,858)** | 1,248,993 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்களிலுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **3,792,538** | 16,944,631 |
| விசேட திட்டங்களின் பிற்போடப்பட்ட செலவினத்திலுள்ள (அதிகரிப்பு) / குறைவு | **(2,583,172)** | (7,775,843) |
| முன்கூட்டிக் கிடைத்த வாடகைகளிலுள்ள அதிகரிப்பு / (குறைவு) | **(727,521)** | 1,471,246 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள அதிகரிப்பு / (குறைவு) | **(5,760,038)** | (7,995,099) |
| செலுத்திய பணிக்கொடை | **(25,031,833)** | (20,640,018) |
| செலுத்தப்பட்ட செலாற்றுகை ஊக்குவிப்புத் தொகை | **(27,338,254)** | (22,765,896) |
| செலுத்தப்பட்ட மிகைவூதியங்கள் | **(8,665,902)** | (7,162,538) |
| பெறுமதியான மரங்களின் விற்பனையால் கிட்டிய பணம் | **19,011,097** | 29,332,700 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நிகர காசு** | **264,205,082** | 228,933,956 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், இயந்திரம், உபகரணங்களின் கொள்வனவு | **(159,579,219)** | (186,700,542) |
| ஆதனம், இயந்திரம், உபகரணம் என்பவற்றின் விறபனையால் பெறப்பட்டவை | **1,231,250** | 1,578,214 |
| வட்டி வருமானம் | **37,658,398** | 40,522,256 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | **(120,689,571)** | (144,600,072) |
| | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய குத்தகை வாடகை | **(28,409,276)** | (32,776,546) |
| தற்காலிய வங்கிக் கடன் -இலங்கை வங்கி | **-** | (469,199) |
| ஊழியர்களுக்கான கடன்கள் | **(8,071,500)** | (7,427,800) |
| ஊழியர் கடன் மீளப்பெறல்கள் | **6,933,143** | 6,422,291 |
| செலுத்திய பங்கு இலாபம் | **(40,000,000)** | (40,000,000) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சல்** | **(69,547,633)** | (74,251,254) |
| | | |
| **காசும் காசுக்கு சமனானவைகளிலும் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு/குறைவு** | **73,967,877** | 10,082,630 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்த காசும் காசுக்கு சமனானவையும் | **335,741,661** | 325,659,031 |
| காலப்பகுதியின் இறுதியில் இருந்த காசு காசுக்குச் சமனானவையும் | **409,709,538** | 335,741,661 |

| குறிப்பு அ<br>காலப்பகுதியின் இறுதியில் இருந்த காசு காசுக்குச் சமனானவையும் | **31.12.2014**<br>**Rs.** | 31.12.2013<br>Rs. |
|---|---|---|
| நிலையான வைப்புகள் - இலங்கை வங்கி | **65,000,000** | 40,000,000 |
| நிலையான வைப்புகள் - மக்கள் வங்கி | **175,000,000** | 168,000,000 |
| நிலையான வைப்புகள் - தேசிய சேமிப்பு வங்கி | **160,000,000** | 118,000,000 |
| ரெப்போ | **4,000,000** | 7,000,000 |
| காசு சென்மதி | **4,698,670** | 2,438,289 |
| வங்கிலுள்ள பணம் | **1,002,855** | 298,284 |
| முத்திரைகள்/ தபாற் செலவுகள் | **8,013** | 5,088 |
| | **409,709,538** | 335,741,661 |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பாகங்களாகும்.

கழித்தல்களை அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் குறிக்கின்றது.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 01. பொது

### 1.1 சட்டமுறை அந்தஸ்து

குருனாகல் ப்ளான்டடஷன்ஸ் லிமிற்றட் நிறுவனமானது, அரச உடமை வர்த்தக ஸ்தாபனங்கைளயும் கூட்டுத் தாபனங்களையும் 1987 இன் 23 ஆம் இலக்கப் பொதுக் கம்பனிகள் சட்டத்திற்கு மாற்றியமைக்கும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டவொரு பொறுப்புக் கம்பனியாகும். இந்தக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 80, தம்புள்ள வீதி, குருனாகல் என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இந்தக் கம்பனி ஏகபோக பங்குடமைதாரராக விளங்குகின்ற இலங்கை அரசாங்கத்தின் திறைசோரிக்கான செயலாளராக உள்ளிட்ட தனியானவொரு பங்குடமைக் கம்பனியாகும்.

### 1.2 வர்த்தகத்தின் தன்மை

இந்தக் கம்பனி அடிப்படைரீதியில் தென்னை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்களை நிருவகித்து விவசாய சார் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்தக் கம்பனியின் பெருந்தோட்டங்கள் தீவில் பல பாகங்களில் அமைந்துள்ளன. இந்தப் பெருந்தோட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டவாறு 08 நடுகைப் பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

அத்தனகல்ல, கட்டுகம்பளை, தம்தெனியா, குருனாகல், தொடன்கஸ்லந்த, நாரம்மல, ஹிரியால, மஹாயாய

### 1.3 பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட நிதியியல் கூற்றுக்களுக்கான ஒப்புதல்

2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2014 ஏப்ரில் 22 ஆம் நாளன்று பகிரங்கமாக வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## 2. தயாரிப்பிற்கான அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டு கூற்றுக்கள்

குழுமத்தின் ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களும் வேறான நிதியியல் கூற்றுக்களும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. (இந்நிதியியல் கூற்றுக்களில் இ.நி.அ.நியமம் (SLFRS) எனக் குறிப்பிடப்பட்டவற்றுடன் சேர்த்து). இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பனவற்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் ஒன்றாகும்.

#### அக்கறை

இயக்குனர்கள் ஒரு என்ன கவலை தொடர நிறுவனத்தின் திறனை மதிப்பீடு செய்து அவர்கள் விரும்பவில்லை அல்லது வர்த்தக கலைத்துவிட வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும்.

### 2.2 அளவீட்டு அடிப்படை

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் பின்வருவன நீங்கலாக வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் சந்தைப் பெறுமதி அடிப்படையில் அளவிடப்பட்டன.
- விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- சொந்தக்காரரினால் பயன்படுத்தப்படும் இறையிலி நிலமும் கட்டடங்களும் ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த பின்னர் மீள்மதிப்பிடத்தக்க தொகையில் அளவிடப்பட்டன.
- வரைவிலக்கண நன்மைக் கடப்பாடுகள் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் மொத்தத்தினைக் கழித்து வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியாக அங்கீகரித்துள்ளது.

நிதியியல் கூற்றுக்களைப் பாதிக்கின்ற பணவீக்க அழுத்தங்களுக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வில்லை.

## 2.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், தொழிற்படுகின்ற பிரதான பொருளாதார சூழலின் நாணயமான இலங்கை ரூபாவில் அளவிடப்படுகிறது. ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், குழுமம் தொழிற்படுகின்றதும் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான நாணயமான இலங்கை ரூபாவில சமர்ப்பிக்கப்படுகின்றது. வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் அண்மைய ஆயிரத்திற்கு முழு இலக்கமாக்கப்பட்டிருக்கிறது.

## 2.4 கணக்கீட்டுத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை குறிப்பிடத்தக்களவிற்குப் பயன்படுத்துதல்

திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகை என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றன. உண்மையான பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம்.

தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன வரலாற்று ரீதியான அனுபவங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய நடத்தையின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் திருத்தப்படுகின்றதொரு காலப்பகுதியில் அத்துடன் அல்லது எதிர்காலப் பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கையினை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, முகாமைத்துவம், திரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது மிகக் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் பின்வரும் மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் தீர்ப்புக்களைச் செய்திருக்கிறது.

குறிப்பு 13 – நுகரக்கூடிய உயிரியில் சொத்துக்கள்

குறிப்பு 21 – வரையறுக்கப்பட்ட பொறுப்பு அறவீடு

குறிப்பு 24 – பிற்போடப்பட்ட வரி

## 2.5 ஒப்பீட்டு தகவல்

முந்தைய ஆண்டுகளில் நிதி அறிக்கைகளை வழங்கல் மற்றும் வகைப்பாடு அங்கு நல்ல வழங்கல் தொடர்புடைய மற்றும் நடப்பு ஆண்டு அந்த ஒப்பிட திருத்தப்பட்டுள்ளன.

# 3. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

இந்த நிதி அறிக்கைகளை தயாரித்தல் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கியல் கெ ள்கைகள் கீழே வையறுக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகள் தொடர்ந்து இல்லையெனில் கூறினார் தவிர, வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளில் பயன்படுத்தப்படுகிறது.

## 3.1 சொத்துகள் மற்றும் அவர்களது மதிப்பீட்டு அடிப்படை

நிதி நிலை அறிக்கை தற்போதைய சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன சொத்துக்கள் பண, வங்கி நிலுவைகளை மற்றும் நிறுவனத்தின் வணிக சாதாரண இயக்க சுழற்சியின் போது பண உணர்ந்து வேண்டும் எதிர்பார்க்கப்படுகிறது. அல்லது குறுகிய அறிக்கை தேதி, ஒரு ஆண்டுக்குள். நடப்பு சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் நிறுவனத்தின் அறிக்கை தேதியிலிருந்து ஒரு வருட காலம் கடந்து நடத்த விரும்புகிறது

### *3.1.1* ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### *3.1.1.1* அங்கீகரித்தலும் அளவிடலும்

சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளுக்குச் சாதகமானதாக இருக்குமிடத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் குழுமத்துடன் சேர்க்கப்படுவதுடன் சொத்துக்களின் கிரயம் நம்பகமான விதத்தில் அளவிடப்படும். கிரயத்தினை

உள்ளடக்குகின்ற செலவினம் சொத்துக்களின் கிரயத்துடன் நேரடியாக சேர்க்கப்படுகின்றது. சுயமாக நிருமாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயமானது பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் நேரடிக் கிரயம், சொத்துக்களை உண்மையில் பயன்படுத்துவதற்காக தொழிற்படுகின்றதொரு நிலைக்கு அவற்றைக் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஏனைய நேரடிக் கிரயங்கள், உடைந்த பொருட்களை அகற்றுகின்ற கிரயம் மற்றும் அவை அமைந்திருந்த இடத்தினை பழைய நிலைக்கு கொண்டு வருதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. தொடர்பான சாதனத்தின் இயக்கத்தினது இன்றியமையாததொரு பாகமாக விளங்கும் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் சாதனத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகிறது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றிற்கு ஏற்படும் ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதிக் குறைப்பு இழப்புக்கள் என்பனவற்றைக் கழித்த கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இறையிலி நிலங்கள் மற்றும் கட்டடங்கள் குத்தகை நிலங்களிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றில் அனைத்து வகுப்புகளுக்கும் மீள்மதிப்பீட்டு மாதிரி பிரயோகிக்கப்படுகின்றது. மீள்மதிப்பீட்டுத் தொகையைக் கொண்டிருக்கும் அத்தகைய சொத்துக்கள் அதன் பின்னர் ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் அதன் பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமதிக் குறைப்பு இழப்பு என்பனவற்றைக் கழித்து, மீள்மதிப்பீட்டுத் திகதியிலுள்ள சந்தைப் பெறுமதியினை கொண்டிருக்கும்.

சொத்துக்கள் மீதான மீள்மதிப்பீட்டிலிருந்து தோன்றுகின்ற மிகை இதே சொத்துக்கள் மீதான முன்னைய மீள்மதிப்பீட்டு மிகையின் மாற்றுகின்ற தொகையினைக் கழித்து ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டில் காணப்படும் ஏதேனும் பற்றாக்குறை, அதே சொத்தின் மீதான முன்னைய மீள்மதிப்பீட்டு மிகைக்கு நேர்மாறான அளவொன்று தவிர்ந்ததாக ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது.

### *3.1.1.2* பின்னர் ஏற்படுகின்ற கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விடயமொன்றின் பகுதியினை அகற்றுவதனால் ஏற்படும் கிரயம் விடயத்தின் ஏட்டுப் பெறுமதித் தொகையில் அங்கீகரிக்கப்படுகிறது. அப்பகுதிக்குள்ளேயே உருவாக்கப்பட்ட எதிர்காலபொருளாதார நன்மைகளின் சாத்தியமான தன்மைகள் குழுமத்திற்குப் பாய்வதுடன் அதன் கிரயத்தினை நம்பத்தகுந்த விதத்தில் அறவிட முடியும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பணிகளின் கிரயம் ஏற்பட்டவாறு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### *3.1.1.3* அங்கீகரிக்காமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகிய விடயங்கள் கொண்டிருக்கும் தொகையானது அவை அகற்றப்படும் பொழுது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொண்ட விடயங்களின் அங்கீகரிக்காமையின் காரணமாக தோன்றுகின்ற இலாபம் அல்லது நட்டம் விடயம் அங்கீகரிக்கப்படாமல் விடும் ஆண்டிற்குரிய வருமானக் கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானம்/ செலவில் உள்ளடக்கப்படுகின்றன.

### *3.1.1.4* கடன் செலவினங்கள்

கட்டுப்பாடுகளை இழந்ததும் கட்டுப்பாடுகளை இழப்பதன் காரணமாகத் தோன்றுகின்ற ஏதேனும் மிகைகள் அல்லது பற்றாக்குறைகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமமானது, முன்னைய துணை நிறுவனத்தில் ஏதேனும் நலவுரித்துக்களை பிடித்து வைத்திருக்குமாயின் அப்பொழுது கட்டுப்பாடு இழக்கப்பட்ட திகதியிலுள்ளவாறான சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து, இது உரிமை மூலதனங்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக் கானவையாக அல்லது நிதியியல் சாதனங்களுக்கான நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைகளுக்கிணங்க கணக்கிடப்படுகின்றன.

### *3.1.1.5* தேய்மானம்

இம்முறைமையானது சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட மாதிரித் தன்மைகளை நெருக்கமாகப் பிரதிபலிப்பதன் காரணமாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொண்ட விடயம் ஒவ்வொன்றினதும் மதிப்பிடப்பட்ட ஆயுள் காலத்தின் தேய்மானமானது நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. நிதிக் குத்தகைகளின் கீழான குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் குறுகிய குத்தகைக் காலம் மற்றும் அவற்றின் பயன்மிக்க ஆயுள் காலம் என்பனவற்றின் அடிப்படையில் தேய்வடைகின்றன. காணியானது

தேய்வடைவதில்லை. மேலும், கட்டடத்தின் மீதான விரிவாக்கம் மற்றும் முக்கியமாக திருத்தங்கள் என்பன ஆரம்பக் கட்டடத்தின் எஞ்சிய பயன்மிக்க ஆயுள் காலத்தின் அடிப்படையில் தேய்வடைகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானத்திற்கான ஒதுக்கங்கள் விகிதசம அளவு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. குழுமத்தின் நடப்பு மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 ஆண்டுகளுக்கு மேல் |
| கிணறுகள் | 03 ஆண்டுகளுக்கு மேல் |
| வேலிகள் | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| இயந்திர உபகரணங்கள் | 13 1/3 ஆண்டுகளுக்கு மேல் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 ஆண்டுகளுக்கு மேல் |
| உபகரணங்கள் | 08 ஆண்டுகளுக்கு மேல் |
| கணனிகள் | 05 ஆண்டுகளுக்கு மேல் |

தேய்மான முறைகள், பயன்மிக்க ஆயுள் காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி என்பன ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளமதிப்பிடப்பட்டு பொருத்தமானவிடத்து சீராக்கப்படுகின்றன.

தரிசுநிலம் 53 வருடங்களுக்கு அதிகமான

கட்டிடங்கள் 25 வருடங்களுக்கு அதிகமான

பொறித் தொகுதியும் இயந்திராதிகளும் 15 வருடங்களுக்கு அதிகமான

முதிர்ந்த பெருந்தோட்டங்கள் 30 வருடங்களுக்கு அதிகமான

காணி அபிவிருத்தி ஆகுசெலவு 30 வருடங்களுக்கு அதிகமான

### *3.1.1.6* குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்

குத்தகை நியதிகளில் குழுமமானது சொத்துடமையின் அனுமானிக்கப்படும் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து குத்தகைக்குவிடப்பட்ட சொத்துக்கள் இவற்றின் குறைந்த சந்தைப் பெறுமதிக்குச் சமமானதொரு தொகையிலும் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியிலும் மதிப்பிடப்பட்டது. ஆரம்ப அங்கீகரிப்பிற்குப் பின்னர், சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கேற்ப (SLAS - 17 குத்தகைகள்) கணக்கிடப்படுகின்றன. நிதிக் குத்தகைகள் தவிர்ந்த குத்தகைகள் தொழிற்பாட்டு குத்தகைகளாக கருதப்பட்டதுடன், இக்குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் குழுவின் நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படவில்லை.

### *3.1.1.7* நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

வங்கி, சொத்துக்களின் பெறுமதி குறைவடைவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றதா என்பதனைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. ஏதாவது அறிகுறிகள் தென்படுமாயின், அல்லது சொத்துக்களுக்கான வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பு

தேவைப்படும் பொழுது வங்கி சொத்துக்களின் அறவிடமுடியாத தொகையினை மதிப்பிடுகிறது. சொத்தொன்றின் அறவிடமுடியாத் தொகையானது சொத்தினைவிட அல்லது காசு உருவாக்கப் பிரிவின் கிரயத்தைக் கழித்த சந்தைப் பெறுமதியைவிட உயர்வாக இருப்பதுடன் இதன் பெறுமதி பயன்பாட்டிலும் இருக்கிறது. சொத்தின் அல்லது காசு உருவாக்கப் பிரிவில் கொண்டிருக்கும் பெறுமதி அதன் அறவிடல்

தொகையினை விஞ்சுமிடத்து சொத்துக்களின் பெறுமதி குறைவடைகிறது எனக் கருதப்படுவதுடன் அது அதன் அறவிடத்தக்க தொகைக்கு குறைத்து எழுதப்படுகிறது.

பயன்பாட்டிலுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் என்பன வரிக்கு முன்னைய கழிவிடல் வீதத்தினைப் பயன்படுத்தி

அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்படுவதுடன் அது பணத்தின் அந்நேரத்துப் பெறுமதியின் நடப்புச் சந்தை மதிப்பீடுகளையும் பிரதிபலிப்பதுடன் விற்பதற்கான கிரயம் கழித்த சந்தைப் பெறுமதியினை தீர்மானிப்பதில் சொத்துக்கான இடர்நேர்விற்குப் பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது. இக்கணிப்புக்கள், மதிப்பீட்டு பல்முறைகள் பகிரங்கமாக வர்த்தகப்படுத்தப்பட்ட துணை நிறுவனங்களுக்கான விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய மதிப்பீட்டு சந்தைப் பெறுமதி குறிகாட்டிகளினால் உறுதிப்படுத்தப்பட்டன.

### *3.1.2* உயிரியல் சொத்துக்கள்

உயிரியல் சொத்துக்கள் முதிர்நிலை சொத்துக்கள் முதிராத சொத்துக்கள் என வகைபடுத்தப்படுகின்றன. முதிர் சொத்துக்கள் தொடர்ச்சியான அறுவடையினை தரக்கூடியவையாகும். முதிரா சொத்துக்கள் இன்னமும் அறுவடைதரத் தக்க நிலையை ஏய்தாதவையாகும்.

உயிரியல் சொத்துக்கள் தரிசு உயிரியல் சொத்துக்கள் மற்றும் நுகரக்கூடிய உயிரியல் சொத்துக்கள் என மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. நுகரக்கூடிய சொத்துக்கள் வர்த்தக மரப்பலகையாகவும் உள்ளவை உதாரணமாக தேக்கு, மஹோகனி ஹல்மிலல, மில்லா.

### *3.1.2.1* உயிபியில் சொத்துக்கள்

முதலீட்டு சொத்துக்கள் ஆரம்பத்தில் அதன் விலையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்பு வங்கி அதன் அனைத்து முதலீட்டு சொத்துக்களையும் டுமுயுளு 16 சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்களுடைய உடைய தேவைப்பாடுகளுக்கு அமைவாக அளவீடு செய்வதற்கு விலையிடல அடிப்படையை பயன்படுத்தியுள்ளது.

உயிரியில் சொத்துக்களின் முதிர்வு காலம்

தேங்காய் 50 ஆண்டுகளுக்கு மேல்

இறப்பர் 20 ஆண்டுகளுக்கு மேல்

ஏனைய பபயிர்கள் 20 ஆண்டுகளுக்கு மேல்

### *3.1.2.2* உயிரியில் சொத்துக்கள் மீதான ஆகுசெலவு

குறித்த காணியின் மீதான பயிரிடல் ஆகுசெலவு அது வளர்ச்சி போக்கில் இருப்பில் முதலீடாக கொள்ளப்படுகின்றது. முதலீடாக ஆகுசெலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் கூட்டிணைக்கப்பட்ட வருமான கூற்றில் கொண்டுவரப்பட்டுள்ளன.

### *3.1.2.3* நுகரக்கூடிய உயிரியல் சொத்துக்கள்

**பயன்தகு கூற்று**

| | |
|---|---|
| **நாணய மதிப்பீடு** | ரூபா |
| **பலகை** | பல்வேறு நிலஅமைப்புகளில் பல்வேறு பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப மதிப்பிடப்படுகிறது. |
| **பொருளாதார பயன்தருபவை** | சாதாரண வாழ்க்கை தன்மைக்கு ஏற்ப நிறுவன விதிமுறைக்கு அமைய கணிப்பிடபடுகிறது. |
| **விற்பனை விலை** | இலங்கை நாணயத்தின் விற்பனைக்கு கொண்டுவருவதற்கான சகல செலவுகளும் |
| **கழிவு விகிதம்** | காசுப்பாய்ச்சலுக்கு அமைவானது, மரங்களுக்கு 14% |

### *3.1.2.4* அங்கீகாரம் மற்றும் அளவீட்டு

நிறுவனம் உயிரியல் சொத்துக்களை போது அங்கீகரிக்கிறது, மற்றும் நிறுவனம் ஒரு கடந்த நிகழ்வு விளைவாக சொத்துகளின் கட்டுப்படுத்தும் போது மட்டுமே, இது சொத்துக்களை தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனம் மற்றும் சொத்துக்கள் நியாய விலை அல்லது செலவு பாயும் என்று நம்பத்தகுந்த கருதப்படுகிறது.

மணல் உயிரியல் சொத்துக்களை LKAS 16 அடிப்படையில், ஏதாவது இருந்தால், விலை குறைவாக திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் திரட்டப்பட்ட சேதம் இழப்புக்கள் அளவிடப்படுகிறது - வழங்கப்பட்ட ஆளும் படி சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம்.

நுகர்வோர் மரம் மரங்கள் ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அதன் நியாயமான மதிப்பு LKAS 41 அடிப்படையில் விற்க குறைந்த செலவில் ஒவ்வொரு அறிக்கையும் கால இறுதியில் அளவிடப்படுகிறது. செலவு இளம்

செடிகள் (5 வயதுக்கு கீழ்) நியாயமான மதிப்பு தோராய சிகிச்சை இந்த காலத்தில் விலை காரணமாக அத்தகைய தாவரங்கள் உயிரியல் மாற்றம் தாக்கத்தை பொருள்ளலாதாகும்

### *3.1.3* நிதிசார் செயற்பாடுகள்

### *3.1.3.1* நிதிசாா சொத்துக்கள்

### *3.1.3.1.1* நிதியியல் சொத்துக்களின் தேய்மானம்

நிதியியல் சொத்துக்கள் பெறுமதியில் குறையக்கூடிய வெளிப்படையான சான்றுகள் காணப்படுவது கடன்படுனருக்கு அல்லது வழங்குநருக்கு குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிப்பது, கடன்படுனர் உரிய நேரத்தில் கடன்களை செலுத்தத் தவறுவது, கடமை தவறுவது, வேறு விதமான பரிசீலனையில் இருந்தாலொழிய குழுமத்தின் நியதிகளில் குழுமத்தினால் கடன்கள் அல்லது முற்பணங்கள் மறுசீரமைக்கப்படுவது, கடன்படுனர் அல்லது வழங்குநர் வங்குரோத்தினை அடையக்கூடுமென்ற எடுத்துக்காட்டல்கள், பிணையங்களுக்கான செயற்படு சந்தை இல்லாமல் மறைந்தவை அல்லது குழுமத்திலுள்ள கடன்படுனர்கள் அல்லது வழங்குநரின் கொடுப்பனவு அந்தஸ்த்தில் ஏற்பட்ட மோசமான மாற்றங்கள் அல்லது குழுமத்திலுள்ள செலுத்தத் தவறும் நிகழ்வுகளுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கொடுப்பனவு அந்தஸ்த்தில் ஏற்படும் மோசமான மாற்றங்கள் போன்ற சொத்துக்களின் தொகுதி தொடர்பான ஏனைய தரவுகள் அவதானிக்கப்படுகின்றமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

### *3.1.3.1.2* நிதியியல் சொத்துக்கள் பெறுமதிக்குறைவு மதிப்பீடுகள்

நிதியியல் சொத்துக்கள் முதிர்ச்சியடைவதற்காக வைத்திருக்கப்படுகின்ற பெறுமானத் தேய்வுக் கிரயத்தில் அளவிடப்பட்ட பெறுமதிக் குறைவு இழப்புக்கள் நிதியியல் சொத்துக்களின் கொண்டிருக்கும் தொகைக்கும் சொத்துக்களின் தொடக்க பயனுறு வட்டி வீதத்தில் கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக கணிப்பிடப்படுகின்றன. பெறுமதிக் குறைப்பு இழப்புக்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான பெறுமதிக் குறைப்புக் கட்டணங்களிலும் பிரதிபலிக்கப்படுகிறது. பெறுமதி குறைந்த சொத்துக்கள் மீதான வட்டி முடிவுறுத்தப்படாத கழிவிடனூடாக தொடர்ந்தும் அங்கீகரிக்கப்படும். அதன் பின்னர் நிகழும் சம்பவங்கள் பெறுமதிக் குறைப்பு இழப்புத் தொகைகள் குறைவடைய காரணமாக இருக்கும் பொழுது பெறுமதி குறைவடையும் இழப்புக்களில் ஏற்படும் வீழ்ச்சி வருமானக் கூற்றினூடாக மாற்றப்படுகிறது.

### கடன்கள் மற்றும் முற்பணங்கள்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன தொடர்பான ஆரம்ப அளவீடுகளினைத் தொடர்ந்து அவை பெறுமதிக் குறைப்பிற்கான கழிவு தொகைகளைக் கழித்து பயனுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி பெறுமதித் தேய்வுக் கிரயத்தில் அளவிடப்பட்டன. பெறுமதித் தேய்வுக் கிரயமானது சுவீகரிப்பின் மீதான கழிவிடல் அல்லது கட்டுப்பணத்தினையும் பயன்தரு வட்டி வீதத்தினை முக்கியமானதொரு பகுதியாக விளங்கும் கட்டணம் என்பனவற்றையும் கருத்திற் கொண்டு அளவிடப்படுகின்றது. பெறுமானத் தேய்வு வருமானக் கூற்றில் வட்டி மற்றும் அதையொத்த வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்படுகிறது. பெறுமதி குறைவடைவதிலிருந்து தோன்றுகின்ற இழப்புக்கள் வருமானக் கூற்றில் கடன்கள் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான பெறுமதி குறைவடைதல் கட்டணம் (மாற்றுப்பதிவு) இன் கீழ் காட்டப்பட்டுள்ளன. குழுமமானது, சேகரிக்கப்பட முடியாதவை எனத தீர்மானிக்கும் பொழுது குறிப்பிட்ட கடன்களையும் முற்பணங்களையும் பதிவழிப்புச் செய்கிறது.

### முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் நிதியியல் முதலீடுகள் என்பது நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதிகளல்லா நிதியியல் சொத்துக்களாகவும் குழுமம் முதிர்ச்சி வரை வைத்திருக்கக்கூடிய சாதகமான எண்ணமும் இயலாற்றலும் கொண்ட நிலையான முதிர்ச்சிகளையும் கொண்டவை என்பதாகும்.

### விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் உரிமை மூலதனத்தினையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்குகின்றது. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை என

வகைப்படுத்தப்பட்ட உரிமை மூலதன முதலீடுகள் ஒன்றில் வர்த்தகப்படுத்தலுக்காக பிடித்துவைக்கப்பட்டவை என வகைப்படுத்தப்பட்டனவாகவோ அல்லது இலாபம் அல்லது இழப்புக்களினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டனவாகவோ இல்லை. ஆரம்ப அளவீடுகளைத் தொடர்ந்து விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகள் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டன. தேறல் செய்யப்படாத இலாபங்களும் நட்டங்களும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்கங்களிலுள்ள உரிமை மூலதனத்தில் (அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமானம்) நேரடியாக அங்கீகரிக்கப்பட்டன. முதலீடுகள் அகற்றப்பட்ட பொழுது, உரிய மூலதனத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது இழப்புக்கள், வருமானக் கூற்றின் கீழ் “ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தின்” கீழ் அங்கீகரிக்கப்பட்டன. இதே பிணையத்தில் குழுமமானது ஒன்றிற்கும் மேற்பட்ட முதலீட்டினை உடமையில் கொண்டிருக்குமிடத்து அவை முதலில் வந்தது முதலில் அனுப்பப்படும் என்ற அடிப்படையில் அகற்றப்படும். விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகளை வைத்திருக்கும் பொழுதே வட்டியை உழைப்பது என்பது பயன்தரு வட்டி வீதத்தினைப் பயன்படுத்துகின்ற வட்டி வருமானமாக அறிவிக்கப்பட்டது. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் முதலீடுகளை வைத்திருக்கும் பொழுதே பங்கிலாபத்தினை உழைப்பது என்பது கொடுப்பனவின் உரிமைகள் நிறுவப்படுகின்ற வேளையில் வருமானக் கூற்றில் “ஏனைய தொழிற்பாட்டு வருமானம்” என அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீடுகளின் பெறுமதி இழப்பிலிருந்து தோன்றுகின்ற இழப்புக்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்குகளிலிருந்து அகற்றப்படுகின்றன.

### *3.1.3.1.3* விற்பனை முதலீடுகளுக்கான கிடைப்பனவுகளின் பழுதுறும் தன்மை

விற்பனை முதலீடுகளுக்காக கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்ட அதன் படுகடன் பிணையங்களை அவை பழுதுற்றிருக்கின்றனவா என்பதனை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்கிறது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனிப்பட்ட மதிப்பீடுகளுக்கு பிரயோகிக்கப்பட்டதனைப் போன்ற தீர்ப்பொன்றினை இது தேவைப்படுத்துகிறது. சந்தைப் பெறுமதி அவற்றின் கிரயத்திலும் பார்க்க கீழாக குறிப்பிடத்தக்களவிற்கு அல்லது நீண்ட காலத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கின்ற வேளையில், குழுமமானது விற்பனைக்குரிய முதலீட்டிற்கான கிடைப்பனவின் மீது பழுதுறக்கூடிய விதிப்புக்களைப் பதிவு செய்கிறது. “குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலம்” என்றால் என்ன என்ற தீர்மானம், தீர்ப்பினைத் தேவைப்படுகின்றது. இத்தீர்ப்பினை மேற்கொள்வதற்கு, குழுமமானது, மற்றைய காரணிகளுடன், வரலாற்று ரீதியான பங்கு விலை அசைவுகள் மற்றும் காலம் என்பனவற்றை மதிப்பீடு செய்வதுடன் முதலீட்டின் சந்தைப் பெறுமதி அது கொண்டிருக்கும் பெறுமதியிலும் பார்க்க எவ்வளவு குறைவாக இருக்கின்றதோ அந்தளவிற்கு நீடிக்கின்றது.

### *3.1.3.1.4* ஏற்புடைய நிதி சொத்து

இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டிருக்குமிடத்து அவை இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதியாக வகைப்படுத்தப்படுகின்றன.

### *3.1.3.2* நிதியியல் பொறுப்புக்கள்

### *3.1.3.2.1* ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீட்டு

ஆரம்ப கண்டறிதலின் போது நிதியியல் சாதனங்களை வகைப்படுத்துவது, அவற்றின் நோக்கம் மற்றும் பண்பு மற்றும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான முகாமைத்துவத்தின் ஈடுபாடு என்பனவற்றில் தங்கியிருக்கிறது. நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவது தவிர நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் அவற்றின் சந்தைப் பெறுமதியுடன் கொடுக்கல்வாங்கல் கிரயத்தினைக் கூட்டிய தொகையில் அளவிடப்பட்டன.

நிதியியல் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அளவிடுகின்ற நோக்கத்திற்காக பின்வரும் வகைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. - இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதி முதலீடுகள் முதிர்ச்சியடையும் வரை வைத்திருத்தல் கடன்களும் பெறத்தக்கவைகளும் நிதிச்சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை

### *3.1.3.2.2* அங்கீகாரம் ரத்து

பொறுப்பு கட்டுப்பாட்டுக்குள் விடுவிக்க அல்லது ரத்து செய்யப்படும் அல்லது காலாவதியாகும் போது ஒரு நிதிய பொறுப்பாக கருதப்படுகிறது.

### *3.1.3.3* நிதிய கருவிகளின் சமநிலை

நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் இருந்தால் ஈடுசெய்ய, மற்றும் மட்டுமே, அங்கீகரிக்கப்பட்ட அளவு ஈடு செய்ய தற்போது அமல்படுத்தப்பட சட்ட உரிமை உள்ளது மற்றும் நிகர அடிப்படையில் தீர்த்து கொள்ள, அல்லது சொத்துக்களை உணர மற்றும் ஒரே நேரத்தில் பொறுப்புக்களை தீர்க்கும் நோக்கம் உள்ளது.

### *3.1.3.4* நிதி இடர் முகாமைத்துவம்

#### பேரம்பேசப்பட்ட கடன்கள்

சாத்தியமானவிடத்து, பிணையங்களைத் தனது உடமையில் வைத்திருப்பதிலும் பார்க்க கடன்களை மீளவமைத்துக் கொள்வதற்கே விரும்புகின்றது. இது கொடுப்பனவு ஒழுங்குகளை நீடித்துக் கொள்வதுடனும் புதிய கடன் நிபந்தனைகளுடன் உடன்பட்டுக் கொள்வதுடனும் தொடர்பானதாகும். நியதிகள் மீளகலந்துரையாடப்பட்டதும் நியதிகள் மாற்றியமைக்கப்படுவதற்கு முன்னதாக ஏதேனும் பெறுமதிக் குறைப்பு, கணிக்கப்பட்டவாறான ஆரம்ப பயனுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் கடனானது கடந்த காலத்தில் செலுத்தபட வேண்டியதொன்றாகக் கருதப்படமாட்டாது. அனைத்துப் பிரமாணங்களும் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்காலக் கொடுப்பனவுகள் சுமூகமாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், முகாமைத்துவம் மீள பேரப்பேச்சுக்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யும். கடன்கள் தொடர்ந்தும் கடனின் ஆரம்ப பயனுறு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட தனிப்பட்ட அல்லது கூட்டு பெறுமதிக் குறைப்பு மதிப்பீடொன்றிற்கு உட்பட்டிருக்கும்.

#### திரவ நிலை இடர்

காசு மற்றும் ஏனைய நிதி சொத்துக்களுடன் கூடிய நிதிப் பொறுப்புக்களே நிறுவனம் எதிர்நோக்கும் சிக்கலான இடர் தன்மையாகும். நிறுவனம் அதன் திரவ நிதியிலையினை கட்டுப்பாட்டில் வைத்திந்தது. இதில் ஏற்படும் பாதிப்பு நிறுவனத்தில் நன்னிலை மதிப்பினை பாதிக்கும்.

#### வட்டி விகித இடர்

சந்தையில் ஏற்படும் வட்டி விகிதங்களில் தளம்பல் போக்கு நிறுவனம் பெற்றுள்ள நீண்டகால தளம்பல் கடன்களில் பாதிப்பு செலுத்துவதால் அப்பொறுப்பின் பெறுமதி கடன்கள் மற்றும் பல்வேறு முற்பணங்களில் அதிகரிக்கும். எவ்வாறாயினும் நிறுவனம் நீண்டகால தளம்பல் வட்டி விகிதம் கொண்ட பொறுப்புக்கள் எதனையும் இத்திகதியில் கொண்டில்லை

### *3.1.4* பொருட்பதிவேடுகள்

### *3.1.4.1* உயிரியில் சொத்துக்கிளில் அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள்

**அறுவடை தசய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் விற்பனை ஒப்பந்தங்களிலுள்ள குறிக்கப்பட்ட விற்பனை ஆகுசெலவு இடைத் தேறிய விலைகளில் மதிப்பிடப் படுகின்றன. அதே நேரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் காலம் வரை விற்பனை ஒப்பந்தங்களுக்கு உள்ளாகாத நேலத்தில் மதிப்பிடப்பட்ட சராசாரி தேறிய விற்பனை விலையிலும் மதிப்பிடப்படுகின்றன.**

**தேங்காய்களைப் பொறுத்த வரையில் கொப்பராவாக மாற்றப்பட்டதன் பின்னர் வரும் சாத்தியமான பெறுமானம் சந்தையில் நிச்சயமற்ற தன்மை நிலவும் போது பெறுமானக் கணிப்பீட்டிற்காபப் பயன்டுத்தப் படுகின்றது.**

### *3.1.4.2* செயலாக்களின் பின்னர் விவசாய விலைப்பொருட்கள்

காலம் கடந்த மந்தமாக நகரும் பொருட்களுக்கான உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், விவசாய உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய பொருட்பதிவேடுகள் குறைந்த ஆகுசெலவிலும் சாத்தியமான தேறிய பெறுமானத்திலும் பெறுமானம் கணிக்கப்படுகின்றன. இருப்புப் பொருட்கள் அவற்றின் விற்பனை செய்யத்தகு நிலைக்கு வந்ததிலிருந்து ஆகுசெலவு மாற்றம் அல்லது ஆகுசெலவு சாத்தியம் ஆகியவற்றுக்கான அனுமதித்த பின்னர் சாதாரண வர்த்தக மார்க்கத்தில் விற்பனை செய்யக் கூடிய

விலையில் தேறிய சாத்தியமான பெறுமானம் கணிக்கப்படுகின்றன.

#### *3.1.4.3* உள்ளீட்டு பெபருள், நுகர்பொருள்கள் மற்றும் உதிரிகள்

உள்ளீட்டு மூலப்தபாருட்களின் இருப்புகள், உதிரிப்பாகங்கள் மற்றும் நுரைத்தகு பொருட்கள் என்பன குஜகுழு அடிப்படையிலான உண்மையான ஆகுசெலவில் பெறுமானம் கணிக்கப்படுகின்றன.

#### *3.1.4.4* வளர்ந்து வரும் பயிர் வளர்ப்பகங்கள்

வளர்ந்து வரும் பயிர் நாற்றுமேடைகள் நேரடி மூலப்பொருட்களின் ஆகுசெலவிலும், நேரடித் தொழிலாளர் ஆகுசெலவிலும், அதிகம் வளர்ந்த தாவரங்களுக்காக உகந்த விகிதாசாரத்திலும் பெறுமானம் கணிக்கப்படுகின்றன.

### *3.1.5* காசும் காசு ஒப்புரவுகளும்

காசும் காசு ஒப்புரவுகளும் பெறுமானத்தில் கணிசமான ஆபத்துக்கு உள்ளாகுகின்ற அறிந்த காசுத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றப் படுகின்ற அதிகமான மிதக்கும் குறுங்கால முதலீடுகள், கேள்வி வைப்புக்கள் மற்றும் கையிலுள்ள காசு என வரையறுக்கப் படுகின்றன. வங்கி மேலதிகப் பற்றுக்கள் காசினதும் காசு ஒப்புரவினதும் ஆக்கக்கூறொன்றாக உள்ளடக்கப் படுகின்றன.

## 3.2 பொறுப்புகள் மற்றும் முன்னேற்பாடுகள்

வட்டி கொண்ட வைப்புகள், சேமிப்புவைப்புகள், தவணை வைப்புகள், அழைப்பின் போது வழங்க வேண்டிய வைப்பு, சான்றிதழ் வைப்பு என்பவற்றை உள்ளடக்கும்.இந்த வைப்புகள் மீதான வட்டி வருமான கூற்றின் அவற்றுக்குரிய பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்படும். கடன்களில் மீள்நிதி கடன்கள், கடன் பண அழைப்புகள், மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்கள் என்பன அடங்கும். அவை நிலுவைத் தொயின் மொத்த பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. அவை நிதிக்கூற்றில் செலுத்த வேண்டிய தொகைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுக்காக செலுத்தப்படும் வட்டிகள் நன்மை செலவின முறையில் வருமானக்கூற்றில் அடங்கியுள்ளன.

### *3.2.1* ஊழியர் நன்மைகள்

#### *3.2.1.1* வரைவிலக்கணம் செய்யப்பட்ட பங்களிப்புத் – *EPF & ETF*

வரைவிலக்கணம் செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமானது தொழில்நிலைக்குப் பின்னைய நன்மைகள் திட்டமாகும். இதன் கீழ், நிறுவனமொன்று வேறுபட்ட நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பினை செலுத்துவதுடன், மேலும் தொகைகளை செலுத்துவதற்கு சட்ட ரீதியான அல்லது வேறேதும் வலுவான கடப்பாடுகளையும் கொண்டிருக்காது. வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்களின் பொருட்டான பங்களிப்பிற்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற பொழுது வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் அறிக்கையிடும் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக செலுத்தப்பட வேண்டியனவாகவுள்ளன. முற்கொடுப்பனவுப் பங்களிப்புக்கள், காசு மீளளிப்பு அல்லது கிடைக்கத்தக்கதாகவுள்ள எதிர்காலக் கொடுப்பனவுகளில் ஏற்படும் அளவிற்குச் சொத்தொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் காலம் முடிவடைந்த பின்னர் ஊழியர்கள் பணியாற்றிய 12 மாதங்களுக்கும் கூடுதலான மாதங்களுக்கு வரவேண்டிய வரைவிலக்கணம் செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்கள் அறிக்கையிடும் திகதியன்றுள்ள அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்டன.

மாதாந்த மொத்தச் சம்பளத்தில் 12 சதவீதத்தினைப் பங்களித்த வேளையில் ஊழியர்கள் 8 சதவீதத்தினை பங்களித்தனர். சேமலாப நிதியம் ஒப்புதலளிக்கப்பட்ட நிதியமாக விளங்குவதுடன் இது சுயாதீனமாக நிருவகிக்கப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனம் தவிர மாதாந்த மொத்தச் சம்பளத்தில் 3 சதவீதத்தினைப் பங்களிக்கின்றது.

#### *3.2.1.2* வரைவிலக்கணம் செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - பணிக்கொடைக்கான ஒதுக்கம்

நிறுவனத்திற்கு சொந்தமான பங்களிப்புச் செலுத்தப்படாத ஓய்வூதிய நன்மைகள் திட்டமொன்று நடைமுறையிலிருப்பதனால் பணி முடிவுறுத்தப்படுகின்ற ஊழியர்கள் 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க

பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் அவர் தொடர்ச்சியாக பணியாற்றிய ஒவ்வொரு ஆண்டிற்கும், குறிப்பிட்ட நிதியியல் ஆண்டின் இறுதி மாதத்திற்கு ஏற்புடைத்தானவிதத்தின் அடிப்படையில் ஏனைய அனைத்துப் படிகளுடன் சேர்த்துப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். 1996 சனவரி 1 இற்குப் பின்னர் வங்கியில் பணியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் வங்கியின் ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லையாகையால் அனைத்து ஊழியர்களுக்குமாக பணியின் முதலாம் ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக இந்நிதியியல் கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. “ஊழியர் நன்மைகள்” மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - ஞடுடுயுளு19இன் நியதிகளின்படி, வங்கியும் அதன் துணை நிறுவனங்களும் நியமத்தில் விதந்துரைக்கப்பட்ட ஆயுள் மதிப்பீட்டு முறையின் அடிப்படையில், தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் கடப்பாடுகள் கணிக்கப்பட்டுள்ளன. பணிக்கொடைப் பொறுப்புக்களுக்கு வெளியிலிருந்து நிதியளிக்கப்படமாட்டாது.

## 3.3 மூலதனப் பொறுப்புக்களும் இடைநேர் செலவுகளும்

கம்பனியின் சகல மூலப்பொருள் சார் மூலதனப் பொறுப்புக்களும் இடைநேர் பொறுப்புக்களும கணக்குகளுக்கான கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.4 பிற்போடப்பட்ட வருமானம்

### *3.4.1* மானியங்களும் உதவித் தொகைகளும்

முறையானவொரு அடிப்படையில் நஷ்டஈடு வழங்கப்படுதல் வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்ற ஆகுசெலவுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பொருந்தச் செய்வதற்கான அவசியமான காலப் பகுதிகள் நிமித்தம் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளன. நியாயப் பெறுமானத்தில் நிதி சாராத மானியங்கள் உள்ளிட்ட ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட மானியங்கள் ஐந்தொகைக் கணக்குகளில் பிற்போடப்பட்டு சம்பந்தப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள வாழ்க்கை வட்டம் தொடர்பில் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளன. வருமானத் தன்மையில் சம்பந்தப்பட்ட மானியங்கள் அந்த மானியங்கள் கிடைக்கப் பெற்ற காலப் பகுதியில வருமானக் கூற்றில் இனம் காணப்பட்டிருக்கின்றன.

## 3.5 முழுமையான வருமான அறிக்கை

நிதி வழங்கல் - இயக்குனர்கள் செலவுகள் முறை செயல்பாடு மிகவும் நிறுவனத்தின் செயல்திறன் கூறுகள், மற்றும் இத்தகைய வழங்கல் முறை டுமுயுளு 1 விதிகளை இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட அளிக்கிறது என்று கருத்து தொகுக்கப்பட்ட வருமான அறிக்கை வழங்கல் நோக்கத்திற்காக அறிக்கைகள்.

### *3.5.1* வருமான இனம்காணல்

பெருந்தோட்டக் கைத்தொழில் செயல்முறைக்கு இணங்க நீண்டகாலப் பயிர்கள் விற்பனை மீதான வருமானம மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஆகியன நிதி சார் காலப் பகுதியில் இனம் காணப் படுகின்றன. வருமானம் தரகுப் பணங்கள், விற்பனைசார் செலவுகள் மற்றும் ஏனைய வரிகள் கட்டணங்கள் போன்ற விற்பனை சார் செலவுகளின் தேறிய செலவ இடைப் பெறுமானத்தில் பதியப்படுகின்றன.

#### *3.5.1.1* பொருட்கள் விற்பனை

வசப்படுத்தும் ஆதாரம் உள்ளது போது பொருட்களை விற்பனை வருவாய் கணிசமான ஆபத்துக்கள மற்றும் உரிமை வெகுமதிகளை பொதுவாக பொருட்களின் விநியோகம், வாங்குபவர் மாற்றப்பட்டுள்ளனர் என்று, பொதுவாக ஒரு விற்பனை ஒப்பந்த வடிவத்தில், அங்கீகரிக்கப்பட்ட, கருத்தில் மீட்பு சாத்தியமான, தொடர்புடைய செலவுகள் மற்றும் பொருட்களை சாத்தியமான எல்லா பொருட்கள் எந்த தொடர்ந்து மேலாண்மை ஈடுபாடு உள்ளது, நம்பத்தகுந்த மதிப்பிடப்பட்டுள்ளது, மற்றும் வருவாய் அளவு நம்பத்தகுந்த அளவிட முடியும். வருவாய் விலைப்பட்டியல் மதிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

#### *3.5.1.2* வட்டி வருமானம்

வட்டி வீதமென்பது, நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (அல்லது பொருத்தமானவிடத்து, குறுங்காலமொன்று) எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலத்தினூடாக நிதியியல் சொத்து மற்றும் பொறுப்பில் கொண்டிருக்கும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகளை மீளச் சரியாக கழிவிடுகின்ற வருமானமாகும்.

### *3.5.1.3* அகற்றல்களின் ஆதாயம் நட்டம்

தேய்மானமானது சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் நுகர்வு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட மாதிரித் தன்மைகளை நெருக்கமாகப் பிரதிபலிப்பதன் காரணமாக, அருவச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுள் காலத்தின் தேய்மானமானது நேர்கோட்டு அடிப்படையில், அது பயன்பாட்டிற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த திகதியிலிருந்து வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### *3.5.2* செலவின அங்கீகரிப்பு

### *3.5.2.1* செயற்பாட்டு செலவினம்

வணிக நடவடிக்கைகளின் ஒரு நாள் மற்றும் திறன் நிலையில் சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்கான ஏற்படக்கூடிய அனைத்து செலவுகள் ஆண்டு லாபம் / (இழப்பு) வந்து இல் விரிவான வருமான அறிக்கை மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நிபந்தனை அல்லாத நிதி சொத்துக்கள், மெதுவாக நகரும் பங்குகள் ழளநசபசழறெ, நாற்று மேடைகள் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகள் மற்றும சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் தேய்மானம் வலுக்குறை செய்யப்பட்ட வருகிறது.

### *3.5.2.2* நிதிச் செலவு

தொழிற்பாட்டுக் குத்தகைகளின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்திற்கான நேர்கோட்டு அடிப்படையின் மீது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. பெறப்பட்ட குத்தகை ஊக்குவிப்புக்கள் குத்தகைக் காலத்திற்குரிய மொத்த குத்தகைச் செலவில் முக்கியமானதொரு பாகமாக

### *3.5.2.3* வரிச் செலவுகள்

வருமான வரி செலவு தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை கொண்டிருக்கிறது. வருமான வரிச் செலவுகள் கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடுதல் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, தொடர்பான வரி நன்மைகள் ஈட்டப்படக்கூடியதாக இருக்கும் சாத்தியமுள்ள காலப்பகுதி குறைக்கப்படுகிறது.

### *3.5.2.3.1* 1 நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட காலத்திற்கான நடைமுறை வரிச் செலவுகள் இறைவரித் திணைகளத்தின் ஆணையாளருக்கு வரிவிதிப்புக்குரிய வருமானங்களுக்காக செலுத்தப்படும். இது இறைவரித்திணைக்களத்தின் முன்னேற்பாடுகள் 2066 சட்ட இல 10 குறித்த திகதியில் செலுத்தப்படும்.

### *3.5.2.3.2* பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி என்பது உரிமை மூலதனம் அல்லது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான அளவு நீங்கலாக வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரி என்பது நிதியியல் அறிக்கையிடல் நோக்கத்திற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டிருக்கும் தொகைக்கும் வரி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும்.

பிற்போடப்பட்ட வரி பின்வரும் தற்காலிக வேறுபாடுகளுக்காக அங்கீகரிக்கப்படவில்லை. நன்மதிப்பின் ஆரம்ப அங்கீரித்தல், வியாபார இணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கலிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகரிப்பாகும்.

பிற்போடப்பட்ட வரியானது தற்காலிக வேறுபாடுகள் மாற்றமடைகின்ற போது பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதங்களில் இயற்றப்பட்டிருக்கின்ற அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதியில் இயற்றப்பட எதிர்பார்க்கின்ற சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நடப்பு வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடப்பு வரிப் பொறுப்புக்களை எதிரீடு செய்வதனை மேற்கொள்ளத்தக்க சட்ட ரீதியான உரிமை இருக்குமிடத்து பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் அதே வரி விதிக்கத்தக்க நிறுவனத்தின் மீது அதே வரி அதிகாரசபையினால் விதிக்கப்படும் வருமான வரிகள் அல்லது வேறுபட்ட வரி நிறுவனங்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களையும் சொத்துக்களையும் தேறிய அடிப்படையில் அல்லது அவற்றின் வரிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்ப்பனவு செய்ய விரும்புமிடத்து அவை சமகாலத்தில் ஈட்டிக் கொள்ளப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாத வரி இழப்புக்கள், வரி வரவுகள் மற்றும் எதிர்கால வரி விதிக்கத்தக்க

இலாபங்கள் அவைகள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கெதிராக இருக்கும் என்ற சாத்தியங்களின் அளவிற்கு கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடுதல் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, தொடர்பான வரி நன்மைகள் ஈட்டப்படக்கூடியதாக இருக்கும் சாத்தியமுள்ள காலப்பகுதி குறைக்கப்படுகிறது.

இதனுடன் தொடர்புடைய குறிக்குகளை நிதிக்கூற்றின் 28 மற்றும் 09 இல் காணலாம்.

## 3.6 காசுப்பாய்ச்சல் கூற்று

ஒன்று திரட்டப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - 07 இற்கு இணங்க “நேரடியற்ற முறைகளைப்” பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கின்றவிடத்து இலாபம், தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் சீராக்கப்பட்டது. காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் காசு மற்றும் வங்கிகளிலிருந்து வரவேண்டிய/ வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

## 3.8 பங்கொன்றிற்கான வருவாய்

பங்கொன்றிற்கான வருவாய் அடிப்படை குறிப்பிட்ட காலத்தில் வெளிநிற்கும் சாதாரண பங்குகளின் சராசரி நிறையேற்றப்பட்ட எண்ணிக்கையினால் சாதாரண பங்குடமையாளர்களுக்குச் சேர வேண்டிய இலாபத்தினை அல்லது நட்டத்தினை வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. குறைக்கப்பட்ட பங்கொன்றிற்கான வருவாய் சாதாரண பங்குடமையாளர்களுக்குச் சேர வேண்டிய இலாபம் அல்லது நட்டத்தினாலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விருப்பத்தேர்வுப் பங்குகளை உள்ளடக்கிய அனைத்து குறைக்கப்பட்ட சாத்தியமான சாதாரண பங்குகளுக்கும் பெறுமதியினை வழங்குவதற்காக வெளிநின்ற சாதாரண பங்குகளின் சராசரி நிறையேற்றப்பட்ட எண்ணிக்கையினாலும் சீராக்கியதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

## 3.9 ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் எழும் சம்பவங்கள்

ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் எழும் சகல கருப்பொருள்களும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது என்பதுடன் தேவையானவிடத்து அவற்றுக்கான சீராக்கல்களை அல்லது வெளிப் படுத்துகைகளை மேற் கொள்ளுவதற்கு நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|---|
| **4** | **வருமானம்** | | |
| | தேங்காய் (குறிப்பு 4.1) | **514,176,778** | 402,365,395 |
| | இறப்பர் | **39,698,357** | 62,405,810 |
| | இரம்பட்டான் | **4,209,286** | 3,072,425 |
| | மிளகு | **3,189,240** | 1,499,150 |
| | மரமுந்திரிகை | **4,330,443** | 1,018,656 |
| | கறுவா | **376,950** | 871,474 |
| | தழை மற்றும் அலங்கார செடிகள் | **4,558,466** | - |
| | ஏனையவை (குறிப்பு 4.2) | **6,251,254** | 4,657,265 |
| | | **576,790,774** | 475,890,175 |

| | | | |
|---|---|---|---|
| **4.1** | **தேங்காய் வருமானம்** | | |
| | பச்சை கொட்டைகள | **444,456,824** | 342,821,037 |
| | விதை கொட்டைகள | **41,655,519** | 48,465,111 |
| | எண்ணெய் வருவாய் | **23,330,346** | 11,061,380 |
| | கொப்பரை தேங்காய் | **4,734,089** | 17,867 |
| | | **514,176,778** | 402,365,395 |

**4.2 ஏனைய வருமானம**

மேலே ஏனைய எனக்குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், துணை பயிர்களான மாங்காய், மனியோர், கொய்யா, மற்றும் பண்ணை வருமானங்கள் மூலம் திரட்டப்பட்டதாகும்.

**5 விற்பனை செலவினம்**

| | | | |
|---|---|---|---|
| | தேங்காய் | **266,963,038** | 213,015,395 |
| | இறப்பர் | **42,054,702** | 48,417,543 |
| | இரம்புட்டான் | **1,155,416** | 668,693 |
| | மிளகு | **427,462** | 387,097 |
| | மரமுந்திரிகை | **1,846,843** | 961,129 |
| | கறுவா | **151,673** | 573,612 |
| | தழை மற்றும் அலங்கார செடிகள் | **8,658,404** | - |
| | ஏனையவை | **4,733,141** | 4,773,349 |
| | | **325,990,679** | 268,796,818 |

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |

## 6 ஏனைய செயற்பாட்டு வருமானம்

| | | |
|---|---|---|
| தென்னை மரங்கள் விற்பனை | **29,081,400** | 12,622,984 |
| இறப்பர் மரங்களின் விற்பனை | **8,778,518** | 5,631,860 |
| விற்பனை குறைவில் ஏற்படும் நியாயப் பெறுமதியின் மாற்றங்களின் அதிகரிப்பு/(குறைவு) - நுகர்வோர் உயிரியில் சொத்துக்கள் | **20,317,541** | 34,328,150 |
| தேங்காய் மட்டைகளின் விற்பனை | **25,190,659** | 22,000,033 |
| அபராத கட்டணம் - தேங்காய் | **7,286,474** | 5,018,553 |
| குத்தகை உதவிக்கட்டண வருமானம் | **3,168,662** | 4,588,872 |
| PPE விற்பனை மூலம் வருமானம்/ (இழப்பு) | **1,209,025** | (74,868) |
| மீண்டும் எழுதல் | **1,424,089** | 1,834,728 |
| டிரெக்டர் பிரிவு இலாபம்/ (நட்டம்) (குறிப்பு 6.1) | **-** | 262,342 |
| ஏனைய வகை வருமானங்கள் | **6,573,372** | 9,614,431 |
| | **103,029,740** | 95,827,085 |

## 6.1 டிரெக்டர் பிரிவு இலாபம்/ (நட்டம்)

டிரெக்டர் பிரிவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட செயற்திறன் கொடுப்பனவு ரூ. 630,512 (ரூ. 471,747 – 2012) மற்றும் மிகைவூதியக் கொடுப்பனவு ரூ. 84,075 (ரூ. 67,500 – 2012) ஆகிய கொடுப்பனவுகள் நிர்வாக மற்றும் பொதுச் செலவினங்களின் கீழ் குறிப்பு இல 7 குறிப்பிடப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளன

## 7 நிர்வாக மற்றும் பொதுச் செலவினம்

| | | |
|---|---|---|
| பேரோல் தொடர்புடைய செலவினம் | **79,439,748** | 67,216,624 |
| பராமரிப்பு மற்றும் திருத்தம் | **14,153,358** | 12,493,403 |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | **37,557,077** | 29,540,652 |
| | **131,150,183** | 109,250,679 |

| | | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து இலாபம்** | | |
| கீழுள்ளவை அறவிடப்பட்ட பின்னர் பதியப்பட்டவை | | |
| | | |
| பணிப்பாளர் வேதனம் | **4,047,756** | 4,210,036 |
| கணக்காய்வாளர் கட்டணம் | **635,000** | 590,000 |
| செயற்திறன் ஊக்கத்தொகை | **28,779,734** | 27,429,989 |
| மிகைவூதியம் | **12,319,147** | 8,614,940 |
| நன்கொடைகள் | **4,564,825** | 1,993,996 |
| PPE செலவின மாற்றம் தொடர்பில் இழப்பு- | | |
| வெற்றுக் காணிகளில் குத்தகை உரிமம் | **3,169,953** | 3,169,953 |
| நகரா குத்தகை சொத்துக்கள் (வெற்றுக்காணி தவிர்ந்த | **4,841,976** | 4,841,979 |
| முதிர்வு தோட்டங்கள் | **9,205,466** | 8,228,002 |
| ஆதனம், சொத்து மற்றும் உபகரணங்கள் | **33,716,104** | 22,393,615 |
| தனிப்பட்ட செலவினம | | |
| சம்பளம், ஊதியம், PAYE, EPF & ETF | **229,054,334** | 206,683,002 |
| அனுகூலத்திட்ட செலவினம் - ஓய்வூதிய பணிக்கொடை | **24,114,591** | 23,593,586 |

| | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|

## 8 நிகர நிதி வருமானம்/ (செலவினம்)

### 8.1 வட்டி வருமானம்

| | 2014 | 2013 |
|---|---|---|
| நிலையான வைப்புகளில் வட்டி | **28,878,489** | 41,252,290 |
| ரெப்போ வட்டி (குறிப்பு 08.1.1) | **748,532** | 1,445,447 |
| ஊழியர் கடன்களிலிருந்தான வட்டி | **552,332** | 473,271 |
| முற்கொடுப்பனவு ஊழியர் அனுகூலம் | **1,162,966** | 1,165,986 |
| | **31,342,319** | 44,336,994 |

### 8.2 வட்டி செலவினம்

| | 2014 | 2013 |
|---|---|---|
| குத்தகை மீதான வட்டி - JEDB | **24,844,072** | 22,742,587 |
| தற்காலிக வங்கி கடன்களுக்கான வட்டி | **-** | 469,199 |
| ஊழியர் செலவினக் கழிவு | **1,162,966** | 1,165,986 |
| | **26,007,038** | 24,377,772 |

| | 2014 | 2013 |
|---|---|---|
| நிகர நிதி வருமானம் | **5,335,281** | 19,959,222 |

### 8.1.1 அரசாங்க பிணைகள் மற்றும் இரண்டாம்தர சந்தை பரிமாற்றங்கள் மீதான பிடித்துவைத்தல் வரிக் கடன்

திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து உழைக்கப்பட்ட தேறிய வட்டி வருமானம், வட்டி வருமானத்திற்கான

தேசிய வரி வரவுகளுடன் மொத்தமாகச் சேர்க்கப்பட்டது. மேலதிக விபரங்கள் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |

## 9 வரிச் செலவினங்கள்

### 9.1 நடைமுறை வரிகள்

அரசியல் சட்டத்திருத்தம் திருத்தப்பட்ட உள்நாட்டு இறைவரி சட்டம் 2006 10 பிரிவு 48 (ஏ) அடிப்படையில் நிறுவனம் 2011 எண் 22 சட்டம், விவசாய காரியம் இலாபத்தை மற்றும் வருமானம் உள்நாட்டு இறைவரி பிரிவில் 16 குறிப்பிடப்படுகிறது சட்டம் இந்த சட்டத்தின் முதல் அட்டவணைப்படி 10% என்ற விகிதத்தில் பொறுப்பு உள்ளது. பிற இலாபம் சாதாரண விகிதத்தில் பொறுப்பாக உள்ளன.

| | | |
|---|---|---|
| நடைமுறை வருமானவரி செலவினம் (குறிப்பு 9.2) | **4,400,495** | 1,146,157 |
| முந்தய வருட ஏற்பாடு | **-** | (430,205) |
| பின்தங்கிய வரி செலவுகள் | **9,376,416** | 4,767,095 |
| | **13,776,911** | 5,483,047 |

### 9.2 வரிச்செலவினத்திற்கும் கணக்கியல் வருமானத்திற்கும்

**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | | |
|---|---|---|
| வருமான அறிக்கையின் அடிப்படையிலான வரிக்கு முந்திய இலாபம் | **228,014,933** | 213,628,982 |
| ஏனைய வழிகளிலிருந்தான வருமானம் மற்றும் சம்பாத்தயம் | **(76,393,750)** | (77,424,290) |
| | **151,621,183** | 136,204,692 |
| அனுமதிக்க முடியாத செலவுகள் | **81,892,433** | 66,810,551 |
| அனுமதிக்கக்கூடிய செலவுகள் | **(152,967,150)** | (176,237,586) |
| வர்த்தகத்தில இருந்து சீராக்கப்பட்ட இலாபம் | **80,546,466** | 26,777,657 |
| | | |
| ஏனைய வழிகளிலிருந்தான வருமானம் | **30,179,353** | 43,171,008 |
| மொத்த இடை வருமானம் | **110,725,819** | 69,948,665 |
| நிர்ணயம் பெறும் கொடுப்பனவுகள் | **(66,720,873)** | (58,487,095) |
| வரிவிதிப்புக்குரிய வருமானம் | **44,004,947** | 11,461,570 |
| | | |
| விவசாய செயற்பாடுகளில் வரி 10% | **4,400,495** | 1,146,157 |
| ஏனைய வருமானங்களில் வரி 28% | **-** | - |
| | | |
| ஆண்டிற்கான இலாபத்தில் வருமான வரி | **4,400,495** | 1,146,157 |

| | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|

### 9.3 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியானது தற்காலிக வேறுபாடுகள் மாற்றமடைகின்ற போது பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதங்களில் இயற்றப்பட்டிருக்கின்ற அல்லது அறிக்கையிடப்படுகின்ற திகதியில் இயற்றப்பட எதிர்பார்க்கின்ற சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நடப்பு வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடப்பு வரிப் பொறுப்புக்களை எதிரீடு செய்வதனை மேற்கொள்ளத்தக்க சட்ட ரீதியான உரிமை இருக்குமிடத்து பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப் படுவதுடன் அதே வரி விதிக்கத்தக்க நிறுவனத்தின் மீது அதே வரி அதிகாரசபையினால் விதிக்கப்படும்

**பிற்போடப்பட்ட வரி செலவினம் /வருமானம் ஊற்பாடுகள்**

| | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|
| காணி அபிவிருத்தி செலவினம் | **(2,046,489)** | (2,414,803) |
| கட்டிடம் | **(7,315,012)** | (8,407,163) |
| உபகரணங்கள் | **8,500** | 155,787 |
| முதிர்வுத் தோட்டங்கள் | **(23,415)** | 5,899,084 |
| | **(9,376,416)** | (4,767,095) |

## 10 ஒரு பங்கிற்கான சம்பாத்தியம்

பங்கொன்றிற்கான வருவாய் அடிப்படை குறிப்பிட்ட காலத்தில் வெளிநிற்கும் சாதாரண பங்குகளின் சராசரி நிறையேற்றப்பட்ட எண்ணிக்கையினால் சாதாரண பங்குடமையாளர்களுக்குச் சேர வேண்டிய இலாபத்தினை அல்லது நட்டத்தினை வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. குறைக்கப்பட்ட பங்கொன்றிற்கான வருவாய் சாதாரண பங்குடமையாளர்களுக்குச் சேர வேண்டிய இலாபம் அல்லது நட்டத்தினாலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விருப்பத்தேர்வுப் பங்குகளை உள்ளடக்கிய அனைத்து குறைக்கப்பட்ட சாத்தியமான சாதாரண பங்குகளுக்கும் பெறுமதியினை வழங்குவதற்காக வெளிநின்ற சாதாரண பங்குகளின் சராசரி நிறையேற்றப்பட்ட எண்ணிக்கையினாலும் சீராக்கியதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

### 10.1 ஒரு சாதாரண பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்

| | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|
| சாதாரண பங்குச் சொந்தக்காரர்களுக்கான தேறிய இலாபம் | **214,238,022** | 208,145,938 |
| உபகரணங்கள் | **20,000,001** | 20,000,001 |
| சாதாரண பங்குச் சொந்தக்காரர்களுக்கான தேறிய இலாபம் | **10.71** | 10.41 |

### 10.2 முதிர்வற்ற தோட்டங்கள்

சிறந்த சாத்தியமுள்ள தவறென்று சாதாரண பங்குகள் 2013 டிசம்பர் 31 ம் தேதியுடன் முடிவடைந்த. எனவே, பங்கு வருவாய் பங்கு அடிப்படை வருவாய் மேலே தரப்பட்டுள்ளது

## 11 தரிசு நிலத்தில் ஊத்தகை உரிமம்

**11.1** சகல தோட்டங்களினதும் காணிகளுக்கான குத்தகை ஆதன உரிமைகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அவசர விடயங்கள் சிறப்புப்பணிச் செயலணியிடமிருந்து (அவிசிசெ) பெறப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் கம்பனியின் உருவாக்கத்தின் உடனகத்துப் பின்னர், 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதிக்கு கம்பனியின் புத்தகங்களுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நோக்கத்தின் நிமித்தம், 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி பொறுப்பேற்ற தனது கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபை கம்பனியின் உருவாக்கத்திற்குச் சற்று முன்னர் திரு டீ.ஆர். விக்ரமசிங்க என்ற விலைமதிப்பீட்டு நிபுணரினால் இந்தக் காணிகளுக்காகத் ஸ்தாபிக்கப்பட்ட பெறுமானங்களில் இந்தக் காணிகள் மீள்மதிப்பிடப்படுதல் வேண்டும் எனத் தீர்மானித்தது. இவ்வாறு மீளமதிப்பிடப்பட்ட தொகை 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதிக்கு ஐந்தொகைக் கணக்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஐந்தொகைக் கணக்குக்குக் கொண்டு வரப்பட்ட தொகை ரூபா. 189,234,932 எனக் காணப்பட்டது பட்டது. முன்கொணரப்பட்ட பெறுமானங்கள் கீழ்ே தரப்பட்டிருக்கின்றன.

**11.2** மதோஅச இந்த தோட்டங்களில் சகல 13 தோட்டங்களையும் கம்பணிக்கு ஒப்படைத்த் போதிலும் 05 தோட்டங்களுக்கான குத்தகைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சிய 08 தோட்டங்களுக்கான குத்தகைகள் நிறைவேற்றப்படவுள்ளன. இந்த குத்தகைகள் கம்பனியின் உருவாக்கத் திகதி அதாவது 1992 ம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி பின்னோக்கி செயல்வலுப் பெற்றிருக்கும் குத்தகைகளாகும். குத்தகைகள் நிறைவேற்றப்படாத சகல ஆதனங்கள் தொடர்பிலும் கம்பனி சபையுடன் புரிந்துண்வு பதிவொன்றுக்கு உள்ளாகியுள்ளத.

### 11.3 முதிர்வுத் தோட்டங்கள்

| | 01.01.2014 ல் உள்ளவாறான செலவு மிகுதி ரூ. | 01.01.2014 இல் உள்ளவாறான திரண்ட தேய்மானம் ரூ. | ஆண்டிற்கான தேய்மானம் ரூ. | 31.12.2014 இல் உள்ளவாறான திரண்ட தேய்மானம் ரூ. | **31.12.2014 பெறுமதி குறைப்பு ரூ.** | **31.12.2013 பெறுமதி குறைப்பு ரூ.** |
|---|---|---|---|---|---|---|
